# திட்டம்

## மாத இதழ்

மலர் 50
இதழ் 2

அக்டோபர் 2017
அஸ்வின - கார்த்திகா 1939



முதன்மை ஆசிரியர்

**தீபிகா கச்சல்**

முதுநிலை ஆசிரியர்

**ஆ.இளங்கோவன்**


**கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.**

**திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.**

### சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |


**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**

**துணை இயக்குநர்**

**திட்டம்**

**சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை**

**சென்னை -600 006.**

**தொலைபேசி : 2827 2382**



- தூய்மையான இந்தியாவை உருவாக்குதல்
  - பரமேஸ்வரன் அய்யர்
- வறுமை இல்லாத தேசத்தை உருவாக்குதல்
  - அமர்ஜீத் சின்ஹா
- சாதிகள் இல்லாத இந்தியா
  - அமர்ஜித் எஸ்.நரங்
- புதிய இந்தியாவிற்கான புதுவகை வேளாண்மை விவசாயிகளின் நலன்களே திறவுகோல்
  - டாக்டர் ஜெகதீப்சக்சேனா
- மாற்றத்தைக் கொண்டு வருவதில் முதன்மையானவராக இருங்கள்
  - டாக்டர். உன்னத் பண்டிட்
- முத்தலாக் தீர்ப்பு: முஸ்லிம் பெண்களுக்கான வெற்றி
  - ஆர்.கே.சின்ஹா
- இலஞ்சத்திற்கு எதிரான இந்தியாவின் போர்
  - ஏ. ஸ்ரீநிவாஸ்
- புதிய இந்தியாவில் திறன் மற்றும் தொழில் முனைவு மேம்பாடு
  - Dr. அமித்குமார் துவேதி, சரவணன் வேலுசாமி
- புதிய மத்திய அமைச்சரவை
- புல்லட் இரயில் பயணம் இந்தியாவில் தொடங்குகிறது



Log on to **http://publicationsdivision.nic.in/**
*in collaboration with* **bharatkosh.gov.in**

# தூய்மையான இந்தியாவை உருவாக்குதல்

- பரமேஸ்வரன் அய்யர்

செங்கோட்டையில் பாதுகாப்பு அரண்கள் சூழ மதிப்பிற்குரிய பிரதம மந்திரி ஆகஸ்ட் 15, 2014 அன்று தேசத்துக்கு பெரும் முழக்கத்தோடு ஒரு அழைப்பை விடுத்தார். குப்பை மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் ஆகியவற்றுக்கு எதிராகப் போராட இந்த அழைப்பை அவர் விடுத்தார். மகாத்மா காந்தி கனவு கண்ட திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் அறவே இல்லாத தூய்மையான இந்தியாவை அவரின் 150ஆவது பிறந்தநாளில் அதாவது அக்டோபர் 12, 2019இல் அடைய வேண்டும் என்ற இலக்கோடு இந்த முழக்கம் முன் வைக்கப்பட்டது.

உலகில் உள்ள நாடுகளின் ஆட்சித் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களில் ஒருவர் சுத்தம் மற்றும் சுத்திகரிப்புக்கான குறிக்கோளுடனும் துணிவுடனும் வெளியிட்ட முழக்கமாக இது பார்க்கப்படுகிறது. துப்புரவு குறித்து மறைமுகமாகப் பேசியதை நிறுத்திவிட்டு அதனை தேசியக் கொள்கை மற்றும் வளர்ச்சியில் முன்னணி பேசுபொருளாக உயர்மட்டக் குழுவினர் தற்போது மாற்றி உள்ளனர். காலம் காலமாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தால் ஒவ்வொரு ஆண்டும் வயிற்றுப் போக்கு மற்றும் நோய்த்தொற்று ஏற்பட்டு ஒரு இலட்சம் குழந்தைகள் மரணம் அடைகின்றனர். இந்த மரண விகிதத்தை நம்மால் தடுக்க முடியும். உலக வங்கியின் ஒரு கணக்கீட்டின்படி இந்தியாவில் உள்ள குழந்தைகளில் 40 சதவிகிதம் குழந்தைகள் வளர்ச்சி இன்றி குள்ளமாக உள்ளனர். இதற்கு சுத்திகரிப்பு பற்றாக்குறையே முதன்மையான காரணம் ஆகும். இது அவர்களுடைய எதிர்காலப் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் இது நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி) 6 சதவிகிதத்துக்கும் மேல் செலவு வைக்கக் கூடியதாக உள்ளது. திறந்த வெளியில் மலம் கழிப்பதால் பெண்களின் பாதுகாப்பும் மானமும் ஆபத்துக்குள்ளாகின்றது. இது குறித்து சாதகமான முறையில் செயலாற்ற வேண்டிய தேவையை நமது பிரதம மந்திரி உணர்ந்துள்ளார். ஒரு போராட்ட இயக்கத்தின் முனைப்போடும் காலக்கெடுவுடனும் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினையாக இது உள்ளது. சர்வதேச பொருளாதாரத்தில் வல்லரசாக 21ஆம் நூற்றாண்டு இந்தியா உருவாகி வரும் சூழலில் குப்பைக்கும் திறந்தவெளியில் மலம் கழிப்பதற்கும் இடமே இல்லை. சுத்திகரிப்புக்கும் தூய்மைக்கும் தனது அரசியல் வலிமையைப் பயன்படுத்த பிரதம மந்திரி முடிவெடுத்துள்ளார். மேலும் இதை ஒரு தேசிய முன்னுரிமை அம்சமாக மாற்றவும் செய்துள்ளார்.

## தூய்மை இந்தியா இயக்கத்தின் முன்னேற்றம் (எஸ்.பி.எம்)

தூய்மை இந்தியா இயக்கம் தொடங்கி மூன்று ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இந்த இயக்கத்தின் முன்னேற்றம் என்பது சிறப்பாகத்தான் உள்ளது. சில மாநிலங்கள் மற்ற மாநிலங்களைவிட சிறப்பான முறையில் முன்னேற்றம் அடைந்துள்ளன. இந்த இயக்கத்தைத் தொடங்கும் போது ஊரகப் பகுதிகளில் சுத்திகரிப்பு என்பது 39 சதவிகிதமாக மட்டுமே இருந்தது. தற்போது அது 68 சதவிகிதம் என்ற நிலையை அடைந்துள்ளது. ஊரக இந்தியாவில் 230 மில்லியன் மக்களுக்கும் அதிகமான நபர்கள் திறந்த வெளியில் மலம் கழிப்பதை நிறுத்திவிட்டனர். நாட்டில் திறந்த வெளியில் மலம் கழிக்காத (ஓ.டி.எஃப்) மாவட்டங்கள் மற்றும் ஊர்கள் என 193 மாவட்டங்களும் 235,000 கிராமங்களும் அறிவிக்கப்பட்டு உள்ளன. அதே போன்று சிக்கிம், இமாச்சல பிரதேசம், கேரளா, அரியானா மற்றும் உத்தரகண்ட் ஆகிய ஐந்து மாநிலங்களும் திறந்த வெளியில் மலம் கழிக்காத மாநிலங்களாக அறிவிக்கப்பட்டு உள்ளன. அதிலும் குறிப்பிடத்தக்க சாதனை என்னவென்றால் புனிதமான கங்கை நதிக்கரையில் உள்ள 4,000க்கும் அதிகமான

கிராமங்கள் திறந்த வெளியில் மலம் கழிக்காத கிராமங்களாக மாறி உள்ள நிலைமையே ஆகும்.

## தூய்மை இந்தியா இயக்கம் எந்த வகையில் தனித்துவம் உடையது

தூய்மை இந்தியா இயக்கம் என்பது உலக அளவில் தனித்துவம் மிக்க ஒரு திட்டமாகும். உலகில் வேறெந்த சுத்திகரிப்பு திட்டத்திலும் இல்லாத அளவிற்கு கவனம் கொள்ள வேண்டிய அம்சங்களும் நிறைவேற்ற வேண்டிய நிலைகளும் இதில் வித்தியாசமாக உள்ளன. ஊரக இந்தியாவின் 500 மில்லியன் மக்களையும் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தில் இருந்து விடுவிப்பது என்பது வேறு எந்த நாட்டிலும் இல்லாத சவாலாகும். அதேபோன்று இந்த இலக்கை அடைவதில் மிகப் பெரிய சிரமங்களும் உள்ளன. சாலைகள், பாலங்கள், மின்உற்பத்தி ஆலைகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது ஒரு பக்கம் என்றால் பல நூற்றாண்டுகளாகத் தொடரும் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்துக்கு எதிராக இலட்சக்கணக்கான மக்களை தன்னார்வமாக ஜன்அந்தோலனில் பங்கேற்கச் செய்வது என்பது மற்றொரு பக்கமாகும். தூய்மை இந்தியா இயக்கம் என்பது மக்கள் மனதில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பானதாகும்; இது உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது போன்றது அன்று. இந்த அம்சம்தான் தூய்மை இந்தியா இயக்கத்தை முன்பிருந்த சுத்திகரிப்புத் திட்டங்களில் இருந்து குறிப்பிடத்தக்க அம்சங்களில் வேறுபடுத்திக் காட்டுவதாகும்.

முதலாவது முக்கியமான வித்தியாசம் என்னவென்றால் தகவல்கல்விதொடர்பியல் (ஐ.இ.சி) மூலமாக மக்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் ஆகும். எண்ணிக்கையில் இருந்து (கட்டித்தரப்பட்ட கழிவறைகளின் எண்ணிக்கை) அதனால் கிடைக்கக் கூடிய விளைவுகளுக்கு (ஐ.டி.எஃப் கிராமங்கள்) முக்கியத்துவம் தருகின்ற மாற்றமும் குறிப்பிடத்தக்கதாகும். ஒட்டுமொத்த செயல்முறையின் மையமாக சமுதாயமே உள்ளது. சமுதாயத்தினரே தூய்மைப் புரட்சியை முன்னெடுத்துச் செல்கின்றனர். குழந்தைகள், பெண்கள், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் தூய்மைச் செயலை முன்னெடுத்துக் செல்லும் தலைவர்காளக உருவாகி உள்ளனர். அவர்கள் தங்களது சமுதாயத்தினரை நெருங்கி வரச் செய்து ஒன்றிணைந்து திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்துக்கு எதிராகப் போராடச் செய்கின்றனர். சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி 6,000 பெண் துப்புரவுத் தொழிலாளிகளுக்காக மட்டும் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய பிரதம மந்திரி திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்துக்கு எதிராகப் போராடும் 10 ஊக்கமளிக்கும் பெண்களுக்கு விருதுகளை வழங்கினார்.



ஸ்வச்ச கிரஹிகள் என்று அழைக்கப்படும் இலட்சக்கணக்கான தூய்மை ஊக்குவிப்பாளர்களுக்கு சமுதாய நோக்கில் துப்புரவை அணுகுவது எப்படி எனப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சியை மேல்நிலைக்கு எடுத்துச் செல்ல மெய்நிகர் வகுப்பறைகளை குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சம் (எம்.டி.டபிள்யூ.எஸ்) நடத்தி வருகிறது. சமுதாய மக்கள் திரம்பட பங்கேற்பதை ஊக்கப்படுத்தும் வகையிலும் நடத்தை மாற்றத்தைத் தூண்டும் வகையிலும் மையப் பயிற்சியாளர்கள் பயிற்சி பெறுபவர்களுடன் ஒரே நேரத்தில் பல இடங்களில் அதற்கான உபகரணங்களை கொண்டு பயிற்சி அளிக்கிறார்கள். கிராம அளவில் ஊக்கத்தொகை என்ற அடிப்படையில் அவர்கள் வேலை செய்கின்றனர். துப்புரவின் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளிப்பதும் சமுதாய அளவில் கழிவறைகளுக்கான தேவைகள் வேண்டும் என்ற விழைவைத் தூண்டிவிட்டு நடத்தை மாற்றத்துக்கு முயற்சிப்பதும் நடக்கின்றது. தற்போது நாடு முழுவதும் 150,000 ஸ்வச்ச கிரகிகள் உள்ளனர். இந்த எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றது. இந்தியாவில் ஒரு கிராமத்திற்கு குறைந்தது ஒரு ஸ்வச்ச கிரகியாவது இருக்க வேண்டும் என்பது தூய்மை இந்தியா இயக்கத்தின் குறிக்கோளாகும்.

உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கிராமங்களில் பணிபுரியும் நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இளைஞர் அமைப்புகள், பள்ளி மாணவர்கள், பெருநிறுவனங்கள், சிவில் சமுதாய அமைப்புகள் ஆகியவற்றை ஈடுபடுத்தி தூய்மை இந்தியா இயக்கத்தை மக்கள் இயக்கமாக (ஜன்அந்தோலன்) மாற்ற குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகமும் மாநிலங்களும் முயற்சி செய்து வருகின்றன. துப்புரவு குறித்த விளம்பரத் தகவலை மீண்டும் மீண்டும் மனதில் பதிய வைக்க அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பாலிவுட் திரை உலக நட்சத்திரங்களும் கிரிக்கெட் வீரர்களும் இந்த இயக்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன் ''தர்வாசா பந்த்'' (திறந்த வெளியில் மலம் கழிப்பது பற்றியது) என்ற பிரச்சாரத்தை நாடு முழுவதும் தொலைக்காட்சி, வானொலி மற்றும் வெளியிட விளம்பரப் பலகைகள் மூலம் மேற்கொண்டு வருகின்றார். திறந்த வெளியில் மலம் கழித்தல் மற்றும் கழிப்பறை என்ற கருப்பொருளில் அக்ஷய் குமார் ''ஏக் பிரேம் கதா'' என்ற வசூலை அள்ளித்தந்த பாலிவுட் திரைப்படத்தை திரையிட்டுள்ளார். இந்தப் படம் அந்த ஆண்டின் மிகப்பெரும் வசூல் படமாக அமைந்தது.

கிராம சபையில் ஒரு கிராமம் தனக்குத்தானே திறந்த வெளியில் மலம் கழிக்காத கிராமம் என அறிவித்துக் கொண்டால், பரிசீலனை செய்து அந்த அறிவிப்பை ஏற்றுக் கொள்வது முக்கியமானதாகின்றது. தற்போது ஓ.டி.எஃப் கிராமங்களைப் பரிசீலனை செய்வது சுமார் 60 சதவிகிதமாக உள்ளது ஆனால் சில மாதங்களுக்கு முன்பு இது 25 சதவிகிதம் என்ற அளவில் மட்டுமே இருந்தது. ஒரு கிராமத்தின் ஓ.டி.எஃப் தகுதிநிலை பற்றிய சுய அறிவிப்பை மூன்றாம் தரப்பு பரிசீலனை செய்து பார்க்க 90 நாட்கள் காத்திருப்பு காலம் என தூய்மை இந்தியா இயக்கம் - கிராமம் வழிகாட்டு நெறிமுறைகள் எடுத்துச் சொல்கின்றன. பரிசீலனை காலகட்டத்தில் தவறுகள் ஏதேனும் இருந்தால் உடனடியாக அவை கண்டறியப்பட்டு கிராம சமுதாயத்தினர் அதனைத் தீர்க்க முயல்வார்கள். ஓ.டி.எஃப் தகுதிநிலையை காலத்தே பரிசீலிப்பதற்குத் தரப்படும் முக்கியத்துவமே தூய்மை இந்தியா இயக்கத்துக்கும் இதற்கு முன் இருந்த திட்டங்களுக்கும் இடையிலான மிகப்பெரிய வித்தியாசம் ஆகும்.

மாவட்ட மற்றும் மாநில அளவில் பரிசீலனை செய்யும் நியாயமான முறையும் இந்தத் திட்டத்தில் உள்ளது. தேசிய அளவில் குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம் தனிப்பட பரிசீலனைகள் மேற்கொள்கிறது. மேலும் தனித்து செயல்படும் நிறுவனங்கள் மூலமாக மூன்றாம் தரப்பு மாதிரி ஆய்வும் மேற்கொள்ளப்படுகின்றது. மிக அண்மையில் நடத்தப்பட்ட மாதிரி ஆய்வு எதுவென்றால் மே-ஜூன் 2017 காலகட்டத்தில் இந்தியத் தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் மேற்கொண்ட தேசிய அளவிலான 140,000 வீடுகள் சர்வேதான். நாடு முழுவதிலும் கழிவறைகள் பயன்பாடு 91 சதவிகிதம் என்ற அளவில் இருப்பதாக இந்த சர்வே கண்டறிந்துள்ளது.

ஓ.டி.எஃப் என அறிவிக்கப்பட்ட கிராமங்களில் வசிக்கும் மக்கள் சிறிது காலம் சென்ற பிறகு திறந்த வெளியில் மீண்டும் மலம் கழிக்கத் தொடங்கினார்கள் என்பதற்கு முந்தைய திட்டங்களில் சாட்சியங்கள்

உண்டு. ஏனெனில் பலகாலமாக இருந்து வரும் பழக்கத்தை உடனடியாக கைவிடச் செய்வது கடினமானது என்பதே காரணம் ஆகும். ஓ.டி.எஃப் தகுதி நிலையை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வது என்பது மிகப் பெரிய சவால்தான். ஓ.டி.எஃப் நிலையிலேயே தொடர்ந்து நீடிக்க மாவட்ட, கிராம மற்றும் மாநில பொறுப்பாளர்கள் தகவல்கல்வி தொடர்பியல் (ஐ.இ.சி) நடவடிக்கைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தி வர வேண்டும். ஓ.டி.எஃப் நிலையை நீடித்து நிலைக்கச் செய்ய ஊக்கப்படுத்தும் வழி முறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. குழாய் மூலம் குடிநீர் விநியோகம் போன்ற மத்திய அரசு நிதியுதவியில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஓ.டி.எஃப் கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் இதற்கு உதாரணம் ஆகும். குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சரகம் நீடித்து இருக்கச் செய்யும் வழிமுறைகளை மாநில அரசுகளுக்கு வழங்கி உள்ளன. மேலும் மாநிலங்கள் ஓ.டி.எஃப் தகுதிநிலையை தக்க வைத்துக் கொள்ள அவற்றுக்கு ஊக்கநிதி அளிக்கும் திட்ட வரைவுச் சட்டகத்தையும் அமைச்சகம் வழங்கி உள்ளது. தூய்மை இந்தியா இயக்கம் - கிராமம் என்பதில் செயல்திறன், நிலைத்திருக்கும் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஸ்வச்சத தர்பன் கீழ் மாவட்டங்களுக்கு தரவரிசை அளிக்கப்படுகிறது. இது மாவட்டங்களுக்கு இடையில் நல்ல ஆரோக்கியமான போட்டியை உருவாக்கி உள்ளது.

தூய்மை இந்தியா இயக்கம் - கிராமத்துக்கும் அதற்கு முந்தைய துப்புரவு திட்டங்களுக்கும் இருக்கக் கூடிய மற்றொரு முக்கியமான வித்தியாசம் என்னவென்றால் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை மூலமாக தூய்மைக்கு முக்கியத்துவம் தருவதாகும். இது அனைவரையும் உள்ளடக்கும் அணுகுமுறைகளில் அமைந்தது ஆகும். உண்மையில் தற்போது கழிவு என்பது மூலவளப் பொருளாக அணுகப்படுகிறது. துப்புரவுப் பணி இப்போது திட மற்றும் திரவ மூலவள மேலாண்மை (எஸ்.எல்.ஆர்.எம்) என மாற்றப்பட்டுள்ளது. கிராமத் தூய்மைக் குறியீட்டில் (வி.எஸ்.ஐ) கிராமங்கள் தாங்களாகவே தங்களுக்குத் தரவரிசை அளித்துக் கொள்ளலாம். இவ்வாறு ஏற்கனவே 1.5 இலட்சம் கிராமங்கள் தங்களுக்கு தரவரிசையை அளித்துக் கொண்டுள்ளன. தாங்கள் அடைய விரும்பும் நிலையோடு தங்களது தற்போதைய தூய்மை நிலைகளை கிராமங்கள் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டு பணி இலக்கை உருவாக்கிக் கொள்ளலாம். ஓ.டி.எஃப் நிலையும் போதுமான திட மற்றும் திரவ மூலவள மேலாண்மை நிலையையும் கொண்டுள்ள கிராமங்கள் ஓ.டி.எஃப்+ என அழைக்கப்படுகின்றன.


## தூய்மை இந்தியா இயக்கம் அனைவருக்குமானது

துப்புரவும் தூய்மையும் அமைச்சகத்தினுடைய அல்லது துறையினுடைய பொறுப்பு மட்டும் அல்ல; அது ஒவ்வொருவரின் கடமையாக மாற வேண்டும் என பிரதம மந்திரி அடிக்கடி வலியுறுத்தி வருகின்றார். தூய்மைக்கு அடையாள இடங்கள் (எஸ்.ஐ.பி) மற்றும் தூய்மை செயல்திட்டங்கள் (எஸ்.ஏ.பி) ஆகியவற்றின் தொடக்க நடவடிக்கையின் போது இந்தத் திசையில் மிகப்பெரும் அடி எடுத்து வைக்கப்பட்டது. எஸ்.ஐ.பியானது வரலாற்று ரீதியிலும் கலாச்சார ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்த 20 அடையாள இடங்களைத் தேர்ந்தெடுத்து உள்ளது. தூய்மையைப் பொறுத்த வரையில் இந்த இடங்களை அற்புதமான இடங்களாக மாற்றுவதற்கான முயற்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. பிற இடங்கள் இந்த அற்புதமான 20 இடங்களைப் பார்த்து மாறும் வகையில் இவை தரமான இடங்களாக இருக்கும். தொடர்ந்து வரும் காலகட்டங்களில் மேலும் 80 இடங்கள் இதற்காக எடுத்துக் கொள்ளப்படும். இந்திய அரசின் அனைத்து அமைச்சகங்களும் துறைகளும் தாங்கள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் தூய்மை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உறுதி எடுக்க எஸ்.ஏ.பி ஏற்பாடு செய்துள்ளது. இதன் மூலம் வெற்றிகரமாக இந்த அமைச்சகங்களும் துறைகளும் தூய்மைப் பணியில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள இவை 2017-18ஆம் நிதியாண்டில் மொத்தமாக ரூ.12,000 கோடி ஒதுக்க உறுதி அளித்துள்ளன. அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அமைப்பின் பணிகளோடும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள ஒரே அரசுத் திட்டமாக தூய்மை இந்தியா இயக்கம் மட்டுமே இருக்கிறது என்று கூறலாம்.

## தூய்மை இந்தியா ஜன்அந்தோலனாக மாறுதல்

தூய்மை இந்தியா இயக்கம் மூன்றாம் ஆண்டைக் கொண்டாடும் இந்த வேளையில், மேலும்

கூடுதலாக உந்துசக்தி அளிக்கப்பட்டால் இந்த இயக்கம் பரவிப் பரவி மக்களின் பேரியக்கமாக மாறி விடும் என்பது நமக்குத் தெரிகிறது. ஒரு ''புதிய இந்தியாவைக் கட்டமைப்போம்'' என்ற மதிப்பிற்குரிய பிரதம மந்திரியின் அழைப்பால் ஊக்கம் பெற்ற எஸ்.பி.எம்காஸ் இந்தியாவில் தூய்மைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கு பொதுமக்கள் பங்கு கொள்ளும் வகையில் பல புதிய தொடக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கைகளில் முதலாவது பயன்பாட்டை எப்படிக் கணக்கிடுவது, பெரிய அளவில் நடத்தை மாற்றத்தைத் தூண்ட தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துவது, கடினமான நிலப்பரப்புகளில் கழிவறைத் தொழில்நுட்ப வடிவமைப்புகள், பள்ளிக் கழிப்பறைகளின் பராமரிப்பை மேம்படுத்துவதற்கு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் வழிமுறைகள், மாதவிடாய்க் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துவதற்கான தொழில்நுட்பத் தீர்வுகள்,




ஸ்வச்ஹத்தான் - ஸ்வச் பாரத் ஹக்கத்தான் என்பதாகும். எஸ்.பி.எம்ஜி எதிர்கொண்டு வரும் சவாலான சிக்கல்கள் பெரும்பாலானவற்றுக்கு புத்தாக்கத் தொழில்நுட்பம் மூலம் தீர்வுகளை வரவேற்பதாக இவை அமைந்துள்ளன. பெரிய அளவில் வற்புறுத்தல் இல்லாமல் கழிப்பறைப் மலத்தை உடனடியாக/சற்றே தாமதாக சிதைவாக்கம் செய்யும் தொழில்நுட்பங்கள் போன்ற கேள்விகளுக்குப் பதில் கிடைத்துள்ளன. ஸ்வச்ஹத்தான் நடவடிக்கைக்கு நாடு முழுவதிலும் இருந்து 3,000 பதிவுகள் வரப் பெற்றுள்ளன. எஸ்.எ.எம்ஜி இலக்குகளை மேலும் விரிவாக்க உதவும் புத்தாக்க யோசனைகள் பல முன் வைக்கப்பட்டுள்ளன.

**உருவாக்க உறுதி ஏற்போம்** என்ற மதிப்பிற்குரிய பிரதம மந்திரியின் தொடக்க நடவடிக்கையால், உந்து சக்தி பெற்று, எஸ்.பி.எம்ஜி நாடு முழுவதற்குமான ''**ஸ்வச் சங்கல்ப் சே ஸ்வச் சித்தி**'' என்ற தலைப்பில் திரைப்படம், கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளை அறிவித்துள்ளது. ஸ்வச்சத இயக்கத்தை ஜன்அந்தோலன் இயக்கமாக மாற்றுவதில் இது ஒரு பெரிய படிக்கல்லாக அமைகிறது. பள்ளி மாணவர்கள், இராணுவப் படையினர், இளைஞர் அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பல்வேறு குழுக்களில் இருந்து அதிக எண்ணிக்கையில் இந்த இயக்கத்தில் பங்கேற்றுள்ளனர். கட்டுரையில் சொற்கள் மூலம், திரைப்படத்தில் வீடியோ பதிவின் மூலம் ஸ்வச்சதா குறித்த தங்களின் அனுபவங்களை அவர்கள் கூறி உள்ளனர். மேலும் தங்களது திட்டங்களையும் யோசனைகளையும் தெரிவித்துள்ளர். தூய்மை இந்தியா குறித்து ஒரு கோடிக்கும் அதிகமாக கட்டுரைகள் வருமென்றும் 50,000 திரைப்படங்களுக்கு மேல் வரக்கூடும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இதன் மூலமாக கோடிக்கணக்கான மக்களின் பிரக்ஞையில் தூய்மை என்ற விஷயத்தை ஒருங்கிணைக்க முடியும். மேலும் தூய்மை இந்தியா இயக்கத்தில் பொதுமக்கள் கூடுதலான உந்து சக்தியுடன் பங்கேற்பார்கள்.

இத்தகைய தொடக்க நடவடிக்கைகளில் மிக முக்கியமானது எதுவென்றால் ஆகஸ்ட் 27 அன்று மாண்புமிகு பிரதம மந்திரி தன்னுடைய மனதின் குரல் உரையில் அறிவித்ததே ஆகும். இந்த உரையில் அவர் தேசத்துக்கு ஒரு வேண்டுகோள் விடுத்து இருந்தார். காலக்கெடு விதிக்கப்பட்ட, நாடு முழுவதும் செயல்படுத்தக் கூடிய தேசிய பிரச்சார முகாமில் ஈடுபடுமாறு மக்களைப் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். இரட்டைக் குழி கழிப்றைகளைக் கட்டுதல், பொது இடங்களைத் தூய்மை செய்தல், தூய்மை இந்தியா இயக்கம் குறித்த விழிப்புணர்வைப் பரவலாக்குதல் போன்ற நடவடிக்கைகளை செப்டம்பர் 15 முதல் அக்டோபர் 2, 2017 வரையில் சேவையாக (சிரமதான்) மேற்கொள்ளுமாறு பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். இந்தத் தொடக்க நடவடிக்கையில் குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம் அரசு உயர் அதிகாரிகள், தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், சமுதாய அமைப்புகள், இளைஞர் குழுக்கள், இராணுவப் படையினர், பெரு நிறுவனங்கள், குடிமக்கள் என அனைத்துத் தரப்பினரையும் ஈடுபடுத்தி வருகிறது. உத்திரப்பிரதேசத்தில் ஆகஸ்ட் 15 அன்று இந்த இருவார முகாமை மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் தொடங்கி வைப்பார். அதே போன்று அக்டோபர் 2, 2017 அன்று இருவார முகாமை மாண்புமிகு பிரதம மந்திரி தூய்மை இந்தியா தேசிய விருதுகளையும் ஸ்வச் சங்கல்ப் சே ஸ்வச் சித்தி விருதுகளையும் வழங்கி நிறைவு செய்து வைப்பார்.

இத்தகைய நடவடிக்கைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து தூய்மை இந்தியா இயக்கம் ஒரு வலுவான ஆற்றல் மிக்க இயக்கமாக நாடு முழுவதும் மாறி உள்ளது. இந்த இடைமாற்றப் பயணத்தில் தங்களுடைய பணியையும் ஆற்ற வேண்டும் என்ற உந்துதல் மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது. நாட்டின் கற்பனையாக தூய்மை என்பது உருவாகி உள்ளது. இந்தக் கற்பனை ஒவ்வொருவருக்கும் சொந்தமானதாக உள்ளது. சுதந்திரம் பெற்று எழுபது ஆண்டுகள் நிறைவடைந்தும் காந்தியின் தூய்மை இந்தியா கனவு கனவாகவே இருந்தது. இப்போது அவரின் கனவு உண்மையாக மாறி வருகிறது. ஐந்து ஆண்டு காலகட்டத்துக்குள் இந்தியாவை திறந்த வெளியில் மலம் கழிக்காத நாடாக மாற்றுவேன் என பிரதம மந்திரி பொதுமக்களின் முன்னணியில் உறுதி எடுத்திருப்பது அவரது தைரியத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துகிறது. இந்த இலக்கு அடைய முடியாதது என்று பலரும் நினைக்கும் இலக்குதான். ஆனால் மேலும் நேர்மையாகச் செயல்பட வழிமுறையும் உள்ளது. ஆனால் இதுவரை ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் கவனத்தில் எடுத்துப் பார்த்தால், அடுத்து வரும் 12 -15 மாதங்களில் இந்த வேகமானது செயலை நிறைவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோடிக்கணக்கான மக்களின் செயலூக்கமான பங்கேற்புடன் இந்த இலக்கானது நிச்சயம் அடையக் கூடியதுதான்.

---

**பரமேஸ்வரன் அய்யர்**, இவர் குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகத்தின் செயலாளராக உள்ளார்.
Email- param.iyer@gov.in

•

# வறுமை இல்லாத தேசத்தை உருவாக்குதல்

- அமர்ஜீத் சின்ஹா

1942 ஆம் ஆண்டு உருவான வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 75வது ஆண்டு நிறைவின் போது, வறுமையே வெளியேறு என்ற முழக்கத்தை மாண்புமிகு பிரதமர் முன்வைத்திருக்கிறார். இந்த இலக்கை 2022ஆம் ஆண்டிற்குள் அடைந்திடவேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்திருக்கிறார். கிராமப்புறங்களில் வசித்துவரும் 8.85 கோடி குடும்பங்கள் ஏதேனும் ஒரு சவாலை எதிர்கொண்டுள்ளன. கடந்த $2^1/_2$ ஆண்டுகளாக செய்யப்பட்ட முயற்சிகள் நாம் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்ற நம்பிக்கையை அளிக்கின்றன. ஊரக வளர்ச்சித் திட்டங்களிலும், வறுமையை சமாளிப்பதிலும் நாம் முன்னேற்றம் கண்டு வருகிறோம்.

கூலி உயர்வு, திறன் மேம்பாடில்லாத காரணத்தால் வேலைவாய்ப்பு இல்லாமல் இருந்தவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி ஆகியவற்றின் காரணமாக வறட்சி, விவசாய விலை பொருள்களின் விலை வீழ்ச்சி ஆகியவை ஏற்பட்ட கடினமான கால கட்டங்களின் போதும் கூட ஊரக மக்களில் 31% ஊரகக் குடும்பங்களின் துயரங்கள் பல்வேறு முன்முயற்சிகளின் காரணமாக மட்டுப்பட்டு இருந்தன. 1 ஹெக்டேர் வரை நிலம் வைத்திருப்போர், நிலமற்றவர்கள் ஆகியோர் அடங்கிய எஞ்சிய 69% ஊரகக் குடும்பங்களும் துயரங்களை சந்திக்கவில்லை என்று சமீபத்திய HSBC ஆய்வு தெரிவிக்கிறது. தீன்தயாள் அந்யோதயா தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் (DAY - NRLM) பற்றிய IRMA (2017) ஆய்வு இந்தத்திட்டம் செயல்பாட்டில் இருந்த பகுதிகளில் வருவாய் 22% அதிகரிப்பதைக் காட்டுகிறது. உற்பத்தியை தரக்கூடிய சொத்துக்கள், நலவாழ்வு, ஊட்டச்சத்து, கல்வி ஆகியவற்றில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் தீவிரமாக செயல்படும் பகுதிகளில் அதிக அளவு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதையும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது. பன்முகத்தன்மையுடைய செயல்பாடுகளிலும், வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதிலும் சமுதாய முதலீடுகளை செய்வது ஒன்று மட்டுமே வழி என்பதை இந்த ஆய்வு உறுதிப்படுத்துகிறது.

வேலைவாய்ப்பு, திறன்மேம்பாடு, சமூகப்பாதுகாப்பு, வாழ்வாதாரம், சாலை காட்டுமானம், நீர் சேமிப்பு, திடதிரவ வள மேலாண்மை போன்ற பொதுத்திட்டங்களை செயல்படுத்துவதில் ஊரக வளர்ச்சித்துறை மிகமுக்கியமான சாதனமாகும். கல்வி, உடல்நலம், ஊட்டசத்து, திறன் வளர்ப்பு போன்ற தொடர்புடைய பிறதுறைகளில் ஒருங்கு குவிக்கப்பட்ட நடவடிக்கைகள் ஒருசேர எடுக்கப்பட்டால், ஏழைக் குடும்பங்களின் நலவாழ்வு குறுகிய காலத்திற்குள் மேம்படுத்தப்படும்.

வறுமை ஒழியும் போது, வாய்ப்பு மறுக்கப்பட்ட குடும்பங்கள் கொடிய வறுமையிலிருந்து மீண்டு வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் திறனைப்பெறுகின்றன. கல்வி, உடல்நலம், திறன்கள், துப்புரவு, தூயகுடிநீர், ஊட்டச்சத்து, உணவுப்பாதுகாப்பு, வாழ்வாதாரம், வீட்டுவசதி, பாலினசமத்துவம், சமூக சமத்துவம், அதிகாரம் அளித்தல், மின்சாரம், இணைப்பு வசதிகள், நீடித்த வளஆதாரங்கள், கழிவு மேலாண்மை அதிக வருவாய் தரும் பல்வேறு விதமான நீடித்த பொருளாதார செயல்பாடுகள் ஆகியவற்றின் மூலம் மனிதனின் முழுத்திறமையையும் வளர்த்துக்கொள்ளக்கூடிய ஆற்றல் கை கூடுவதை வறுமை இல்லாத நிலை ஏற்படுத்தித்தருகிறது. இத்தகைய ஒருங்கிணைந்த அணுகுமுறைதான் வறுமை இல்லாத கிராமப் பஞ் சாயத்துகள் என்ற சவாலை சந்திப்பதற்கு அந்யோதயா திட்டத்திற்கு கைகொடுக்கின்றன. மாநில அரசுகள், உள்ளாட்சிகள் ஆகியவற்றின் பங்கேற்போடு ஊரக

வளர்ச்சித்துறை ஒருமுகப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு திட்டங்களை செயல்படுத்தி பலன்களை உருவாக்கும் வேளையில் கடந்த 21/2 ஆண்டுகளாக பல்வேறு அணுகுமுறைகளின் மூலம் அந்யோதயா திட்டமும் நிலைமாற்றத்தை ஏற்படுத்திவருகிறது.

**தலையீட்டின் அளவுகோல்:**

ஊரக இந்தியாவில் மிக அதிகமான எண்ணிக்கையிலான குடும்பங்கள் இருக்கின்றன. கிராமங்களிலும் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட வசிப்பிடங்களிலும் இவை இருக்கின்றன. எனவே நிலை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தலையீடு பெரும் அளவில் செயல்பட்டாக வேண்டும். மத்திய அரசின் நிதிஒதுக்கீட்டிலும், ஊரக வளர்ச்சித்துறை செலவிடுவதிலும் குறிப்பிடத்தகுந்த அதிகரிப்புகள் தென்படுகின்றன. 2012-13 ஆண்டு நிதி ஒதுக்கீட்டை ஒப்பிடும்போது 2017-18க்கான நிதி ஒதுக்கீடு இருமடங்கு அதிகரித்து 1.05 இலட்சம் கோடியாக இருக்கிறது. இதனோடு கூட மாநிலங்களின் பங்களிப்பையும் கணக்கில் கொள்ளவேண்டும். (இமயமலைக்கு அப்பாலுள்ள பகுதிகளில் 60:40, இமயமலைப் பகுதிகளிலும், வடகிழக்குப் பகுதியிலும் மத்திய மாநில ஒதுக்கீடு 90:10). கிராமப்பஞ் சாயத்துக்களுக்கு 14வது நிதிக்குழு அளித்துள்ள நிதி இந்த காலகட்டத்தில் ரூ.25ஆயிரம் கோடி முதல் ரூ.35 ஆயிரம் கோடியாக இருக்கும். 2015-17 காலகட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தரப்பட்ட வங்கிக்கடன் ரூ. 70 ஆயிரம் கோடி. இதற்கு முந்தைய ஆண்டுகளைக்காட்டிலும் இது மிக அதிகம். வேலைவாய்ப்புக்கான திறன்பயிற்சி, சுயதொழில் திறன்பயிற்சி ஆகியவற்றிக்கு தரப்பட்ட முக்கியத்துவம் ஊரகப்பகுதிகளில் மிக பரந்த பொருளாதார செயல்பாடுகளுக்கு வழிசெய்தது. கால்நடைவளர்ப்பு, வாழ்வாதார வழிவகைகள் போன்றவையும் குடும்பங்களுக்கு கூடுதல் வருமானம் கிடைத்திட வழி செய்கின்றன. ஒருங்கிணைந்த முறையில், முழுமையான வகையில், கசிவு ஏதுமின்றி வளங்கள் பயன்படுத்தப்பட்டால் ஊரககுடும்பங்களில் வறுமை மறைய வழியிருக்கும். அரிசி, கோதுமை ஆகியவற்றை குறைந்த விலையில் வழங்குவதற்கான NFSA வின் வருடாந்திரமானியமும் ஏழைக்குடும்பங்களின் உணவுப்பாதுகாப்புக்கு உதவிசெய்துள்ளது. பிரதமமந்திரி கிராமப்புற வீடுவசதித் திட்டத்தின் கீழ் 1கோடி அழகிய வீடுகளைக் கட்டித்தரும் கனவும், மார்ச் 2019க்குள் தகுதியுள்ள ஊரக வசிப்பிடங்களுக்கு சாலை இணைப்பு வசதிகள், மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 2018-19இல் வங்கிகளின் மூலம் ரூ.60ஆயிரம் கோடி கடன் வசதி (2014-15 ஆண்டு தரப்பட்ட கடன் அளவைக் காட்டிலும் 3மடங்கு அதிகம்) ஆகியவை நிறைவேறக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இவற்றிற்கான நிதிவசதி இருக்கிறது.



**நீர் சேமிப்பு, வாழ்வாதாரப் பாதுகாப்புக்கான உந்துதல்:**

குடும்பங்களின் நலவாழ்வை நிர்வகிக்கும் செழிப்பான கிராமங்களுக்கான தரக்குறியீடு திறமையான நீர்சேமிப்பு தான். இந்தக்காரணத்தினால்தான் மகாத்மாகாந்தி தேசிய ஊரகவேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தில் 60% செலவினம் வேளாண்மைக்கும் அது தொடர்பான செயல்பாடுகளுக்கும் என முடிவெடுக்கப்பட்டது.

வறட்சிபாதித்த 13 மாநிலங்களின் முதலமைச்சர்களோடு மே 2015 இல் பிரதமர் நடத்திய கூட்டங்களில் மாநில முதல்வர்களை நீர் சேமிப்பில் கவனம் செலுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டார். மாநிலங்கள் முன்னின்று இதற்கான உந்துதலை ஏற்படுத்தவேண்டும் என்றார் பிரதமர். முக்கிய மந்திரி ஜல்சுவலம்பன் அபியான் திட்டம் ராஜாஸ்தானிலும், நீரு-செட்டு திட்டம் ஆந்திரபிரதேசத்திலும், காகதியா திட்டம் தெலுங்கானவிலும், ஜல்யுக்தஷிவர் திட்டம் மகாராஷ்டிராவிலும், தோபா பண்ணைக்குட்டைத் திட்டம் ஜார்கண்டிலும் என இவை போன்ற பலவிதமான நீர் சேமிப்புத் திட்டங்கள் பல்வேறு மாநிலங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

மகாத்மாகாந்தி தேசிய ஊரகவேலைவாய்ப்பு உறுதித்திட்டம் (MGNREGS) கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகமான வேலைவாய்ப்பை ஆண்டுக்கு 235 நபர் நாள்களுக்கு 2015-16, 2016-17 இவ்விரு ஆண்டுகளிலும் ஏற்படுத்தித்தந்துள்ளது. தனிநபர்களுக்கு ஆதாயமளிக்கும் ஆட்டுக்கொட்டாய், கோழிக்கூண்டு, கறவைமாடுகளுக்கான இருப்பிடங்கள் போன்றவற்றை உருவாக்குவதற்கு 90/95 நாட்கள் வேலைகளும் தரப்பட்டன. 11இலட்சத்துக்கும் அதிகமான பண்ணைக்குட்டைகள் உருவாக்கப்பட்டன. இவை அனைத்தும் வருமானத்தை உருவாக்கிக்கொள்ளும் வாப்பையும், வாழ்க்கைத்தரம் உயரவும் இதற்கு முன்பில்லாத அளவுக்கு உருவாக்கித்தந்தன. நீர்ப்பற்றாக்குறை நிலவும் 2264 வட்டாரங்களுக்கு தொழில்நுட்பத்திறத்துடன் கூடிய முழுமையான நன்கு ஆய்வுசெய்யப்பட்ட நீர்சேமிப்புத்திட்டங்கள் மத்திய நீர்வள, நிலவள அமைச்சகத்தின் பங்களிப்புடன் நீர்சேமிப்புக்கான புதியதிட்ட வழிகாட்டுதல் மூலம் திட்டமிடப்பட்டுள்ளன. இந்தத்திட்டத்தில் முன்நின்று பணிபுரிபவர்களுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சிகளும் தரப்படுகின்றன.

**குடிமக்களின் ஈடுபாடு:**

குடிமக்களை மையப்படுத்திய அணுகுமுறையை நீர்வள, நிலவளத்துறை கவனமாக கையில் எடுத்துள்ளது. இதனால் பொறுப்புணர்வு கூடும். பின்தங்கிய வட்டாரங்களில் உள்ள பஞ்சாயத்துகளை ஒரு தொகுப்பாக்கி சிறப்பு முயற்சிகள் செய்யப்பட உள்ளன. இதற்கான திட்டமிடல் வேலைகள் குடிமக்களின் பங்களிப்புடன் 2569 பின்தங்கிய வட்டாரங்களில் நடைபெற்று வருகின்றன. குடிமக்களை மையப்படுத்தும் 'மேரி சடக்' போன்ற செயலிகள் பயன்படுத்தப்பட்டு கருத்துக்கள் பெறப்படுகின்றன. 'ஆவாஸ் சாப்ட்' செயலி பிரதமந்திரி ஆவாஸ் யோஜ்னா கிராமிய திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளின் படங்களைப் பதிவேற்றம் செய்யப்பயன்படுத்தப்படுகிறது. குடும்பங்களை இணைப்பதற்கும் இது உதவுகிறது. பொதுமக்களுக்கு தகவல்களைத் தெரிவிப்பதற்க்கு கிராம்சம்ரிதி, ஸ்வச்சதா இருவாரம் (1-15 அக்டோபர் 2017) ஆகிய பிரசார நடவடிக்கைகளை ஒவ்வொரு கிராமப் பஞ் சாயத்திலும் மேற்கொள்ளப்படவிருக்கிறது. இந்தக் காலக்கட்டத்தில் கிராமப் பஞ்சாயத்து அலுவலகத்தில் பொதுமக்கள் சரிபார்த்துக்கொள்ளும் விதத்தில் இந்தத்திட்டம் தொடர்பான ஆவணங்கள், பயனாளிகளின் விவரங்களுடன் வைக்கப்படும். கைப்பேசி அடிப்படையிலான மக்கள் தகவல் வழிமுறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் அந்த கிராமத்தில் நடைபெற்று வரும் எந்தத் திட்டத்தையும் கவனிக்க முடியும். இதைப்போலவே, சமூகத்தணிக்கையாளர்கள் படை ஒன்றும் உருவாக்கப்படுகிறது. மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் இதில் இடம் பெறுவார்கள். தணிக்கை செய்வது பற்றிய முறையான பயிற்சியும் இவர்களுக்கு அளிக்கப்படும்.

**தகவல் தொழில்நுட்பம் / நேரடிப்பணப்பரிமாற்றம் / ஆதார் பயன்பாட்டின் மூலம் வெளிப்படைத்தன்மை:** பணப்பரிமாற்றங்களை வங்கிகள், அஞ்சலகங்கள் மூலம் செய்வதில் நிலவள, நீர்வளத்துறை தலைமையானதாகத் திகழ்கிறது. திட்டத்தின்படி வழங்கப்படும் ஊதியத்தில் 98 விழுக்காடும், பிரதம மந்திரி வீட்டுவசதித்திட்டம் - கிராமம் இதன்கீழ் நடைபெறும் பணப்பரிமாற்றம் 100 விழுக்காடும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நேரடியாக பரிமாற்றம் செய்யப்படுகிறது. MGNREGS திட்டத்தில் பயன்பெறும் தொழிலாளர்கள் 5.9 கோடி பேருக்கு ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள வங்கிக்கணக்குகள் உள்ளன. கிராமப்புறங்களில் வங்கிமுகவர்கள், கிராம அஞ்சலகங்களில் உள்ள சிறு கருவிகள் குறிப்பிட்ட நாள்களில் கிராமங்களில் இருக்கும்படி செய்யப்படுகிறது. அதிக

எண்ணிக்கையில் எளிதாக மின்னணு பணப்பரிமாற்றம் செய்வதற்கு இது உதவுகிறது. தொழிலாளர்கள், ஓய்வூதியதாரர்களின் கஷ்டங்களையும் இது குறைக்கிறது. பெண்கள் சுயஉதவிக்குழுக்களைச் சேர்ந்தவர்கள், வங்கித்தோழியர்கள் ஆகியோரின் பங்களிப்பு இதில் உற்சாகம் தருவதாக இருக்கிறது.

**விண்வெளி தொழில்நுட்பத்தின் மூலம் வெளிப்படைத்தன்மையும், திறமையான கண்காணிப்பும்:**

MGNREGS திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள ஏறத்தாழ 2 கோடி சொத்துக்கள் விண்வெளி தொழில்நுட்பத்தின் மூலம் புவிசார்குறியீடு செய்யப்படுவதற்கு இடைவிடாத முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. PMAY கிராமப்புற வீடுகள் திட்டத்தின் பயனாளிகளின் இறுதித்தேர்வு அவர்களின் பழைய குடியிருப்புகளை அட்சரேகை தீர்க்கரேகை விவரங்களுடன் புவிசார் குறியீடு செய்து புதிய வீடுகள் கட்டப்படுவதில் காணப்படும் முன்னேற்றத்தைப் பற்றி அறிந்துகொள்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. இந்த நடவடிக்கை வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்கிறது. புவிசார் குறியீடு செய்யப்பட்ட உடமைகள் அனைத்துமே பொதுமக்கள் பார்வைக்கு வெளிப்படையாக வைக்கப்படுகிறது. பிரதமமந்திரி கிராமப்புறச் சாலைகள் திட்டத்தில் சாலைகளின் சீரமைப்பைக் கண்காணிப்பதற்கு விண்வெளித் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. சாலை ஓர மரங்களின் நிலைமையை அறியவும் இது உதவுகிறது. மகாத்மாகாந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின்கீழ் உருவாகிவரும் அனைத்து உடமைகளையும் புவிசார் குறியீடு செய்து இந்த உடமைகளின் பழையநிலை, தற்போதைய நிலை, பணிமுடிந்தபின் உள்ளநிலை ஆகியவற்றைப் பதிவுசெய்வதுதான் நம் முன் இருக்கும் சவாலாகும்.

**மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடனை உயர்த்தி வழங்குதல்:**

தீன்தயாள் அந்தியோதயா யோஜனா - தேசிய ஊரக வாழ்வாதாரத்திட்டம் - DAY-NRLM இந்தத்திட்டம் சமுதாய அணி திரட்டலின் மூலமும் குழு உருவாக்கத்தின் மூலமும் ஏராளமான சமூகமுதலீட்டைத் திரட்டி பொருளாதார செயல்பாட்டின் வளர்ச்சிக்கும், வாழ்வாதார வகைகளுக்கும் உந்துதல் தேவைப்படுகிறது என்பதை செயல்விளக்கமாகக் காட்டியுள்ளது. வங்கியுடன் இருக்கும் தொடர்புகளை விவரமாகக் கண்காணிப்பதற்கு உந்துதல் தரப்படுகிறது. எந்தவிதமான வறுமை ஒழிப்பு முயற்சிக்கும் நியாயமான விகிதத்தில் நிறுவனக்கடன் வசதிகள் தேவைப்படுகின்றன. ஏற்கனவே வங்கித் தொடர்பில் ரூ. 43 ஆயிரம் கோடியை எட்டிவிட்ட போதிலும், 2018-19 இல் ரூ. 60 ஆயிரம் கோடி கடன் அளவை எட்டுவதற்கு நம்பிக்கை வைக்கப்பட்டுள்ளது. அனைத்துவகையான திறன்மேம்பாடுகளையும் மகளிர்சுயஉதவிக் குழுக்களுடன் இணைப்பதன் மூலம் குடும்பங்கள் வங்கிக்கடன்களைத் திரும்பபெறுவதற்கான முன்தயாரிப்பு நிலை உருவாகும்.

விரைவுபடுத்துதல் - சாலை இணைப்பு என்பது ஊரகப்பகுதியில் உள்ள கிராமங்களுக்கு புதிய வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதற்கு உதவக்கூடிய நிலைமாற்ற ஏற்பாடாகும். சந்தைகளுக்குச் செல்வதை எளிமையாக்குவதுடன் கூலி வேலைகளுக்குச் செல்லும் தொழிலாளிகள் இடம்பெயரவும் இது உதவும். இந்தக் காரணங்களுக்காகவே ஒரு நாளைக்கு 70 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைப்பது என்று 2011-14இல் இருந்த நிலையை மாற்றி 2016-17 இல் ஒருநாளைக்கு 130 கி.மீ. சாலை அமைப்பது என்ற விரைவுபடுத்தும் நிலையை எட்டுவதற்கு மனமார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏறத்தாழ 80% தகுதியான வசிப்பிடங்கள் பக்கா சாலைகளினால் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன. மார்ச் 2019 க்குள் 100% இலக்கை அடைவதற்காக முயற்சிகள் அமையவேண்டும். சாலைகள் அமைப்பதற்கு பிளாஸ்டிக், எரிசாம்பல் பயன்பாடு போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். மத்தியபிரதேசத்தில் நடைமுறையில் உள்ள வெற்றிகரமான சாலைப் பராமரிப்பும், உத்தராகாண்டில் செயல்பாட்டில் இருக்கும் சமுதாயப்பராமரிப்பு முயற்சியும் பிற மாநிலங்களிலும் பின்பற்றப்பட வேண்டும்.

**தேவைகளுக்கு ஏற்ற திறன்மேம்பாடு:**

ஊரகப் பகுதிகளில் அதிகஅளவில் நிலவிவரும் வேலை இன்மையைத் தீர்ப்பதற்கு சுயதொழிலுக்கான

திறன்மேம்பாடுகள் தேவைப்படுகின்றன. சிறுசிறு தொழில்கள், விவசாயிகள் உற்பத்தியாளர்களாக இருக்கும் அமைப்புகள், ஊரகப் போக்குவரத்து, கைவினை, கைத்தறி, கைத்திறம் போன்ற ஏராளமான ஊரக முயற்சிகள் திட்டமிடப்பட்ட ஆதரவு, ஒருங்கு குவிப்பு முயற்சிகளின் மூலம் சாத்தியப்படும். விவசாயம், விவசாயம் அல்லாத பிற துறைகளில் வேலை வாய்ப்புகளை அதிகளவில் உருவாக்குவதற்காக ஊரக வளர்ச்சித் துறையானது, ஊரகப் பகுதிகளின் உள்ளார்ந்த வலிமையையும் வேளாண்மை, கால்நடைவளர்ப்பு, சிறுகுறுநடுத்தர தொழில்கள், நெசவு போன்ற துறைகளில் உள்ள திட்டங்களையும் அதிகரித்து செயல்படுத்த முயன்று வருகிறது.

ஊரகப்பகுதிகளில் உள்ள தொழில்நுட்பத்திறன் கொண்டோர், கட்டடப்பணியாளர்கள் போன்றோருக்கு சிறப்புப்பயிற்சித் திட்டங்களும் உள்ளன. இவை யாவும் அந்தத்துறைகளின் திறன்குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீட்டிற்கும், சான்றிதழ் வழங்குவதற்கும் வகை செய்யப்படுகிறது. DDUGKY, RSETI போன்ற திறன் மேம்பட்டுத் திட்டங்கள் மேலும் மேம்படுத்தப்படுகின்றன.

**மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான புது முயற்சிகள்:**

உள்ளூர் சமுதாயங்கள், மாநிலங்களின் முன்னுரிமைகளை செயல்படுத்துவதில் ஊரக வளர்ச்சித்துறை புதுமையான முயற்சிகளைக் கையாண்டு வருகிறது. தமிழ்நாட்டில் 80%க்கும் அதிகமான கிராமங்களில் திட வள மேலாண்மைத் திட்டமும், மஹாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா பகுதிகளிலும் தற்போது பிகாரிலும், சட்டிஸ்கரிலும் MGNREGS, DAYNRLM ஆகிய திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் நீர்மவள மேலாண்மைத்திட்டங்களும், புது முயற்சிகளுக்கான உதாரணங்களாகும். ஆஜீவகாகிராமீன் எக்ஸ்பிரஸ் எனப்படும் ஊரகப்போக்குவரத்துத்திட்டம், நீர் சேமிப்புத்திட்டம், ஊரக சாலைகளுக்கான வழிகாட்டுதல்கள், அந்தந்தப் பகுதிகளுக்கேற்ற பொருத்தமான தொழில் நுட்பங்களைக் கையாளுவதற்கு உதவக்கூடிய வீட்டுவசதி அமைப்பு வடிவங்கள் பற்றிய ஆய்வு, MGNREGS பணியாளர்களுக்கு நடத்தப்படும் முழு வேலைவாய்ப்பில் வாழ்வாதாரம் (LIFE) எனப்படும் திறன் வளர்ப்புத்திட்டம் போன்றவை பெரிய அளவிலான புதுமையாக்கங்களுக்கு உதாரணங்களாகும்.

**ஆதாரத்தின் அடிப்படையில் கண்காணிப்பு:**

பெருமளவில் செயல்படுத்தப்படும் திட்டங்களைத் திறம்படக் கண்காணிப்பதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் அமைப்பு முறை சார்ந்த அணுகுமுறை தேவைப்படுகிறது. தவிரவும், உருவாக்கப்படும் சொத்துக்களின் தரம் புவிசார் குறியீடு மூலம் உறுதிசெய்யப்படும். ஒவ்வொரு ஆண்டும் 600 மாவட்டங்களுக்கு சென்று திட்டங்களின் அமலாக்கம் பற்றி அறிந்துகொள்ளப்படுகிறது. இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை பொதுப்படையான ஒரு ஆய்வு 8 மாநிலங்களில் செய்யப்படுகிறது. இவை தவிர தேசிய அளவிலான மதிப்பீட்டுத்திட்டங்களான IRMA ஆய்வு மதிப்பிடுவதற்கு உதவக்கூடிய மற்ற பிற திட்டங்கள் பற்றியும் குறிப்பிடுகிறது. அறிவுத்துறைகள் பலவாக இருக்கின்றன. தொழில்நுட்பம் மாறிக்கொண்டே இருக்கிறது. சிறந்த தொழில்நுட்பத்தை முறைப்படி செயல்படுத்துவதற்கு மனிதவளங்களுக்கான உயர்நிலை வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்பப்பயன்பாடு அதில் உள்ள சவால்கள், அகத்தணிக்கை முறைகள், சந்தை இணைப்பு, மதிப்புவரிசைத்தொடர் போன்றவற்றிற்கும் மிக்ச்சிறந்த அறிவாற்றல் உள்ளவர்களைக்கொண்ட உயர்நிலைக்குழுக்களமைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் ஊரக வளர்ச்சித்திட்டங்களை திறம்பட நடத்திச்செல்வதற்கு உதவுகின்றன.

**ஒருங்கு குவிப்பு முறையில் செயற்படுத்துகை:**

சமூக வாய்ப்புகளை அதிகரித்துத்தருவதும், வறுமையின் கொடுமையில் இருந்து வெளிப்படுவதற்கான சாத்தியங்களை ஏற்படுத்திதருவதுமே வறுமை இல்லாத நிலையை அடைய உதவக்கூடியது ஆகும். இதற்கு அந்தியோதயா திட்டம் போன்ற ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியமாகிறது.

---

- **அமர்ஜீத் சின்ஹா**, ஊரக வளர்ச்சித்துறை செயலாளர் 'ஒவ்வொருக்குமான இந்தியா' என்ற நூலின் ஆசிரியர்.

# சாதிகள் இல்லாத இந்தியா

- அமர்ஜித் எஸ்.நரங்

இந்தியாவின் சமூகப்பொருளாதார வளர்ச்சியையும் அதன் ஒற்றுமையையும் பீடிக்கும் மிகப்பெரிய சமூகத்தீமைகளில் ஒன்றாக இருப்பது சாதியம். ஒன்றுபட்ட, கண்ணியமான, வளர்ச்சிகண்ட இந்தியாவை எதிர்நோக்கியிருக்கும் வேளையில், சக்திமிக்க சமூக, அரசியல் பிரிவினை சக்தியாக சாதிகள் செயல்பட்டு சமூகச் சச்சரவுகளை உருவாக்குகின்றன. ஸ்திரத்தன்மை, அமைதி, இணக்கம் ஆகியவற்றைப் பாதிக்கின்றன. தேர்தல் முடிவுகளை கட்டுப்படுத்தி சட்டம் இயற்றுதல், நிர்வாகம் ஆகியவற்றில் முடிவுகள் எடுப்பதை பாதிக்கின்றன. சாதிய அமைப்பு முறை பிணைந்திருக்கும் இந்து மதத்தில் மட்டுமின்றி சிக்கியர்கள், ஜைனர்கள், புத்தர்கள், கிருஸ்தவர்கள் மத்தியிலும் சாதியத்தின் அடையாளங்கள் காணப்படுகின்றன. ஆட்சி நிபுணர்கள், கொள்கை வகுப்பவர்கள், நோக்கர்கள், சிறந்த அரசியல் தலைவர்களாகியோர் மத்தியில் ஒரு பொதுவான கருத்தொற்றுமை நிலவுகிறது. இந்தியாவை தற்சார்புள்ள நாடாக, வறுமை, கல்வி அறிவின்மை, நோய்கள் இல்லாத நாடாக மாற்றுவதற்கு உலக சமூகங்களின் மத்தியில் பெருமிதம் மிக்க ஒரு இடத்தைப் பெறுவதற்கு சாதியத்தை அகற்றுவது காலத்தின் அவசியமான மற்ற தேவைகளில் ஒன்றாகும். சாதி அமைப்பு முறை, சாதிகள் உருவானதற்கும், வளர்ச்சி கண்டதற்குமான காரணங்கள், தற்போதைய நிலையில் சாதிகளின் பங்கு ஆகியவை பற்றி நிலவும் தவறான கருத்துக்களை முதலில் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.


**சாதி அமைப்பு முறை:**

சாதி அமைப்பு முறை என்பது பற்றிய சரியான வரையறை எது என்பது பற்றி அறிஞர்கள், நோக்கர்கள் மத்தியில் எண்ணற்ற கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன சாதிகளின் தோற்றம், பல்வேறு கால கட்டங்களில் அதன் பங்கு பற்றியும் வேறுபட்ட கருத்துகள் உள்ளன. சமுதாயத்தில் ஒருவருக்குள்ள அந்தஸ்து, படிநிலை பற்றிய எழுதப்படாத அமைப்பு முறை என்று இதனை மிகவும் பொதுவாகக் கூறலாம். சமூக குழுக்களுக்குள்ளேயே உறவு கலந்து உருவாகும் தன்மைக்கேற்ப அதனடிப்படையில் உருவாக்கப்படும் ஒரு படிநிலையே சாதி என்பதாகும். சரிசமமாக அமர்ந்து உணவருந்துதல், சடங்கு சம்பிரதாயங்கள் செய்தல் போன்றவற்றில் குறிப்பிட்ட சில எண்ணங்கள் நிலவுகின்றன. பரம்பரையாக மேற்கொண்டுவரும் தொழில்களின் அடிப்படையிலும் இவை பிரதிபலிக்கின்றன. வர்ணாசிரம முறையோடு சாதிகள் தொடர்புபடுத்திப் பேசப்படுகின்றன. இருந்தபோதிலும் சாதிகள் உருவான விதம் பற்றி மறை நூல்களில் காணப்படவில்லை. 2000 வருடங்களுக்கு முன்பு பொருளாதார, அரசியல், பொருள்வகைகளில் பரிணாம வளர்ச்சி ஏற்பட்டபோது சாதி அமைப்புகள் உருவானதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்திய வாழ்க்கைமுறையின் நிரந்தர பிணைப்பாக சாதிகள் ஒருபோதும் இருந்திருக்கவில்லை. ஆனால் அவ்வப்போது நிலவிய சமூக - அரசியல், வரலாற்றுச்

சூழல்களுக்கு ஏற்ப உருவாகி பரிணமித்திருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்திற்கு முன்பு சாதிச் சார்புகள் மிகவும் தளர்ச்சியாகவும் மேலோட்டமாகவுமே இருந்தன.

**காலனியாதிக்க காலத்தில் சாதிகள்:**

சாதி என்பது ஒரு சமூக யதார்த்தமாக நீண்டகாலமாக இருந்து வருகிறது. பிரிட்டிஷ் காலனியாதிக்க அரசுதான் இந்திய சமூகத்தின் நிறுவன மூலக்கல்லாக சாதியை பயன்படுத்திக் கொண்டது. 1871 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை முதல்கணக்கெடுப்பு தொடங்கி, சாதி அமைப்பு முறை, அதன் பாகுபாடுகள் பற்றிய தகவல்களை சேகரிக்கும் முக்கியமான கருவியாக பத்தாண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்படும் மக்கள்தொகை கணக்கெடுப்பு அமைந்திருக்கிறது. இந்தக் கணக்கெடுப்புகளில் கிடைத்துள்ள விவரங்களின்படி சாதிகள், சாதி உட்பிரிவுகள் அளவிடப்பட்டு இதுவரை அறியப்பட்டிராத சாதி அடையாளங்கள் பொருத்தப்பட்டன என்கிறார் நீரஜாஜெயல் (2006). 1901, 1911 மக்கள்தொகைக் கணக்கெடுப்புகளில் உறுதியான வகை இனங்களாக சாதிகள் பகுத்துக் காட்டப்பட்டிருப்பது சாதி அடையாளங்கள் உறுதிபடுவதற்கு உதவின.




பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் சாதி முறையை பிரித்தாளும் சூழ்ச்சிக்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டனர். சாதி அடையாளங்களை தீவிரமாக பயன்படுத்திக் கொண்டனர். அரசு நிறுவனங்களின் வேலை முறைகளில் சாதியைப் பயன்படுத்தி நிறுவனமயமாக்கினர். காவல்துறை, இராணுவம் போன்ற சிலவகையான வேலைகளுக்கு சில சாதியினருக்கு முன்னுரிமை தரப்பட்டது. சிலரை குற்றப்பரம்பரையினர் என அடையாளப்படுத்தினர். சாதி சார்புகளை மனதில் கொண்டு சில சட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆட்சிமுறையில் அவர்களை நேசமாக வைத்துக் கொண்டனர். ஸ்ரீநிவாஸ் என்பவரின் கருத்துப்படி பார்க்கும் போது, இதனால் சாதி உணர்வு அதிகரித்து சாதிகளுக்கிடையேயான போட்டி கூடியது. மண்டல எல்லைகளையும் மீறி சாதி அமைப்புகள் உருவாகி வளரவும் பிரிட்டிஷ் அரசிடம் பேரம் பேசி சில சலுகைகளைப் பெறவும் இது வழிவகுத்தது. ஜெயல் என்பவர் கூறுவதுபோல, சாதி என்பது சடங்கு அமைவுகளைப் பொறுத்து உருவானது என்பது மாறி, அதற்கு வெளியே வந்து அரசியலிலும், தேசிய இயக்கத்திலும் கலந்துவிட்டது. சாதிவேற்றுமைகளைக் குறைப்பதற்கு தேசியத் தலைவர்கள் முயற்சித்தனர். சமூகநீதி தொடர்பான பிரச்னைகளை விடுதலைப் போராட்டத்துடன் உட்படுத்த முயன்று தோல்வி கண்டனர்.

**சுதந்திர இந்தியாவில் சாதி:**

முன்பு விவாதித்தது போல, காலனி ஆட்சியின்போது சாதிக் குழுக்கள் தங்களுக்குள் ஒன்றுகூடி அடையாள உணர்வு கொண்டதாக மாறின. சுதந்திரம் பெற்றபோது சில சாதியினர் உரக்கப்பேசி கோரிக்கைகளை முன்வைத்தனர். சுதந்திர இந்தியாவிற்கான அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் சமத்துவம்உள்ள,

நியாயமான, சகோதரத்துவமான, நேரிய சமூகம் அமைய வேண்டும் என்று உறுதி கொண்டிருந்தனர். எனவே, 1950 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசியல்சட்டம் சாதியின் காரணமாக பாகுபாடு காட்டுவதோ, கட்டுப்பாடுகள் விதிப்பதோ, தீண்டாமையை கடைப்பிடிப்பதோ கூடாது என்று தெளிவாகத் தெரிவித்தது. சமத்துவம், சுதந்திரம், மனித உரிமை ஆகியவை அடிப்படை உரிமைகளாக்கப்பட்டன. அதே சமயத்தில், கால காலமாக உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பவர்களுக்கு துணைநிற்கும் விதத்தில் தாழ்த்தப்பட்டோர், மலைவாழ்மக்கள், பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு சாதகமான சில முன்ஏற்பாடுகளை அரசியல் சட்டத்தில் சேர்க்க வேண்டிய நிலையும் இருந்தது. இப்படி செய்வதன்மூலம் காலப்போக்கில் சமூகப்பொருளாதார வளர்ச்சியும், சமூகமாற்றமும் ஏற்பட்டு சமூகம் ஒன்றிணையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள் கழிந்த நிலையில் சாதியின் செல்வாக்கு சமூக, பொருளாதார நிலைகளில் குறைந்து வந்த போதிலும் அரசியலில் மிகவும் வலிமையான இடத்தைப் பெற்றுவருகிறது. சாதி அடிப்படையிலான அமைப்புகள் பல புதிதாக உருவாகி வருகின்றன. சாதியின் அடிப்படையில் முனைவாக்கம் அதிகரித்து வருகிறது. வன்முறையும் இடஒதுக்கீடு சச்சரவுகளும் அதிகரித்து வருகின்றன. தேசத்தின் அரசியல் -பொருளாதார கட்டமைப்பில் ஊடும்பாவுமாக சாதி ஆழப்பதிந்து விட்டது. மக்களாட்சி முறையின் காரணமாக வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை தரப்படுவதால் கல்வியறிவு இல்லாதவர்களையும் ஒன்றுதிரட்டும் தேவை ஏற்பட்டிருக்கிறது. இந்தச்சூழலில் பொருளாதாரத்திட்டங்கள் செயல்திறன், கொள்கைகள் இவற்றோடு சாதிமதங்களோடு உள்ள தொடர்புகளும் அரசியலில் அவசியத் தேவைகளாகி விட்டன. ஆகவே, அரசியல் சமூகமயமாக்கல், நிறுவனமயமாக்கல் ஆகியவற்றின் உள்ளீடுகளையும், இயக்கத்தையும் வரையறுப்பதில் குறிப்பிடத் தகுந்த ஒரு பங்கினை சாதிஅமைப்பு முறை செய்யத் தொடங்கியிருக்கிறது. இதன் காரணமாக சாதியம் அதிகரித்து வருகிறது.

**சாதியம்:-**

சாதி அல்லது அதன் உட்பிரிவைச் சேர்ந்த குழுக்கள் பிற சாதியினருக்கும், ஒட்டு மொத்த சமூகத்திற்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் சமூக, பொருளாதார, அரசியல் ஆதாயங்களை தங்களுக்கென அதிகரித்துக் கொள்ளும் போக்கினை சாதியம் என்று பொதுவாகக் கூறலாம். ஒரு சாதிக்கு விசுவசமாக இருப்பது எனும் தீர்க்கமான அரசியல் சித்தாந்தம் சமூக, பொருளாதாரம், அரசியல் ஆதாயங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அந்தக் குறிப்பிட்ட சாதியினரின் கண்மூடித்தனமான ஆதரவுக்கு வழிசெய்கிறது. முன்பு குறிப்பிட்டதைப் போல, இரண்டாம் நிலையிலுள்ள குழுக்களுக்கு ஒரு மேம்பட்ட அரசியல் கட்டமைப்பு இல்லாதிருக்கும் நிலையில் சாதிக்குழுக்கள் அதிகாரத்துக்கும், ஆதாயங்களுக்குமான முதன்மையான போட்டியாளர்களாக வந்துவிடுகின்றன. அரசியல்வாதிகள் தங்களுக்கு ஆதரவு தேவைப்படுகிறது என்பதற்காக சாதியக்குழுக்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இத்தகைய குழுக்களில் பெரும்பாலானவற்றிற்கு வளர்ச்சி பற்றிய அக்கறை இருப்பதில்லை. அதிகாரத்தையும், கட்டுப்பாட்டையும் அடைவதற்கான ஒருவழியாகவே தேர்தலையும், அரசியலையும் அவர்கள் பார்க்கின்றனர்.

தேர்தலில் பங்கேற்பது, அதில் செல்வாக்கு செலுத்துவது என்பதைத்தவிர தக்க அல்லது தகாத ஆதாயங்களைப் பெறுவதற்கான அழுத்தம் தருவதற்காகவும் சாதி பயன்படுத்தப்படுகிறது. இடஒதுக்கீடுகளுக்கு ஆதரவாகவும், எதிராகவும் தரப்படும் அழுத்தங்கள் இதன் விளைவாகவே ஏற்படுகின்றன. இது பலசமயங்களில் வன்முறைப் போராட்டங்களுக்கும், பொதுச்சொத்துக்கள் சேதப்படுத்தப்படுவதற்கும், வளர்ச்சி, நலம் இவற்றிற்கான கவனத்தை சிதறடித்து சட்டம் ஒழுங்கு பராமரிப்பை நோக்கி திசைதிருப்புவதற்கும் காரணமாகி விடுகிறது. மைரன் வெய்னர் (2006) குறிப்பிடுவதைப்போல, "தனிப்பட்ட வாழ்க்கையில் வாய்ப்புகளை வரையறை செய்வதில் முக்கியத்துவத்தை இழந்துவிட்டு, நிறுவனமயமாக்கப்பட்ட ஒரு கூறாகவும் அரசியல் அடையாளமாகவும் சாதி ஆகிவிட்டது". இப்போது சாதியின் அடிப்படையில் கல்விநிறுவனங்கள், தங்கும் விடுதிகள், வீட்டுவசதிசங்கங்கள் போன்றவை உருவாகி இருக்கின்றன. வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு முக்கியமான பங்களிப்பை இவை செய்வது உண்மைதான். ஆயினும், சாதியம் என்பது பொதுநிலையில் சமூக விரோதத்தை உருவாக்குவதோடு, சமூகப்பொருளாதார வளர்ச்சியைக் கடுமையாக பாதித்து புதிய இந்தியா உருவாவதில் தடையை ஏற்படுத்துகிறது.

**நீக்கவேண்டியதன் அவசியம்:**

இதுவரை விவாதித்ததைப் போல, சாதியம் நமது சமுதாயத்தின் சமூக, பொருளாதார, அரசியல் அமைவை உண்டழித்து வருகிறது. சமூக அளவில் சாதி மெள்ள அழிந்து வருகிறது என்பது நிதர்சனம். நவீன வாழ்க்கை முறை தியானச் சடங்குகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் பலவற்றை வழக்கொழிந்து போகும்படி செய்து வருகிறது. சமபந்தி போஜனங்களும், சாதி மறுப்புத் திருமணங்களும் இப்போது விலக்கப்பட்டவைகளாக இல்லை. குறைந்தபட்சமாக நகரங்களில் இத்தகைய நிலை நிலவுகிறது. பெரும்பாலோனார் குறிப்பாக பெரு நகரங்களில் வசிப்போரால் சாதிகளோடு தொடர்புடைய பழக்க வழக்கங்கள் ஏளனம் செய்யப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளில் தேர்தல்களில் குறிப்பாக மக்களவைத் தேர்தலில் சாதி பின்னுக்கு தள்ளப்பட்டது ஒரு சாதகமான அம்சமாகும். அரசியல் கட்சிகள் வளர்ச்சி, செயல்திறன், நல்லாட்சி, ஊழல் இவை பற்றி கருத்தைச் செலுத்தின. ஆயினும் சாதியை முன்நிறுத்தி அணிதிரட்டிய கட்சிகளும், குழுக்களும் இருக்கவே செய்தன. சாதியின் பங்கு தேர்தலில் ஓரளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, சாதிகளின் செல்வாக்கை அடியோடு ஒழிப்பதற்குமுன் குறைந்தபட்சம் அதன்செல்வாக்கைக் குறைப்பது தற்போது தேவையாக இருக்கிறது.

சாதியத்தைத் தணிப்பதற்கான முதல்படி கல்வி. கல்வி என்பது பள்ளிக்கல்வியையோ, முறைப்படியான எழுத்தறிவையோ மட்டும் குறிப்பதில்லை. சாதிஅமைப்பு முறையோடு பிணைந்துள்ள பழைய சிந்தனைகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கி பரப்புவதும் கல்வியில் அடங்கும். பல சமயங்களில் சாதி என்பது மதத்தின் ஒரு பகுதி என்றும், மதச்சடங்குகளின் பகுதி என்றும் புரிந்து கொள்ளப்படுகிறது. இது தவறானது. சாதித் தலைவர்களால் வளர்ச்சியும், ஆதாயங்களும் கிடைக்காமல் போகின்றன. தாங்கள் எப்படி ஏமாற்றப்படுகிறோம் என்பதை வாக்காளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பள்ளிகளில் மாணவர்கள் ஒன்றுசேர்ந்து விளையாடவும்,



**தீண்டத்தகாதவர்களுக்கு கூலிப் பணம் இலையில் மடித்து வைத்து உயரத்திலிருந்து கையில் போடப்படுகிறது**

சேர்ந்து உண்ணவும் ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

சமூகத்தை அதன் ஆதிகால இணைப்புகளிலிருந்து வெளிக்கொணர்வதற்கு சமூக கலாச்சார ஏற்றத்தாழ்வுகளை நீக்குவது அவசியமாகும். எந்த ஒரு சாதியையும் இழிவாக நினைப்பது தாழ்வாக கருதுவது ஆகிய செயல்கள்தான் அவர்களை ஒன்றுதிரட்டும் தலைவர்கள் உருவாகக் காரணமாகின்றன. சில நேர்வுகளில் சமூகப்பொருளாதாரக் காரணங்களும் ஏற்றத்தாழ்வை உருவாக்குகின்றன. எடுத்துக்காட்டாக, தாழ்த்தப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகள்,

ஒடுக்கப்பட்டவர்கள். ஜனநாயகம் இத்தகைய மக்களை ஒன்றிணைத்து அரசியல் வழிமுறையில் அவர்கள் பங்கேற்க சட்டபூர்வமாக வழிசெய்கிறது. சாதித்தலைவர்கள் தங்கள் சுயநலத்திற்காக இவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்ற நிலை இருந்தாலும்கூட ஒடுக்கப்படும் மக்கள் ஒன்றிணைவதை தவறு எனக் கூறமுடியாது.

சமூக அரசியல் சீர்திருத்தங்கள் செய்வதில் நாகரிக சமூகம் மிகமுக்கியமான மாபெரும் பங்கினை ஆற்றவேண்டியிருக்கிறது. சாதிப்பற்று, மதப்பற்று அடிப்படையில் வாக்காளர்களை ஒன்றுதிரட்டுவதும், தேர்தல்களில் சாதியும் மதமும் தவறாக கையாளப்படுவது பற்றியும், இதனால் சமுதாயத்தில் ஏற்படும் வேற்றுமைகள், சச்சரவுகள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் நாகரிக சமூகத்தின் கடமையாகும். சாதிமறுப்புத் திருமணங்கள், சமபந்தி விருந்துகள், பிறவகையான சமூகஉறவுகள் ஏற்படுவதற்கு நாகரிக சமூகம் பங்களிப்பு நல்கவேண்டும் பிரிவினை பேசும் கட்டுக்கதைகளை விட்டொழிக்க உதவவேண்டும்.

தேர்தல் ஆணையத்திற்கு முக்கியமான பங்கு இருக்கிறது. சாதியத்திற்கு முக்கியமான காரணம் தேர்தல் அரசியல். தேர்தலில் சாதிகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு தேர்தல் ஆணையம் வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்.

அரசியல் உறுதிப்பாடும், ஒத்தக்கருத்தும் மிகமுக்கியமானது. அநேகமாக அனைத்து அரசியல் கட்சிகளும். தேர்தலில் சாதிகளின் பங்களிப்பை எதிர்த்துக் குரல் கொடுத்தாலும், வேட்பாளர்களைத் தெரிவு செய்வதிலும், வாக்குகளைத் திரட்டும் போதும் சாதித்தலைவர்களுடன் கைகோர்த்துக் கொள்கின்றன. வாக்காளர்கள் சாதி அடையாளங்களை மறுத்து அரசாங்கத்தின் செயல்திறன், தலைமை ஆற்றல், வளர்ச்சி ஆகியவற்றை மட்டுமே மனதில்கொண்டு வாக்களிக்கின்றனர் என்று சமீபத்திய போக்குகள் காட்டுகின்றன.

இந்தப்போக்கு வலுப்படுத்தப்பட வேண்டும். குறுகிய கால ஆதாயங்களை கைவிட்டு அரசியல் கட்சிகள் தேசநிர்மாணம் பற்றிய நீண்டகால சிந்தனையைப் பற்றவேண்டும். வெறுமனே தேர்தலில் ஜெயிப்பதும், தோற்பதும் மட்டுமே ஜனநாயகமாகிவிடாது. ஜனநாயகம் என்பது அதைவிடவும் மேன்மையானது.

அர்த்தமுள்ள ஜனநாயகத்திற்கு வாக்காளர் உட்பட தேர்தலில் பங்கேற்கும் அனைவருமே பொறுப்பானவர்கள். வாக்காளர்கள் தங்கள் சுயவிருப்பத்தின் பேரிலும், வேட்பாளரின் தகுதியை மனதில் கொண்டும் வாக்களிக்க வேண்டும். சாதிய, வகுப்புவாத எண்ணங்களின் அடிப்படையில் வாக்களித்தலாகாது. இந்தியர்களாகிய நாம், சுதந்திரத்தின் மதிப்பு, சமத்துவம், நீதி, சகோதரத்துவம் ஆகியவற்றின் அடிப்படையிலான தேசத்தை உருவாக்குவதற்கு முன்வருவோம். அனைவருக்கும் தகுந்த வாழ்வதாரங்கள், உடல்நலம், கல்வி, ஆளுமை வளர்ச்சிக்கான வாய்ப்புகள் கிடைத்திட இந்தியர்கள் முன்வருவார்கள் என நம்புவோம். இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய தலைவர்களின் சிந்தனையில் இத்தகைய ஒருதேசம் தான் இருந்தது. சுதந்திரம் பெற்று 70ஆண்டுகள் கடந்த பிறகும் கூட அத்தகைய ஒருதேசத்தை எதிர்நோக்கி இன்னமும் நாம் காத்துக் கொண்டிருக்கிறோம்.

---

- **டாக்டர். அமர்ஜித் எஸ். நரங்**, புதுதில்லி, இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர்.

●

# புதிய இந்தியாவிற்கான புதுவகை வேளாண்மை விவசாயிகளின் நலன்களே திறவுகோல்

- டாக்டர் ஜெகதீப்சக்சேனா

“புதிய இந்தியா” என்பது இந்திய அரசாங்கத்தின் பேராவல்மிக்க பெரும்பார்வை. இந்தியத் திருநாட்டின் ரூபத்தை மாற்றி வளமிக்க, ஆரோக்கியமான, கல்விஅறிவு கொண்ட, தூய்மையான, பசுமை தேசமாக ஆக்குவதற்கு அரசு நாட்டம் கொண்டுள்ளது. ஆனால், வேளாண்மைப் பொருளாதாரம் பெரும்பான்மை வகிக்கும் நமது தேசத்தில் வேளாண்மை ஒரு மையமான பிரச்னையாக நீடித்து வருகிறது. ஏறத்தாழ 55% மக்களுக்கு வாழ்வாதாரமாகத் திகழ்வதுடன் உள்நாட்டு உற்பத்தியில் 14% அளவுக்கான பங்களிப்பையும் வேளாண்மை செய்கிறது. இந்த உண்மையைத் தெளிவாக உணர்ந்து கொண்டுள்ள தற்போதைய அரசாங்கம் வேளாண்மைக்கு மிக அதிகமான முன்னுரிமையை வழங்கியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் ஏராளமான சீர்திருத்தங்களை தீர்க்கமான முடிவையும் இந்திய அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. புதிய திட்டங்களுக்கும், புதிய முன்முயற்சிகளுக்கும் போதுமான நிதி உதவியை தொடர்ச்சியாக அதிகரித்து அளித்து விவசாயத்திற்கும், ஊரகப்பகுதிகளுக்கும் போதுமான ஆதரவைத் தரும் விதத்தில் இந்திய அரசாங்கம் உயர்முன்னுரிமையை அளித்துள்ளது. 2017-18 ஆம் நிதியாண்டில் இதற்கான நிதிஉதவி 1.87 டிரில்லியன் ஆக உயர்ந்துள்ளது. சென்ற நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட நிதியைக்காட்டிலும். இது 24% அதிகமாகும். 2016-17 இல் காணப்பட்ட மிக அதிகமான அளவு உணவு உற்பத்தியான 274 டிரில்லியன் டன் புதிய கொள்கைகள், திட்டங்களின் வெற்றிக்கு சாட்சியம் கூறும். ஊக்கம் தளராத விவசாயிகள், புதுமைகள் படைத்த விஞ்ஞானிகள், விரிவாக்கப் பணியாளர்கள் மற்ற பங்களிப்பாளர்கள்




செயல்படுத்தியுள்ளது. மேல்நோக்கி உந்தும்விதத்தில் 2022ஆம் ஆண்டுவாக்கில் இந்தியா சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் ஆகும் வேளையில் விவசாயிகளின் வருவாயை இரண்டு மடங்காக உயர்த்துவது என்ற யாவருமே இந்த வெற்றிக்கு பொறுப்பாவார்கள். மேலும், 2011-14 உடன் ஒப்பிடும்போது மீன் உற்பத்தியும், பால் உற்பத்தியும் மிக அதிகமான வளர்ச்சியை எட்டியுள்ளன. மீன்உற்பத்தி 20%

அளவுக்கும் பால்உற்பத்தி 17% அளவுக்கும் 2014-17 ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது. வேளாண்துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சிவிகிதம் 2016-17 இல் 4.4% ஆக பதிவாகியுள்ளது. விவசாயிகளின் வருமானத்தை 2022இல் இருமடங்காக உயர்த்த வேண்டுமானால் இந்த வளர்ச்சிவிகிதம் 10.4% ஆக அதிகரிக்க வேண்டும்.

**புதுமையான திட்டங்களின் மூலம் திறம்மிக்க நகர்வுகள்**

வேளாண்மை விவசாயிகள் நலன் அமைச்சகம் நவீன வேளாண்மை, விவசாயிகள் நலன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு திறமிக்க 7 கூறுகள் உடைய ஒரு திட்டத்தை புதிய இந்தியாவை உருவாக்குதற்காக விருத்தி செய்துள்ளது. விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக உயர்த்துவதற்கான வழிவகைகள் பற்றி விரிவாக ஆராய்ந்த வல்லுநர் குழு நான்கு தொகுப்புகள் கொண்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கையின் ஒரு பகுதியாக திறமிக்க செயல்திட்டம் இருக்கிறது. 2015-16இல் விவசாயக் குடும்பங்களின் சராசரி வருவாயான ரூ. 96,703 என்பதை 2022-23இல் 193,400 ஆக உயர்த்துவதை இந்த செயல்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, விவசாயிகளுக்கு இருமடங்கு வருவாய் என்ற இலக்கை எட்டுவதற்கு இந்தியாவிற்கு தனியார், அரசு முதலீடாக



ரூ.1486 டிரில்லியன் (2004-05 விலைவாசி நிலவரப்படி) தேவைப்படுகிறது. பயிர்உற்பத்தி அதிகரிப்பு, உற்பத்திச் செலவைக் குறைத்தல், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல், வேளாண் சந்தைகளை சீர்திருத்துதல் ஆகியவற்றில் இந்த செயல்திட்டம் கவனம் செலுத்துகிறது. வேளாண் விளைபொருள்களின் மதிப்பைக் கூட்டுதல், பயிர்க்காப்பீடு, பேரிடர் நிவாரணம், அபாயநேர்வுகளை மட்டுப்படுத்துவது, கூடுதல் மதிப்புடைய பிரிவுகளான தோட்டக்கலை, பால் பொருள்கள் ஆகியவற்றை மேம்படுத்துவது ஆகியவை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.




தண்ணீரைத் திறம்படப்பயன்படுத்துவது, பாசன வசதிகளுக்கான ஏற்பாடு போன்றவற்றை ‘ஒவ்வொரு துளிநீருக்கும் அதிக விளைச்சல்’ என்ற திட்டத்தின்கீழ் மேம்படுத்துவதற்கு அரசு கடுமையாக முயற்சித்து வருகிறது. நுண் நீர்ப்பாசன நுட்பங்களின் மூலமாக பாசனப் பரப்பை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளும் உள்ளன. பிரதம மந்திரியின் விவசாய நீர்ப்பாசனத்திட்டம் (PMKSY) நுண் நீர் பாசனப்பரப்பை கணிசமாக அதிகரித்துள்ளது. 2013-14இல் 4.3 இலட்சம் ஹெக்டேராக இருந்த பாசனப்பரப்பை 2016-17இல் 8.3 இலட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. பிரதமர்

தனது சுதந்திரதின உரையில் (2017) PMKSY திட்டத்தின்கீழ் 30 செயல்திட்டங்கள் நிறைவடையப் போவது பற்றி திட்டவட்டமாக அறிவிப்பு செய்தார். மேலும் 50 செயல்திட்டங்களுக்கு வேலை தொடங்கப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். அரசாங்கத்தின் தனித்துவமான மண்வள அட்டைத்திட்டம் விவசாயிகளுக்கு பயிரிடுவதற்கு ஆகும் செலவைக் குறைக்க உதவுகிறது. வேதி உரங்களை சீரான முறையில் பயன்படுத்துவதற்கும், மண்ணின் உற்பத்தித்திறனை மேம்படுத்தி நீடித்திருக்கச் செய்யவும் மண்வள அட்டைத்திட்டம் உதவுகிறது. இதுவரை, 7.1 கோடி மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தேசம்முழுவதும் பெரும்படியான அளவில் மண்பரிசோதனை பகுப்பு முறைகள் நடைபெற்று வருகின்றன. பாரம்பரிய விவசாய மேம்பாட்டுத்திட்டம் (PKVY) இயற்கை உரங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் பரப்பளவை அதிகரித்து விவசாயிகளின் வருவாய் உயர்வதை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இயற்கை விவசாயத்திற்கு ஆகும் செலவு ஒப்பீட்டு அளவில் குறைவானதாக இருப்பதாலும், இயற்கை விவசாய விளைபொருள்களின் விலை அதிகமாக இருப்பதாலும் விவசாயிகளின் வருமானம் உயரும். விவசாயிகளைத் திரட்டி இயற்கை வேளாண்மையை தொகுப்பு முறையில் வணிகரீதியாக செய்வதற்கு வழிசெய்யப்படும். இதுவரை இந்திய அரசின் நிதிஉதவியுடன் 9100 தொகுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்கள் விளைவிக்கும் பொருட்களை சேகரித்து இயற்கை விளைபொருள்களை அவற்றிற்கான சந்தைகளுக்கு அனுப்பிவைப்பதற்கும் அரசாங்கம் நிதிஉதவி அளிக்கும்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தவும், விவசாயிகளுக்கு வருவாய் நீடித்து கிடைப்பதற்கும் பிரதம மந்திரியின் பயிர்க்காப்பீட்டுத்திட்டம் (PMFBY) ஒரு தலைமையான திட்டமாகும். இதன்மூலம் எல்லாவிதமான தாணியங்கள், எண்ணெய் வித்துக்கள், வணிகப் பயிர்கள் ஆகியவற்றிற்கும் பயிர்க்காப்பீடு கிடைக்கிறது. மிகக்குறைவான காப்பீட்டுக் கட்டணத்தில் ஒருபருவம் ஒரேவிகிதம் என்ற அடிப்படையில் காப்பீடு செய்யப்படுகிறது. பயிர் சுழற்சியில் ஏற்படும் பாதிப்புகளுக்கு இந்தக்காப்பீடு உதவுகிறது. விதைப்பு முதல் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் வரை இதன் மூலம் காப்பீட்டைப்பெறுகின்றன. 5.75 கோடிக்கும் அதிகமான விவசாயிகள் இந்தத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். இன்னும் அதிகமானோர் சேர்க்கப்பட இருக்கின்றனர். இந்தக்காப்பீடு 2016-17 இருந்த 30% பயிர்ப்பரப்பு என்ற அளவில் இருந்து 2017-18இல் 40% பயிர்ப்பரப்பு என்ற அளவிற்கு அதிகரிக்கப்பட உள்ளது. விவசாயத்தில் முதலீடுகளை ஈர்க்கவும் இந்தத்திட்டம் உதவுகிறது. விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதில் மிக முக்கியமான முன் தேவையாக இருப்பது விளைபொருள்களுக்கு சந்தையில் நல்ல விலை கிடைப்பதுதான். ENAM எனப்படும் தேசிய வேளாண் சந்தையின் புதுமையான முயற்சிகளின் மூலம் 13 மாநிலங்களில் உள்ள 410 மண்டிகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இவை வியாபாரத்தையும், கொடுக்கல் வாங்கலையும் ஒரு பொதுவான மின்னணு மேடையிலிருந்து நடத்தும். 63 பொருள்களுக்கான வியாபார அளபுருக்கள் இதுவரை உருவாக்கப்பட்டு இருக்கின்றன. ENAMஇல் 45இலட்சம் விவசாயிகள் பதிவு செய்துகொன்டுள்ளனர். இந்த சீர்திருத்தம் விவசாயிகளின் வருமானத்தை வெற்றிகரமாக அதிகரித்துள்ளது. வேளாண் விளைபொருள்களை மோசமான விலைக்கு விற்பதையும், இடைத்தரகர்களின் தொல்லையையும் இது தவிர்த்துள்ளது. இதன் ஒரு கூடுதல் தாக்கமாக பொருள்களின் மொத்த விற்பனை விலை அதிகரித்துவருகிறது. பயிர்களின் விலையில் ஏற்படக்கூடிய 13% உயர்வு விவசாயிகளின் வருவாயில் 9.1 உயர்வைக்கொண்டுவரும் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். எனினும் விவசாயிகளுக்கு அதிக விலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதால் அவர்களின் வருவாயும் கூடும். ஆனால், இந்தத்திட்டங்கள் கால நிர்ணயம் செய்து அதற்குள் செயல்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கும்.

### இலாப அதிகரிப்புக்கு உற்பத்தி மேம்பாடு:

சமீபத்தில், நிதி ஆயோக் 'விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்' எனும் பொருளில் ஒரு கொள்கை வரைவை வெளிக்கொணர்ந்திருக்கிறது. கள அளவிலான செயல்திட்டத்தினை இது விரித்துரைக்கிறது. இந்த வரைவு நீர்ப்பாசனத்தின்

அவசியமான பங்களிப்பு பற்றியும் உற்பத்தியை அதிகரிப்பதற்கான புதிய தொழில்நுட்பத்தேவைகள் பற்றியும் வலியுறுத்துகிறது. விவசாயிகளிடம் இருக்கும் அதே அளவு நிலத்திலிருந்து வருவாயை அதிகரிப்பதற்கு இந்த வரைவு துணைபுரியும். அதிக விளைச்சல் தரக்கூடிய மேம்படுத்தப்பட்ட புதிய பயிர் இரகங்களைப்பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். வலிமையான விரிவாக்கக் களப்பணிகள் மூலமும், மலிவு விலையில் விதைகளை வழங்குவதன் மூலமும் இது சாத்தியமாகி இருக்கிறது. வேளாண் ஆய்வுக்கான இந்தியக்குழுமம் (ICAR) என்ற உயர் ஆய்வு அமைப்பு 600 வகையான மேம்பட்ட பயிர் இரகங்களை கடந்த 3 ஆண்டுகளில் வெளியிட்டுள்ளது. இதனால் உற்பத்தி அதிகரிக்கும். அதோடு கூட, பல புதிய வேளாண் நுட்பங்கள் பிரபலப்படுத்தப்படவேண்டும். துல்லிய பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம், வளங்களைப்பாதுகாக்கும் தொழில்நுட்பம், பாதுகாக்கப்பட்ட சாகுபடி போன்றவை சில உதாரணங்கள். இந்த முறைகள் மிகுந்த ஆற்றல் கொண்டவை, உற்பத்திக்கு உறுதி அளிப்பவை. இதைப்போலவே, சமன் செய்யும் கருவி, துல்லிய விதைப்புக்கருவி, நடவுக்கருவி போன்ற கருவிகளும், நவீன விவசாய நடைமுறைகளான திருந்திய நெல் சாகுபடி (SRI), நேரடி நெல் விதைப்பு, உழவில்லா விவசாயம், படுகைத்தோட்டப்பயிர்கள், வரப்புப்பயிர்கள் போன்றவையும் சிறப்பான வருவாயைத்தரக்கூடியவை. விவசாயிகளின் வருவாய் அதிகரிப்புக்கு துணை செய்யக்கூடியவை.

பயிர்களின் நெருக்கத்தினை அதிகரிப்பது தொழில்நுட்பம் சார்ந்த இன்னொரு வாய்ப்பாகும். நீர்ப்பாசனவசதிகள், புதிய தொழில்நுட்பங்கள் ஆகியவை மூலம் காரிப், ரபி போன்ற முக்கியமான பயிர்ப்பருவங்களைத் தவிர்த்த பிற சமயங்களிலும் குறுகிய காலப் பயிர் செய்யும் வாய்ப்பு உள்ளது. அதைப்போலவே, ஒருங்கிணைந்த பண்ணைய முறை மாதிரிகளும், உருவாக்கப்பட்டுள்ளன. மோசமான பருவகாலங்களிலும் நிலையான வருமானத்தைத் தரக்கூடியவை இவை. உயர் மதிப்புள்ள பயிர்களைப்பயிரிடுவது (பழங்கள், காய்கறிகள், நார்ப்பயிர்கள், சுவையூட்டும் மசாலாப்பயிர்கள், மருத்துவப்பயிர்கள், வாசனைப்பயிர்கள்) விவசாயிகளின் வருமானத்தைப்பெருக்க வல்லவை. வனவியல் முனைவுகள், வேளாண் உற்பத்திப்பொருள்களைப் பதனம்செய்தல் போன்ற துணைத்தொழில்களும் விவசாயிகளின் வருவாயைப் பெருக்கக்கூடியவை. நிதி ஆயோக்கின் கொள்கை வரைவு விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை அவர்களின் வருமானத்தைப் பெருக்குவதற்காகவும், வாழ்வாதாரத்திற்காகவும் வேறு தொழில்களுக்கு மாற்றுவது பற்றியும் பரிந்துரைத்துள்ளது. அரசாங்கத்தின் சமீபத்திய முன் முயற்சியான திறன் மேம்பாடும் கணிசமான பங்களிப்பைச் செய்யும். விவசாயிகள் தங்களின் திறன்களை மேம்படுத்திக்கொண்டு அதிக வருவாய் ஈட்டுவதற்கு உதவும்.

**புதிய பார்வை:**

கடந்த காலங்களில் அரசின் கவனம் முழுவதும் உணவுப்பாதுகாப்பிற்காக வேளாண் விளைச்சலை அதிகப்படுத்துவது பற்றி மட்டுமே இருந்துவந்தது. அண்மைக்காலமாக, கொள்கை வகுப்பவர்கள் விவ்சாயிகளின் வருமானத்தை உயர்த்தவேண்டும் என்று கருதுகின்றனர். இதற்கான முதல் படியாக வேளாண் அமைச்சகத்தின் பெயர் விவசாயம், விவசாயிகள் நலத்துறை என்று 2015இல் மாற்றப்பட்டுள்ளது. அது தொடங்கி, விவசாயிகளின் வருமானத்தை 2022ஆம் ஆண்டு வாக்கில் இருமடங்காக்கும் நோக்கத்தில் பல்வேறு சீர்திருத்தங்கள், கொள்கைகள், முன்முயற்சிகள் போன்றவை செய்யப்பட்டுவருகின்றன.

புதிய பார்வையானது விவசாயிகளின் துயரத்தைக்குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. விவசாயிகளுக்கும், விவசாயம் அல்லாத பிற தொழில்களில் பணிபுரிவோருக்கும் இடையே சரிசமமான நிலையை உருவாக்குவதற்கு இந்தப் புதியபார்வை உதவிடும். புதிய இந்தியா என்ற கனவை நனவாக்கிடும் வகையில் இந்தியாவின் வேளாண்துறை சீரமைக்கப்பட்ட அதன் வடிவில் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

---

**டாக்டர். ஜெகதீப்சக்சேனா** முன்னாள் முதன்மை ஆசிரியர் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம் புதுதில்லி.

**2022வாக்கில் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்கும் விவசாயம், விவசாயிகள் நல அமைச்சகத்தின் மூன்று ஆண்டு செயல்திட்டத்தின் (2017-19) முக்கியமான அம்சங்கள்:**

- விதைகிராமம் திட்டம் 30 ஆயிரம் கிராமங்களிலிருந்து 60 ஆயிரம் கிராமங்களுக்கு விரிவாக்கப்படும். பஞ்சாயத்து அளவில் 500 விதை உற்பத்தி செயலாக்க அலகுகள் அமைக்கப்படும்.
- 1000 சிறு ஆய்வகங்கள் மண்வளப்பரிசோதனைக்காக உள்ளூர் தொழில்முனைவோர் மூலம் கிராமங்களில் ஏற்படுத்தி நடத்தப்படும்.
- நபார்டு வங்கியின் மூலம் 5000 கோடி தனிப்பட்ட நிதித்தொகுப்பு செயல்படும். 4.8 மில்லியன் ஹெக்டேர் நிலம் நுண்நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்.
- ஆண்டுக்கு 1 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் தீவிர பயிர் சாகுபடி அதிகரிக்கப்படும். நெல் விளையாத தரிசு நிலங்களில் பருப்புகளும், எண்ணெய்வித்துக்களும் பயிர் செய்யப்படும். 2020ஆம் ஆண்டு வாக்கில் 3 மில்லியன் ஹெக்டேர் நிலம் இந்தப்பயன்பாட்டிற்கு வரும்.
- அறுவடைக்குப்பிந்தைய கட்டமைப்புகளுக்காக 5இலட்சம் மெட்ரிக் டன் குளிர்ப்பதன சேமிப்பு அறைகள், 1000 பொதி அறைகள், 150 பழுக்க வைக்கும் அறைகள் உருவாக்கப்படும்.
- 350 விவசாய உற்பத்தி அமைப்புகளின் மூலம் 2.5லட்சம் ஹெக்டேரில் இயற்கை வேளாண்மை செய்ய்யப்படும்.
- ENAM சந்தையில் 585 வேளாண்விற்பனை சந்தைகள் உருவாக்கப்படும்.
- அதிக எண்ணிக்கையிலான சிறு, குறு விவசாயிகளுக்கு குறுகியகாலக்கடன் வழங்கப்படும். தற்போதுள்ள 43 விழுக்காட்டிலிருந்து, 201819இல் 50 விழுக்காடாக இது அதிகரிக்கும்.
- பயிரிடப்படும் அதிகப்படியான நிலங்கள் பிரதம மந்திரி பயிர்க்காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும். பருவநிலையை அடிப்படையாகக் கொண்ட பயிர்க்காப்பீட்டுத்திட்டம் தற்போதுள்ள 30 விழுக்காட்டில் இருந்து 2017-18இல் 40% ஆகவும், 201819இல் 50% ஆகவும் அதிகரிக்கப்படும்.
- பால் கொள்முதல் செய்யும் கட்டமைப்பு வலுவாக்கப்பட்டு ஒட்டுமொத்தப் பால் கொள்முதல் செய்யப்படும் கிராமங்கள் 16 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரமாக உயர்த்தப்படும்.
- நீலப்புரட்சியைத் தக்க வைத்துக்கொள்ளும் விதத்தில் மீன் வளர்ப்பு அதிகரிக்கப்படும்.
- தேசிய பால் பொருள்கள் மேம்பாட்டுக்கழகத்தைப்போல தேசிய கால்நடை மேம்பாட்டு முகமை அமைக்கப்படும்.

நவம்பர் மாத இதழில்

# ‘சிறு, நடுத்தர முனைவகங்கள்’

பற்றிய கட்டுரைகள் இடம் பெறும்.

# மாற்றத்தைக் கொண்டு வருவதில் முதன்மையானவராக இருங்கள்

- டாக்டர். உன்னத் பண்டிட்

*வாழ்க்கை என்பது புதுமையாக்கமே. புதுமை படைத்தல் இல்லாமல் போனால் தேக்கமே மிஞ்சும் - **பிரதமர்.***

அரசாங்கங்கள், அவற்றின் முன்முயற்சிகள் இவை மட்டுமே புதிய இந்தியாவை உருவாக்கிவிடமுடியாது. மாற்றங்களுக்கான சத்தியை ஒவ்வொரு இந்தியக்குடிமகனும் வழங்கிடவேண்டும். - பிரதமர்.

சுதந்திரம் அடைந்த 75வது ஆண்டை 2022இல் கொண்டாட இருக்கும் வேளை இந்தியாவிற்கு மீண்டும் சக்தி ஊட்டுவதற்கும், புதிய இந்தியாவை அமைப்பதற்கும் உகந்த தருணமாகும். ஊக்கமளிக்கும் இந்திய, உற்சாகம் தரும் இந்தியா, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான இந்தியாவே புதிய இந்தியாவாகும். வளர்ச்சிக்கான பங்களிப்பை ஒவ்வொரு இந்தியக்குடிமகனும் ஏதோ ஒரு வகையில் வழங்கிடமுடியும். என்று பிரதமர் மோதி அவர்கள் கூறுகிறார்.

தேசத்திற்கு கூடிப்பணி செய்யவும், சேவை புரியவும் புதிய இந்தியா வாய்ப்பளிக்கிறது. உண்மையான சுதந்திரம், ஒற்றுமை, முழு நிறைவு ஆகியவற்றை புதிய இந்தியாவிற்கு வழங்குவதற்கான நம்பவியாலத வாய்ப்பை நாடு நமக்கு வழங்குகிறது.

மத்திய அரசின் சிந்தனைச்சுரங்கமான நிதிஆயோக் புதிய இந்தியாவிற்கான முன் முயற்சியை முதன் முதலில் மேற்கொண்டது. 'மாற்றம் கொண்டு வரும் வீர முதல்வர்கள்' என்பதன் மூலம் வெவ்வேறு தொழில் நிறுவனங்கள் தொழில் முனைவோரை அரசுடன் நேரடியாக உரையாடவும், புதிய இந்தியா பற்றிய தங்களது கனவுகளைப் பகிர்ந்துகொள்ளவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் விளக்கிய காட்சிகளையும், தெரிவித்த கருத்துகளையும் அரசாங்கத்தில் முக்கியமான முடிவுகளை எடுக்கும் குழு ஒன்று செவி மடுத்தது. திறமையான அரசாட்சிக்கும், கொள்கை உருவாக்கத்திற்கும் பயன்படக்கூடியவையாக அவை இருந்தன. சீர்திருத்த வழிமுறைகளின் போது எதிர்ப்படக்கூடிய பிரச்னைகள், சவால்கள் பற்றிய 360 டிகிரி பார்வை இதன் மூலம் கிடைத்தது. படைப்புத்திறன் கொண்ட, புதுமையான தொழில்நுட்பங்களுக்கு வழிவகை செய்வது, வழிமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது ஆகியவற்றின் மூலம் புதிய இந்தியா எனும் கனவை அடைவதற்கு இந்த முன் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

### ஆட்சிமுறை மாதிரியை மாற்றி அமைத்தல்:

நமது தேசத்தின் வளர்ச்சிக்கு அரசாங்கம் ஒரு முன்முயற்சியை மேற்கொன்டுள்ளது. அனைத்து குடிமக்களுக்குமாக அரசாட்சியைதிறம்பட நடத்துவதற்கு அரசால் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. பயனற்ற, ஆனால் நடைமுறையில் இருந்துவந்த1200க்கும் அதிகமான பழைய சட்டங்கள் நீக்கப்பட்டன. வங்கியும் நிதித்துறையும் சமுதாயத்தின் கடைநிலையில் இருக்கும் மனிதனையும் எட்டும் விதத்தில் மாற்றியமைக்கப்பட்டன. பிரதமரின் ஜன்தன் திட்டம் இதற்குத் துணை செய்தது. ஆட்சிச் செயல்முறைகள் பல நீக்கப்பட்டன. கண்ணுக்குப்புலனாகும் விதத்திலான வெளிப்படையான வளர்ச்சி அரசின் மின்னணு சந்தையின் (GEM) மூலம் தொழில் செய்வதற்கும், அரசுடன் பங்குதாரராக இருப்பதற்கான வாய்ப்பு கிடைக்கவும் இது உதவியது. திறமையான அரசாட்சியானது வளர்ச்சியையும், நேர்மறை சிந்தனைகளையும் அனைத்து மாநிலங்களிலும்

ஊக்குவித்தது. சமூகத்திற்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கு அரசுகள் ஊக்குவிக்கப்பட்டன. பாலின சமத்துவம், வேளாண்மை வளர்ச்சி, பருவநிலை மாற்றம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தகவல் தொடர்பு, மின்னணு நிதிப்பரிமாற்றம் இவை போன்ற சிறப்பான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டன. இந்தக் கனவுகளையும், இளைஞர்களின் இலட்சியத்தையும் புதிய இந்தியா நனவாக்கி வருகிறது.

நாளைய கண்டுபிடிப்பாளர்களாக ஒரு மில்லியன் குழந்தைகளையும், இளைஞர்களையும் உருவாக்குவதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது. விடுதலை வேண்டி மகாத்மா காந்தி செய்த போராட்டத்தை ஒத்த மனநிலையில் புதுமையாக்கமும் வளர்ச்சியை நோக்கை கூடி உழைக்கும் போது தேசம் சந்தித்துவரும் எல்லா பிரச்னைகளையும் நம்மால் தீர்க்கமுடியும். புதிய இந்தியாவைக் கட்டமைப்பதற்கு ஒரு சமுதாயமாக நாம் நமது சக்தியை ஒன்று திரட்டி சவால்களுக்குத் தீர்வு காண சூளுரைக்க வேண்டும். அரசாங்கத்தின் சீரிய முன்முயற்சிகளை அடல் புதுமையாக்கத்திட்டம், தேசிய IPR கொள்கை, தொடங்கிடு இந்தியா, இந்தியாவில் உற்பத்தி, நிதி ஆயோக் போன்றவை மாற்றத்தின் நாயகர்களை வழிநடத்தும். மின்னணுப் பொருளாதாரம் வளர்ச்சியைத் தூண்டக்கூடிய எரிபொருளைப் போல இருக்கும்.

**அடல் புதுமையாக்கத்திட்டம் (AIM):**

புதுமைகள் படைத்தல், தொழில் முனைவு, சிந்திப்பது எப்படி என்று கற்றுத்தரும்




இட்டுச் செல்லும். தேசத்திற்காகப்பணியாற்றிய ஒவ்வொருவரையும் சிறப்பானவர்களாக அவர் உணரவைத்தார். விடுதலைப்போராட்டத்தை ஒரு பெருந்திரள் இயக்கமாக மாற்றினார். அதன் முடிவுகளை நாம் கண்டோம். அதைப்போலவே, இந்தியாவின் வளர்ச்சியையும் ஒரு மக்கள் இயக்கமாக நாம் மாற்றவேண்டும். நாம் ஒன்று

கல்வியைவிட எதை சிந்திப்பது என்பது பற்றிக் கற்றுத்தரும் கல்வித் திட்டம் ஆகியவை மூலம் வளர்ச்சியைத் தூண்டும் நோக்கத்தோடும் AIM உருவாகப்பட்டது. ஆயினும், நாம் ஜாக்கிரதை, வெளியில் போகாதே, பேசாதே, அதில் ஏறாதே, அழுக்காகிக்கொள்ளாதே, இதைச்செய்யாதே, அதைச்செய்யாதே என்றெல்லாம் கூறி

குழந்தைகளை பலவற்றிற்கு இணங்கிப்போகும்படி செய்துவிடுகிறோம். இத்தகைய வழிகாட்டுதல்கள் நமது அனுபவத்திலிருந்து பெறப்பட்டவை. குழந்தையின் சிந்தனையில் இவை இடைவிடாமல் ஆதிக்கம் செலுத்தி அவர்கள் அச்சம், ஒருசார்பு, ஆர்வமின்மை, நம்பிக்கைஇன்மைபோன்ற பண்புகளைவளர்த்துக் கொள்ளும்படி செய்துவிடுகின்றன. இதன் விளைவாக, அந்தக் குழந்தை ஒரு சில நண்பர்களுடன் மட்டுமே பழகுகிறது, ஒரு சில புத்தகங்களை மட்டுமே படிக்கிறது, ஒரு சில சமுதாயக்குழுக்களுடன் மட்டுமே சேர்கிறது. இப்படிப்பட்டக் குழந்தைகள் அகத்தூண்டுதல், ஆர்வம், உற்சாகம் குறைந்தவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

இந்தக்கட்டுப்பாடுகளை விரிவுபடுத்திக் கொண்டு வயது வந்தவர்களாகிய நாம் செயல்படுகிறோம். மிகச்சிறந்த ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு அவசியமான மூன்று மனஇயல்புகளை உருவாக்க முயற்சிக்கிறார். 1.திறனாய்வு சிந்தனை ஆற்றல் 2. பாதுகாப்பு உணர்வு 3. ஒவ்வொரு சூழலிலும் அமைதியாக சிந்திக்கும் திறன் ஆகியவை உள்ளார்ந்த திறன்களை உகந்த வகையில் அதிகரித்துக் கொள்வதற்கு உதவக்கூடியவை. சரியான விஷயங்களை சரியான முறையில் உற்று நோக்குவதற்கு பெற்றோரும், ஆசிரியரும் குழந்தைகளுக்குக் கற்றுத்தரவேண்டும்.

“சராசரி குழந்தைகள் எளிய, முட்டாள்தனமான கேள்விகளை தினமும் கேட்கின்றன. ஆனால் குழந்தைகள் பள்ளிச்சூழலுக்குப் பழக்கப்பட்டுவிடும் 10, 12வயதுகளில் சிந்தனை மிகுந்த கேள்விகளைக் கேட்பதைக்காட்டிலும் சரியான விடைகளைப் பெறவேண்டியது அவசியம் என்பதைப் புரிந்துகொள்கின்றன”.

**சிறிய மனங்களில் பெரிய யோசனைகளை வளர்த்தல்:**

வெறும் கைகளால் வெடிபொருள்களைத் தேடி ஆபத்தான பகுதிகளில் ஆராய்வது கடினமான, ஆபத்தான, தொல்லைகள் நிறைந்த வழிமுறையாகும். முதலில் நிலத்தின் மேலிருக்கும் செடி கொடிகளை அப்புறப்படுத்த வேண்டும். பிறகு உலோகத்தைக் கண்டறியும் கருவியைக்கொண்டு ஆராய வேண்டும். ஆபத்தான பொருள்கள் தென்பட்டால் அவற்றை வெளியில் எடுத்து செயல் இழக்கச் செய்யவேண்டும்.

சட்டிஸ்கரில் ஹத்பந்த் என்ற இடத்தில் உள்ள அரசு மேல் நிலைப்பள்ளி மாணவர்கள் தங்களின் திறமையைப் பயன்படுத்திக்கொள்ள பயிற்றுவிக்கப்பட்டனர். வெடிபொருள்களைத் தேடும் பிரச்னைக்கு நல்ல தொழில்நுட்பத்தைக் கண்டறிய அவர்கள் முயன்றனர். ஒலி அலைகளின் அதிர்வெண்ணில் மாற்றம் ஏற்பட்டால் அதனைக் கண்டுபிடிக்கக் கூடிய உணர்வியைக் கண்டுபிடித்தனர். வெடிபொருள் இருந்தால் அது எச்சரிக்கை ஒலி எழுப்பி காட்டிக்கொடுத்துவிடுகிறது. இந்தக் கருவியை நவீன கைபேசி, புளூ டூத் போன்றவற்றின் மூலம் தற்போதிருக்கும் வழிமுறைகளைக் காட்டிலும் அதிகமான வேகத்தில் தொலைவில் இருந்து கட்டுப்படுத்தலாம். இதன் முன்மாதிரி வடிவம் 9 வோல்ட் பேட்டரியில் இயங்கக் கூடியது. 5 நிமிட நேரத்தில் இந்தக்கருவியை ஒன்று சேர்த்துப் பொருத்திவிடமுடியும்.

பார்வைக்குறைபாடு உடையவர்கள் உலகம் முழுவதும் ஒருகோலைப் பயன்படுத்தி தடைகளைக் கண்டறிந்து நடந்து செல்கின்றனர். இது பிரச்னையே இல்லாத வழிமுறையல்ல. கோலின்அசைவுகளை மட்டும் வைத்துக்கொண்டு முன்னேறிச் செல்வது பாதுகாப்பானதல்ல. ஒரு சிறிய தொழில்நுட்பம் கண்டறியப்பட்டால் அது இவர்களுக்கு உதவும்.

பெங்களூரு உத்தரஹல்லி உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் பார்வையற்றோர் அணிந்து கொள்ளக்கூடிய ஒரு கருவியை உருவாக்கியுள்ளனர். இதிலுள்ள உணர்வி ஒலிஅலைகளை எழுப்பி தடைகளைக் கண்டறிகிறது. இதைப்பயன்படுத்துபவர் இந்த உணர்வி எழுப்பும் அதிர்வுகள், அசைவுகளைக் கொண்டு விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ள இயலும்.

தற்போது, அனைத்து அலுவலகங்களிலும், பல்வேறு அமைப்புகள் கொண்ட கட்டடங்களிலும் பெருத்த அளவில் தீத்தடுப்பான்கள் காணப்படுகின்றன. போக்குவரத்து நெரிசல், குறுகலான சாலைகள் ஆகியவற்றின் காரணமாக தீயணைப்பு வாகனங்கள் சரியான நேரத்திற்கு வந்து சேர முடிவது இல்லை. இதற்கு செலவுகுறைவான ஒரு தொழில்நுட்பம் இருந்தால் நல்லது.

சண்டிகரில் செக்டர் 37 இல் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் தொலைவில் இருந்து கட்டுப்படுத்தக்கூடிய, ஒலி அலையை அடிப்படையாகக்கொண்ட தீயணைப்பானை உருவாக்க முயற்சித்துள்ளனர். அடல் ஆய்வகங்களில் பயின்றதன் வாயிலாக இவர்கள் முயற்சி செய்தனர்.

இந்த மாணவர்கள் ஒலித்தொழில் நுட்பத்தைக் கொண்டு தீயை அணைக்கக்கூடிய ரோபோ இயந்திரங்களைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த ரோபோவை தொலை தூரத்தில் இருந்தபடி கட்டுப்படுத்த முடியும். இது 40 முதல் 400 ஹெர்ட்ஸ் வரையான அதிர்வெண் கொண்ட ஒலிஅலைகளைப் பயன்படுத்தி தீயை அணைக்கிறது. புதுவிதமான இந்தத்தீர்வு எடைகுறைவானது. எடுத்துச் செல்ல எளிதானது.

தெருக்களில் தண்ணீர் தேங்கிக்கிடப்பது முக்கியமான பிரச்னையாகும். அகமதாபாத் பெஸ்ட் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் கடுமையான மழை பெய்த நாள்களில் பள்ளிக்கு செல்லமுடியாமல் வீட்டில் முடங்கிக் கிடந்தனர். அவர்களின் பள்ளிக்குச் செல்லும் பாதை தண்ணீரில் மூழ்கி இருந்தது. இதில் நடந்து செல்வதும், வாகனம் செல்வதும் இயலாத காரியம். இந்தமாணவர்கள் அடல் ஆய்வகப் பயிற்சியைக் கொண்டு ஒருமுன்மாதிரி கருவி வடிவத்தை உருவாக்கினர். இது நீரில் மூழ்கியுள்ள பகுதியில் நீரின் அளவைக் கண்டறிந்து முனிசிபல் கார்ப்பரேஷனுக்கு தகவல் அனுப்பும். அந்தப் பகுதிக்குரிய மேற்பார்வையாளர்களுக்கும் தகவல் செல்லும். இதன் உதவி கொண்டு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதே போன்ற பிரச்னைக்கு அசாம் மாலியாகாவுன் கேந்திரிய வித்யாலாய பள்ளி மாணவர்கள் வேறுவிதமான அணுகுமுறையைக் கையாண்டிருக்கின்றனர். சாலைகளில் நீர் தேங்கியிருக்கும் அளவுகளைக் கண்டறிந்து வெவ்வேறு பகுதிகளில் இருந்து வந்து கொண்டிருக்கும் பயணிகளுக்கு கைபேசியில் குறுஞ்செய்தி அனுப்பும் நுட்பத்தை இவர்கள் கண்டுள்ளனர். இதனால் போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்படுகிறது. குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழையும் சிறுத்தைகள் இருக்கும் இடத்தைக் கண்டறியும் கருவியையும் உருவாக்க முயன்றுள்ளனர். காட்டிற்குள் இருந்து ஊருக்குள் சிறுத்தை வரும்போது வனத்துறையினரின் உதவியோடு எச்சரிக்கை ஒலி எழுப்பப்படுகிறது.

இத்தகைய தீர்வுகள் சின்னஞ்சிறு தீர்வுகளாக இருக்கலாம். ஆனால் சமூகப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான தொழில்நுட்பம் சார்ந்த அணுகுமுறையை இவை ஊக்குவிக்கின்றன. டாக்டர் அப்துல் கலாம் மாணவர்களையும், இளைஞர்களையும் தொழில்நுட்பத்தின் மூலம் சமுதாயத்தை மாற்றியமைக்கத் தூண்டி வந்தார். அவரது வாழ்க்கையில் இருந்து ஒவ்வொரு இந்தியனும் கற்றுக்கொள்ள வேண்டியவை அதிகமாக உள்ளன. தான் ஒரு ஆசிரியராக அறியப்படுவதையே அவர் விரும்பினார். மாணவர்களும், இளைஞர்களும் தேசத்தின் அடித்தளத்தை 21ஆம் நூற்றாண்டில் வலுப்படுத்த முடியும் என்று அவர் அறிந்திருந்தார். அவரது பேச்சுக்கள் இளம் குழந்தைகளை ஊக்குவித்தன. வழக்கமான முறையிலிருந்து மாறுபட்டு சிந்திக்கத் தூண்டுவதே சிறந்த வழியாகும். நம்மைச் சூழ்ந்திருக்கும் சவால்களை அறியவும், அவற்றை நுட்பமாக கவனித்து தீர்வுகளைக் காண அவர்கள் முயலவேண்டும். அவர்களை கற்றுக்கொள்ள அனுமதியுங்கள். தோல்விகளில் இருந்து பாடங்களைக் கற்கட்டும். தனித்தன்மை

உடையவர்களாக அவர்கள் உருவாக வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டும். சிந்தனைகளை வெளிப்படுத்த விடாமல் அவர்களைத் தடுக்கக்கூடாது. டாக்டர் கலாம் மாணவர்கள், இளைஞர்களுக்கு கூறியது இதுதான்:. “ஒருவருக்கு வாழ்க்கையில் மிகப்பெரிய நோக்கங்கள் இருக்க வேண்டும். குறைவான இலக்கு வைப்பது குற்றம்.”

குழந்தைகளும், மாணவர்களும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் (STEM) ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் கற்று அறியட்டும். அவற்றின் அடியாழப் பிரச்னைகளை சந்திக்கட்டும். பகுப்பாய்வுத் திறமைகளைப் பெருக்கிக் கொள்ள இந்த அணுகுமுறை உதவும். இதன்மூலம் சிறப்பான தீர்வுகள் கிடைக்கும். ஒருவர் தொடர்ந்து கற்றுக் கொண்டும், கடுமையாக உழைத்துக் கொண்டும் இருந்தால்தான் வெற்றிகாண முடியும் என்கிறார் அப்துல்கலாம்.

ஒவ்வொருவரும் ஒரு குழந்தையைப் போல தங்கள் கண்டுபிடிப்புகள் பற்றியும், படைப்புகள் பற்றியும் உடன்பணிபுரிவோர், வகுப்புத் தோழர்கள், ஆசிரியர்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும். இது மிகச்சிறந்த ஊக்கமாக அமையும். ஆசிரியர்களும், பெற்றோரும் தங்கள் செயலைப் பாராட்டும் போதும், ஆதரவு தெரிவிக்கும் போதும் அது STEM மீது மேலும் மரியாதையையும் அன்பையும் அதிகரிக்க உதவும். மேலும் புதிய சவால்களை எதிர்கொள்ள இந்த ஊக்கம் உதவி செய்யும். வயது வந்தோருக்கு தங்கள் பணிகளில் சிறப்பதற்கும் ஊக்குவிப்புகள் உதவுகின்றன. ஸ்டீவ் ஜாப்ஸ், பில்கேட்ஸ், மிக்கேல் டெல் போன்ற தொழில்முனைவோர் பலரும் ஒரே இரவில் உருவானவர்கள் அல்லர். ஒருதுறையில் இப்போது வல்லுநராகத் திகழ்பவர் ஒரு காலத்தில் தொடக்க நிலையில் இருந்தவர்தான் என்பதை குழந்தைகள் தங்களின் அனுபவத்தின் மூலம் கற்றுக்கொள்ள வேண்டும். பலரும் போற்றும் ஆளுமையை அடைவதற்கு சிலவருடங்களாகும். தாங்கள் செய்த தவறுகளை அவர்கள் வீணடித்து விடவில்லை. அதிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு முன்னேறி வந்திருக்கின்றனர்.

அடல் சோதனைக்கூடம் ஆர்வத்தையும், படைப்பாற்றலையும், கற்பனையையும் இளைஞர்கள் மனதில் வளர்க்கக்கூடியது. தேசத்தின் நிர்மாணத்திற்கு உதவக்கூடியது. இளைஞர்களுக்கு படைப்பாற்றல் மேடையை இது அமைத்துத் தருகிறது. அன்றாட பிரச்னைகளுக்கு தொழில்நுட்பத் தீர்வுகளைக் கண்டறிய உதவுகிறது. இளைஞர்கள் ஆராய்ச்சிக்கும், புதுமைகள் படைப்பதற்கும் உதவுகிறது. அவர்களைத் தொழில் முனைவோராகப் பரிணமிக்க வைக்க துணைநிற்கிறது. அடல் சோதனைக்கூடம் தற்போது 33 மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் உள்ள 941 பள்ளிகளில் செயல்படுகிறது. இந்தியாவின் 55 மாவட்டங்களில் அடல் சோதனைக்கூடம் இருக்கிறது. இந்தியாவின் அனைத்து மாவட்டங்களிலும், அனைத்து சீர்மிகு நகரங்களிலும் விரைவில் இது அமையவிருக்கிறது.

ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய இருதரப்பினரும் வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளில் பங்கேற்று இந்த முன்முயற்சி சிறந்த தாக்கத்தை உருவாக்க உதவவேண்டும். ‘‘படைப்பாற்றல் மிக்க இந்தியா - புதுமைகள் படைக்கும் இந்தியா’’ என்ற கனவை நோக்கிய நீண்டபயணத்தில் ஒரு சிறிய துவக்கம்தான் இது.

எதிர்கால இந்தியாவின் மாணவர்கள் இந்தியாவை சிறப்பும், பெருமிதமும் கொண்ட ஒரு நாடாக வடிவமைப்பார்கள். நாடெங்கும் வளர்ச்சி பரவுவதற்கும், நீடித்த வளர்ச்சி நிலவுவதற்கும் இதற்குமுன் இருந்திராத அளவுக்கு புதுமையாக்கத்தின் மூலம் முன் முயற்சிகளை மேற்கொண்டு மாற்றத்தை முன்நின்று கொணர்வார்கள்.

---

- **டாக்டர். உன்னத் பண்டிட்**, அறிவுசார் சொத்துரிமை, புதுமையாக்கம் ஆகிய துறைகளில் நிபுணர். இவர் தற்போது, நிதி ஆயோக்கில் அடல் புதுமையாக்கத்திட்டத்தில் பணிபுரிந்து வருகிறார்.

●

# முத்தலாக் தீர்ப்பு: முஸ்லிம் பெண்களுக்கான வெற்றி

- ஆர்.கே.சின்ஹா

உச்சநீதிமன்றத்தின் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு, முஸ்லிம் பெண்களுக்கிருந்த தளையை நீக்கி முத்தலாக் எனும் பழமைவாதப் பழக்கத்தினால் ஏற்படும் பாதிப்பிலிருந்து அவர்களை விடுவித்திருக்கிறது. (முஸ்லிம் ஆண்கள் மனைவியை விவாகரத்து செய்வதற்கு 'தலாக்' என்ற வார்த்தையை அடுத்தடுத்து மூன்று முறை சொல்லிவிட்டால் போதும் என்ற நிலை இருந்துவந்தது). முத்தலாக் பற்றிய சட்டத்தை நாடாளுமன்றத்தில் ஆறு மாதங்களுக்குள் கொண்டுவரவேண்டும் என்றும் அதுவரையிலும் முத்தலாக் நடைமுறைக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. ஆறு மாத காலத்திற்குள் உரிய சட்டம் பிறப்பிக்கப்படாவிட்டால் இது தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தடை ஆணை தொடர்ந்து அமலில் இருந்துவரும்.

தலைமை நீதிபதி கே.எஸ்.கேஹர் (தற்போது ஓய்வு பெற்றுவிட்டார்) தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வில் இடம்பெற்றிருந்த மூன்று நீதிபதிகள் முத்தலாக்கிற்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியுள்ளனர். 1986ஆம் ஆண்டு ஷாபானு என்பவர் தொடுத்த வழக்கின் மீதான மேல்முறையீட்டை எற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம் முத்தலாக் பற்றிய இறுதித் தீர்ப்பு எதையும் வழங்கவில்லை. மாறாக இந்தப் பிரச்னை பற்றிய முடிவை நாடாளுமன்றத்திடம் விட்டுவிட்டது. இருந்தபோதிலும் நீதிமன்றம் தனது உளக்கிடக்கையை வெளிக்காட்டி இருக்கிறது.

ஒட்டு மொத்தமாகப்பார்க்கும்போது, முத்தலாக் முறைகேடுகளிலிருந்து தேசம் தற்போது விடுதலை அடைந்திருப்பது தெளிவாகிறது. தில்லி செங்கோட்டையிலிருந்து பிரதமர் கடந்த ஆண்டு வழங்கிய சுதந்திர தின உரையிலேயே முத்தலாக் என்ற மனிதாபிமானமற்ற நடைமுறையிலிருந்து முஸ்லிம் பெண்களைப்பாதுகாப்பதற்கு சட்டம் கொண்டுவரப்படும் என்று உறுதி அளித்திருந்தார் என்பதை நினைவூட்டத்தேவை இல்லை.

**மனிதத்தன்மை வென்றது பழமை வாதம் தோற்றது:**

நீதிக்கு கண்கள் இல்லை. அதனால் தான் நீதி தேவதை தனது கண்களை கறுப்புத் துணியைக்கொண்டு மறைத்துக்கொண்டு இருக்கிறாள். தீவிரத்தன்மை கொண்ட பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் முத்தலாக் முறையைவலியுறுத்திய போதிலும், உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் முஸ்லிம் பெண்களுக்கு ஒரு புதுவாழ்வை அளித்திருக்கிறது. மனிதத்தன்மை வெல்லப்போகிறதா? பழமைவாதம் வெல்லப்போகிறதா? என்பதை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு காட்டிவிடும் என்று தீர்ப்புக்கு முன்பாகப் பேசப்பட்டது.

ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சட்ட அமர்வின் மூன்று நீதிபதிகளான குரியன் ஜோசப்,ஆர்.எப்.நரிமான், யூ.யூ.லலித் ஆகிய மூவரும் முத்தலாக் நடைமுறை அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று தீர்ப்பளித்துள்ளனர். மற்ற இரண்டு நீதிபதிகளான ஜே.எஸ்.கேஹர், எஸ்.அப்துல்நசீர் ஆகிய இருவரும் முத்தலாக் முஸ்லிம் தனிநபர் சட்டத்தின் ஒரு பகுதியாகும். எனவே, நீதிமன்றம் இதில் தலையிட இயலாது என்று தீர்ப்பு கூறி உள்ளனர். கூடுதலான நீதிபதிகள் முத்தலாக்கிற்கு எதிராகத் தீர்ப்பளித்திருப்பதால் அந்தத்தீர்ப்பே நடைமுறைப்படுத்தப்படும். இந்த நீதிபதிகள் மூவரும் முத்தலாக் அரசியல் சட்டப்பிரிவு14


(சமத்துவ உரிமை) ஐ மீறுகிறது என்று தெரிவித்துள்ளனர்.

மேலும், இஸ்லாமிய நாடுகள் பலவும் முத்தலாக் முறையை அனுமதிப்பதில்லைஎன்பதே உண்மை. இந்த நிலையில் இந்தியாவில் இந்த முறையை ஏன் கைவிடக்கூடாது என்பதுதான் நீதிமன்றத்தின் கேள்வியாக இருக்கிறது.

**முத்தலாக் ஒரு பாவச்செயல்:**

முஸ்லிம்களின் அடைப்படை உரிமைகளின் ஒரு பகுதி முத்தலாக் என்று தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹரும், நீதிபதி அப்துல்நசீரும் தெரிவித்து நீதிமன்றத்தலையீட்டை மறுத்துவிட்டனர். ஆயினும், முத்தலாக் என்பது ஒரு பாவம். அரசாங்கம் இது பற்றி சிந்தித்து சட்டம் இயற்றவேண்டும் என்று இவ்விருவரும் கூறியுள்ளனர். முஸ்லிம் பெண்களை வலுப்படுத்தும் விதத்தில் மத்திய அரசு ஒரு வலுவான சட்டத்தை இயற்றும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவில் வாழும் முஸ்லிம் பெண்களின் நிலை பற்றி அறிந்துகொள்வதற்கு அப்துல்லா பிஸ்மில்லா அவர்கள் எழுதியுள்ள ஜினிஜினிபினிசந்தாரியா என்ற புதினத்தைப்படிக்க வேண்டும். இஸ்லாமியக் குடும்பங்களில் பெண்கள் தாழ்வாகக் கருதப்படுவதையும், மூன்றாம் தர மனித ஜீவன்களாக நடத்தப்படுவதையும் அதில் அவர் விவரித்துள்ளார். இந்த நாவலில் ஒரிடத்தில் ஒரு பாத்திரம் இப்படிப்பேசுகிறது:" எல்லாவற்றிற்குப் பிறகும் பெண்களின் நிலைமை எவ்வாறு இருக்கிறது? பெண்களினால் என்ன பயன்? அவர்கள் சமைக்க வேண்டும். நம்மோடு படுத்து உறங்கவேண்டும் (காமசுகத்திற்காக), குழந்தைகளைப் பெற்றுத்தர வேண்டும். இப்படியாகத்தானே நடக்கிறது. இந்தக் கடமைகளில் ஏதேனும் ஒன்றிலிருந்து அவர்கள் பிசகினாலும் தலாக் தலாக் தலாக் என்று மூன்று முறை சொல்லிவிடுங்கள்".




**முஸ்லிம் பெண்களின் விரோதி யார்?**

முத்தலாக்கிற்கு எதிரான பிரச்சாரம் ஆரம்பித்தபோது, முஸ்லிம் அரசியல்வாதிகள் பலரும் அதனை எதிர்த்தனர். முத்தலாக்கிற்கு

எதிராகச் செயல்படும் அரசாங்கத்திற்கு தகுந்த பாடத்தைக் கற்பிக்கப்போவதாக ஊடக விவாதங்களில் அச்சுறுத்தினர். இததகைய விவாதங்களில் முல்லாக்களும், உலேமாக்களும் இருந்தனர்.இஸ்லாமியப்பெண்கள் ஒருவர் கூட விவாதத்தில் இடம் பெறவில்லை. இந்த நூற்றாண்டிலும் கூட முஸ்லிம் பெண்கள் இடைக்காலப்பாரம் பரியங்களையும்,

உங்கள் பெண்களுக்கும் அதிகாரமளிக்கப்போகிறது. இந்துக்களுக்கு இதில் என்ன இருக்கிறது? இது முதல் கேள்வி. இரண்டாவது, இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் முத்தலாக் விவாகரத்து நடைமுறையை நிறுத்திவிட்டபிறகு, இப்படிப்பட்ட வெறித்தனமான பழங்கால நடை முறையை இந்தியாவில் தடை செய்வது இஸ்லாமிற்கு ஆபத்தானது, இஸ்லாமியர்களுக்கு எதிரானது என்று ஏன்



பண்பாட்டையும் தான் கடைபிடிக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். இத்தகைய அரசியல்வாதிகள் அரசாங்கத்தின் முற்போக்கான செயல்பாட்டை கூச்சமின்றி எதிர்க்கின்றனர். முத்தலாக்கை ஆதரித்தும், மாட்டுக்கறி உணவு பற்றியும் அரசாங்கத்துடன் சண்டை போடுவதைத்தவிர இவர்கள் வேறென்ன செய்கின்றனர்? இந்தப்பிரச்னை உச்சநீதிமன்றத்தின் விசாரணையில் இருந்தபோது முஸ்லிம் தனிநபர் சட்டவாரியத்தின் உறுப்பினர் ஒருவரை நான் சந்திக்க நேரிட்டது. அவரிடம் நான் சில கேள்விகளைக்கேட்டேன். முத்தலாக் தொடர்பாக ஏற்படக்கூடிய மாற்றம் உங்கள் மகளுக்கும்,

கருதுகின்றீர்கள்? என் கேள்விகளுக்கு அவரிடம் பதில் இல்லை. இஸ்லாமிய சமூகம் இன்னமும் இருண்ட காலத்திலேயேதான் வாழவேண்டும் என்றால் அதற்கு இஸ்லாமியத்தலைவர்களே பொறுப்பாவார்கள்.

குறிப்பிடத்தக்கவகையில் குரானிலோ, ஹதீசிலோ தலாக்கிற்கான முன் ஏற்பாடுகள் ஏதுமில்லை. குரானில் ஓரிடத்தில் தெளிவாக இப்படி கூறப்பட்டுள்ளது: பல்வேறு விஷயங்களை அல்லாஹ் விரும்புவதில்லை. அவற்றில் தலையாயது தலாக். ரசூலோ, நபியோ தமது மனைவியரை விவாகரத்து செய்திடவில்லை.

கருத்துவேறுபாடுகள் ஏற்பட்ட வேளைகளில் அவர்களை வெவ்வேறு இடங்களில் தங்கவைத்து அவர்களுக்குத் தேவைப்பட்ட வசதிகள் அனைத்தையும் செய்து கொடுத்தனர். தங்களின் மேற்பார்வையில் அவர்களை நன்றாகக் கவனித்துக்கொண்டனர்.

திருமணம், விவாகரத்து, ஜீவனாம்சம் ஆகியவை பற்றிய முழுமையான வழிவகைகள் இல்லாதிருக்கும் நிலையில் முஸ்லிம் பெண்கள் மோசமான வாழ்க்கையை எதிர்கொள்கின்றனர். உண்மையில், தங்கள் இனப்பெண்களுக்கு எதிரான இஸ்லாமிய சமூகத்தின் அணுகுமுறை பாரபட்சமானதாகவே இருக்கிறது. ஆனால், இத்தகைய சூழ்நிலை தற்போது நிச்சயமாக மாறப்போகிறது. பெரும்பாலான முஸ்லிம் ஆண்கள்முத்தலாக்கிற்கு ஆதரவாக இருக்கும் நிலையில் முஸ்லிம் பெண்கள் இதற்கு முழுமையான எதிர்நிலைப்பாட்டில் இருக்கின்றனர்.

பாரதிய முஸ்லிம் மகிளா அந்தோலன் (BMMA) அமைப்பு எடுத்திருக்கும் ஒரு கணக்கெடுப்பு இந்தியாவில் 92.1% முஸ்லிம் பெண்கள் உடனடி, வாய்வழி விவாகரத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக கடுமையாக முயன்று வருகின்றனர் என்று தெரிவிக்கிறது. உச்சநீதிமன்றத்தின் வலாற்று சிறப்பு மிக்க இந்தத் தீர்ப்புக்குப் பிறகு முஸ்லிம் பெண்களின் விருப்பம் நிறைவேறி இருக்கிறது. ஆயினும், இது பற்றிய வலுவான சட்டம் ஒன்று வரும் வரை அவர்கள் காத்திருக்கவேண்டும்.

இப்போது, உச்சநீதிமன்ற ஆணைக்குக் கட்டுப்பட்டு அரசாங்கம் கடுமையான சட்டத்தை இயற்றவேண்டும். ஆறு மாத காலம் ஏன் காத்திருக்க வேண்டும்? எதிர்வரும் நவம்பர் மாத குளிர்காலக் கூட்டத்தொடரிலேயே சட்டம் கொண்டுவருவதன் மூலம் பெண்களுக்கு சமநிலை, சமஉரிமை வழங்க அரசாங்கம் உறுதிபூண்டிருக்கிறது என்பதைக்காட்ட முடியும்.

---

**ஆர்.கே.சின்ஹா**, நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர், ஹிந்துஸ்தான் சமாச்சார் செய்தி முகமையின் தலைவர். •



# இலஞ்சத்திற்கு எதிரான இந்தியாவின் போர்

- ஏ. ஸ்ரீநிவாஸ்

“இலஞ்சமும், கருப்புப் பணமும் இந்திய ஜனநாயகத்தை சீரழித்து விட்டன. இலஞ்சம் மற்றும் கருப்புப் பணத்திற்கு எதிரான போர் தொடரும்” என்று சமீபத்தில் ஜார்கண்ட் மாநிலத்திற்கு பயணம் சென்ற பிரதமர் கூறினார். அங்கு சுய உதவிக் குழு உறுப்பினர் சிலருக்கு சிறப்புச் செயலிகளை வழங்கிய பிரதமர் அவற்றின் பயன்பாடுகள் பற்றி கிராம மக்கள் கூறியதைக் கேட்டு தான் வியந்ததாகக் கூறினார். சிறப்பான ஆளுமை மூலம் இலஞ்சத்திற்கு எதிராக இந்தியாவின் போர் முறை தெளிவாகத் தெரிகிறது.




**இலஞ்சத்திற்கு எதிரான அணுகுமுறையில் எந்தக் குறையையும் ஏற்றுக்கொள்ள முடியாது**

“இலஞ்சத்திற்கு எதிரான அணுகுமுறையில் எந்தக் குறையையும் ஏற்றுக்கொள்ள முடியாது”, “குறைந்த அளவிலான அரசு ஆனால் அதிகபட்ச ஆளுமை” என்ற அணுகுமுறைகள் மூலம் சமீப காலங்களில் ஆளுமை முறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் எடுக்கப்பட்டுள்ள சில நடவடிக்கைகள் : அரசு அதிகாரிகள் மூலம் சில படிவங்களுக்கு சான்றொப்பம் வழங்குவதை நீக்கியிருப்பது, அடிமட்ட வேலைகளுக்கு நேர்முகத் தேர்வுகளைத்

தவிர்த்தல், 50 வயதுக்கு மேற்பட்ட திறமையற்ற அரசு அலுவலர்களை முன்கூட்டியே ஓய்வில் அனுப்புதல் ஆகியவைகளாகும். இது அல்லாமல், அரசு கருப்புப் பணத்தையும், இலஞ்சத்தையும் ஒழிக்க சில நோட்டுக்கள் செல்லாது என்ற நடவடிக்கையையும் மேற்கொண்டது. நிலக்கரிச் சுரங்கங்களை ஏலம் விடுவது கணினிமயமாக்கப்பட்டுள்ளது. ஜி20 அமைப்பு நாடுகளை அணுகி ஐரோப்பா மற்றும் பிற நாடுகளில் "வரியில்லா சொர்க்கங்கள்" சார்ந்த உதவிகளை நாடியது, சுவிஸ்நாட்டு அதிகாரிகளோடு நேரடியாகப் பேசிய இந்திய அரசு, கருப்புப்பணம் மற்றும் வரி ஏய்ப்பு என்பது இரு நாடுகளுக்கும் பொதுவான பிரச்சினை என்பதை உணர்த்தியது ஆகியவைகளாகும்.

### இலஞ்சத்தை எதிர்க்க இந்தியாவின் அமைப்பு சார்ந்த மற்றும் சட்டப் பூர்வ செயல்பாடுகள்

இலஞ்சத்திற்கு எதிரான இந்தியாவின் போரில் நெடுங்காலமாக சிறப்பாகச் செயல்படும் அமைப்புகளும் சட்டப்பூர்வ செயல்பாடுகளும் உள்ளன. அவைகளில் சில, ஊழலைத் தடுக்கும் சட்டம், சுதந்திரமாக செயல்படும் மத்திய கண்காணிப்பு கமிஷன், தலைமை கணக்காயர், நீதிபதிகள் (விசாரணை) சட்டம் லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் 2013, குற்றங்கள்சார் தவறுகளை வெளிப்படுத்துபவர்களைப் பாதுகாக்கும் சட்டம் 2011, கருப்புப் பணத்தை வெள்ளைப்பணமாக மாற்றுவதைத் தடுக்கும் சட்டம், பினாமி பரிவர்த்தனைகள் (தடுப்பு) சட்டம் ஆகியன பலவகையான குற்றங்களையும், இலஞ்சத்தையும் சார்ந்தவைகளாகும். எல்லா அரசு அதிகாரிகளும், ஆண்டுக்கொருமுறை தங்களுடைய சொத்துக்களை அரசுக்கு அறிவிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள், ஒவ்வொரு தேர்தலின் போதும் தங்களுடைய சொத்துக்களை தெரிவிக்க வேண்டும்.

### ஆளுமையை சுறுசுறுப்பாக்குதல்

பிரதமர் 2014 ஆகஸ்டில் சுதந்திர தின உரையாற்றியபோது, பிரதமமந்திரி ஜன்தன் யோஜனா என்ற திட்டத்தை அறிவித்தார். இது, நாட்டிலுள்ள எல்லாக் குடும்பங்களையும் நிதிச் செயல்பாடுகளில் உள்ளடக்கும் முழுமையான நிதிசார் உள்ளடக்குத் திட்டமாகச் செயல்படுகிறது. "நாட்டின் பொருளாதார வளங்கள், ஏழைகளின் நல்வாழ்வுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். இந்த நிலையிலிருந்துதான் மாற்றம் தோன்றுகிறது" என்று அவர் கூறினார். இலஞ்சத்திற்கு எதிரான இந்தியாவின் போரின் மையச் செயல்பாடாக "ஆளுமையை சுறுசுறுப்பாக்க வேண்டும்" என்ற உணர்வு உள்ளது. இது சார்ந்த வங்கித்துறை தொழில்நுட்பப் புரட்சியால் கோடிக்கணக்கான இந்தியர்கள் பயனடைந்துள்ளனர். முன்பிருந்த மனிதச் செயல்பாடு மூலம் அரசின் மானியங்களை வழங்குவதைக் காட்டிலும் சிறப்பான ஆளுமை முறையில் வழங்குவதால் பலகோடி மக்கள் பயன்பெறுகிறார்கள்.

ஜன்தன் திட்டம் மூலம் இந்தியர் அனைவருக்கும், வங்கிக் கணக்கு வசதியும் கடன் வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஜன்தன் திட்டத்தின் கீழ் வங்கிகள், ஏழை எளிய மக்களுக்கும், கடன்களை வழங்க ஊக்குவிக்கப்பட்டு கிராமப்புற மக்களுக்கு அதிகக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2016இல் ஆதார் சட்டம், நிதி சட்ட வடிவாக அறிமுகப்படுத்தப்பட்டு நிதி மற்றும் பிற மானியங்களும், பயன்களும், சேவைகளும் மக்களுக்கு நேரடியாக சென்றடையும் வண்ணம் சீர்செய்யப்பட்டது. இந்த ஆதார் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சிறப்பு அடையாள எண்ணுக்கு சட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டு, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஒரு தனி அடையாள எண் வழங்கப்பட்டு மக்கள் எல்லோருக்கும் சென்றடைய வேண்டிய மானியங்கள், பயன்கள் மற்றும் சேவைகள் சிறந்த முறையிலும், வெளிப்படையான முறையிலும் நேரடியாக வழங்கப்படுகின்றன.

2016இல் இந்திய அரசு மேற்கொண்ட மூன்றாவது பெரிய செயல்பாடு, தேசிய நிதி பரிவர்த்தனை வாரியத்தின் 'பீம்' எனப்படும் செயலி மூலம் பணம் பரிவர்த்தனை செய்ய

ஏதுவான முறையாகும். இந்த பீம் செயலி மூலம் மக்கள் தங்களுடைய கைப்பேசி மூலம் தங்களுடைய வங்கிக் கணக்கிலிருந்து பணத்தை வேண்டியவர்களுக்கு பரிவர்த்தனை செய்து கொள்ளலாம். ஜன்தன் திட்டம், ஆதார் சட்டம் மற்றும் பீம் செயலி இவை மூன்றும் இணைந்து ஒரு வெளிப்படையான அரசு செயல்முறையை ஏற்படுத்தி அரசின் மானியங்கள் குறித்த நேரத்தில் சிறப்பான முறையில் பயனாளிகளுக்கு நேரடியாக சென்றடைகிறது. இந்த மூன்று திட்டங்களும் இணைந்து கைப்பேசி மூலம் பணப்பரிவர்த்தனை செய்வது, மின்னஞ்சல் அனுப்புவது போல் எளிதாக்கப்பட்டுள்ளது. NEFT, RTGS, IMPS மற்றும் ECS போன்ற மின்னனுப் பரிவர்த்தனைகள் வங்கிப் பரிவர்த்தனைகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### தவறுகளை முன்கூட்டியே தடுக்கும் கண்காணிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.K. சந்தானம் தலைமையில் அமைக்கப்பட்ட இலஞ்சத் தடுப்புக் குழு அறிக்கையின்படி அமைக்கப்பட்டது தான் மத்திய கண்காணிப்புக் கமிஷன் (CVC). இலஞ்சத்திற்கு அடிப்படையான நான்கு காரணிகளை சந்தானம் குழு அடையாளம் காட்டியது. அவைகளாவன : நிர்வாகத்தில் தாமதம், தேவைக்கு அதிகமான பணிகளை அரசே மேற்கொள்வது, அரசு செயல்பாடுகளில் அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட செயல் அதிகாரங்கள் மற்றும் சிக்கலான நடைமுறைகள் ஆகியனவாகும். சந்தானம் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் இந்திய அரசின் தீர்மானம் மூலமாக மத்திய அரசு அமைப்புகளில் இலஞ்சத்தைத் தடுக்க 1964இல் மத்திய கண்காணிப்புக் கமிஷன் அமைக்கப்பட்டது. 1997இல் ஜெயின் ஹவாலா வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி இந்த கண்காணிப்புக் கமிஷனுக்கு சட்டப்பூர்வ நிலைமை உருவாக்கப்பட்டது. ஊழல் ஒழிப்புச் சட்டம் 1988இல் கூறப்பட்டுள்ள குற்றங்களை அரசு அலுவலர்களும் அமைப்புகளும் செய்வதைக் கண்டுபிடித்து புலனாய்வு செய்வதற்காக மத்திய கண்காணிப்புக் கமிஷனை உருவாக்குவதற்கு ஏதுவான மத்திய கண்காணிப்புக் கமிஷன் சட்டம் 2003 வழிவகை செய்கின்றது.

பொது நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை, நடுநிலைமை மற்றும் பொறுப்புகளை வெளிப்படுத்தும் வண்ணம் மத்திய கண்காணிப்புக் கமிஷன் செயல்படுகிறது. குற்றங்கள் நடப்பதை முன்கூட்டியே தடுக்க இந்தக் கமிஷன் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வலைதளம்சார் அரசாண்மை (GEM) செயல்பாடு மூலம் கணினிசார் குத்தகை மற்றம் பொருட்கள் வாங்கும் முறையினால் அரசின் பொறுப்பும், கண்ணியமும் வெளிப்படையாக்கப் பட்டுள்ளன. மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் கல்வி மற்றும் விழிப்புணர்வு அளிப்பதன் மூலமும் அரசு அலுவலர்களோடு பொதுமக்கள் தொடர்பு கொள்ளும் போது, தனிப்பட்ட அதிகாரங்களைக் குறைத்து நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டும், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு அளித்தும் தவறுகள் ஏற்படாத வகையில் தவறு செய்தவர்களை கடுமையாக தண்டித்தும் நன்னெறிகளைப் போற்றுவிக்க கமிஷன் முயன்றுள்ளது. குடிமக்களும், நிறுவனங்களும் தாங்களே முன்வந்து கணினிசார் பரிவர்த்தனைகள் செய்ய உறுதி எடுத்துக்கொள்வதன் மூலம் மத்திய கண்காணிப்புக்குழு ஒரு மக்கள் இயக்கத்தை உருவாக்கியுள்ளது. வெளிப்படைத்தன்மை, திறமை மற்றும் குடிமக்கள் சார்ந்த ஆளுமையை உருவாக்க நிறுவனங்களுக்கான ஒரு உண்மைத் தன்மைக் குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது.

### தணிக்கை மற்றும் கணக்குப் பதிவு முறைகளை வலுப்படுத்தல்

இந்தியாவின் இலஞ்சத்திற்கு எதிரான போரில் தலைமைக் கணக்காயரின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். 2014முதல் அரசின் நிதி ஆளுமை சீர்திருத்தத்திற்கு ஏற்ப தலைமைக் கணக்காயர், கணக்குப் பதிவு மற்றும் தணிக்கை செயல்பாடுகளை ஒருங்கிணைத்துள்ளார். நிர்வாக ஆளுமையில் ஏற்பட்டுள்ள சில பெரிய

மாற்றங்களாக இரயில்வே மற்றும் பொது பட்ஜெட்டை ஒருங்கிணைத்ததையும் திட்டமில்லாத செலவினங்களையும் ஒருங்கிணைத்ததையும் பல துறைகளில் நேரடி அந்நிய முதலீட்டை அனுமதித் திருப்பதையும், பொருட்கள் மற்றும் சேவைகள் வரியை அறிமுகப்படுத்தியிருப்பதையும் கொள்ளலாம். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள், அரசின் மூன்றாம் அடுக்கு செயல்பாடுகளை மேற்கொள்கின்றன. அவைகளுக்கு ஆண்டு தோறும் ரூ.14,00,000 கோடி ஒதுக்கப்படுகிறது. ஆனால், அவைகளிடம் ஆளுமைக்குறைவும், திறமையற்ற நிதி மேலாண்மையும், பொறுப்பின்மையும் காணப்படுகின்றன. இந்த நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நாடெங்கிலும் பெருமளவிலான பணப் பரிவர்த்தனை நடைபெறும் போது, அங்கு தவறுகள் ஏதும் ஏற்படாமல் தடுக்க அவைகளைத் தணிக்கை செய்வதில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தலைமைக் கணக்காயர் பரிந்துரைத்துள்ளார். நாட்டில், வருமான நிர்வாகம் பெருமளவு மாறியிருப்பதையும் நிழல் பொருளாதாரம் கருப்புப்பணம், பணப்பரிமாற்றங்களில் தில்லுமுல்லு போன்றவற்றை சமாளிக்கவும், மிக வேகமாக உயர்ந்துவரும் மின்னணு பரிவர்த்தனைகள், வரி படிவம் சமர்ப்பித்தல் அவற்றைக் கணக்கிடுதல் வரவேண்டியதை வசூலித்தல் ஆகியவற்றைக் கண்காணிக்க தீவிர நடவடிக்கைகளை பரிந்துரைத்திருக்கிறார்.

### ஆளுமையில் வெளிப்படைத்தன்மை

தகவல் உரிமைச் சட்டம் 2005 மக்களின் உரிமை சார்ந்த ஒன்றாகும். அது, இந்தியாவின் ஜனநாயகத்தை ஆழப்படுத்தி நாட்டின் நிர்வாகத்தில் குடிமக்களுக்கு உரிய பங்கை அளித்துள்ளது. தகவல் உரிமைச் சட்டத்தின் செயல்பாடு, குடிமக்களின் தகவல் அறியும் உரிமை சார்ந்தது மட்டுமல்லாமல் ஏன் எதற்கு என்று கேட்கும் உரிமையையும் வழங்க வேண்டும். தகவல்களை ஆய்வு செய்வது, வெளிப்படையாகவும், துரிதமாகவும் தொல்லைகள் இல்லாமலும் இருக்கவேண்டும். பத்தாண்டு காலத்திற்கு மேல் இந்தத் தகவல் உரிமைச் சட்டம் செயல்பட்ட பின் அவற்றின் பயன்களை மக்கள் நாடெங்கிலும் உணர்ந்துள்ளனர். தகவல் உரிமைச் சட்டத்தினால், ஆளுமை மேம்பட்டுள்ளது. தகவல்களைப் பரிமாறிக்கொள்வதால், அரசு மேற்கொள்ளும் செயல்களில் குடிமக்களுக்கு பங்களிக்கப்பட்டு அதனால், அவர்களுக்கும் அரசுக்குமிடையே உள்ள நம்பிக்கை உயர்ந்துள்ளது.

### லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் 2013

லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் 2013இன் படி மத்திய கண்காணிப்பு கமிஷன் சட்டம் 2003இன் சில ஷரத்துக்கள் மாற்றியமைக்கப்பட்டு லோக்பால் பரிந்துரைக்கும் B,C மற்றும் D வகுப்பு ஊழியர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க மத்திய கண்காணிப்புக் குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அது போலவே, A வகுப்பு அலுவலர்களை விசாரிக்க விசாரணை இயக்குநரகம் ஒன்று கமிஷனரால் உருவாக்கப் பட்டுள்ளது. A மற்றும் B வகுப்பு அலுவலர்கள் மீதான குற்றங்கள் பற்றி லோக்பால் பரிந்துரை செய்திருப்பின் கமிஷன் தன்னுடைய விசாரணை கண்டுபிடிப்புகளை அதற்கு அளிக்க வேண்டும். C மற்றும் D பிரிவு ஊழியர்களைப் பொறுத்த மட்டில் லோக்பால் பரிந்துரைத்த குற்றச்சாட்டுக்கள் மீது மேற்கொண்டு கமிஷன் விசாரணை செய்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

### இலஞ்சத் தடுப்புச்சட்டம் 1988ஐ திருத்தியமைத்தல்

இலஞ்சத் தடுப்புச்சட்டம் என்பது இலஞ்சலாவண்யம் நடக்காமல் இருப்பதற்கு ஏதுவான அனைத்து சட்டத் தேவைகளையும் ஒருங்கிணைத்த ஒரு சட்டமாகும். அரசு செயல்பாட்டுக்கு தேவையான சட்டப் பூர்வமான கூலியைத் தவிர வேறு எந்த வகையிலும்

கையூட்டு பெறுவதைத் தடுக்க இந்தச் சட்டம் வழி வகை செய்கிறது. இது சார்ந்த வழக்குகளை துப்புத்துலக்க சிபிஐக்கும், மாநிலங்களில் உள்ள போலீஸ் அமைப்புகளுக்கும் அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன. அரசு அலுவல்களில் பொறுப்புத்தன்மை ஏற்கும்படியான அளவில்தான் இருக்கவேண்டும், ஏனெனில் அவர்கள் நேர்மையான முடிவுகளை மேற்கொள்ளத் தயங்கக்கூடாது என்று அரசு கூறியுள்ளது. அரசு அதிகாரிகள் வருமானத்திற்கு அதிகமான சொத்து வைத்திருப்பதை குற்றம் என்று கருதும் நிலையில் வருமானத்திற்கு அதிகமான சொத்து இருந்தாலும் அப்படிப்பட்ட சொத்துக்களை உருவாக்குவதற்கு அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்று நிரூபணமாக வேண்டும் என்று விளக்கும் வண்ணம் இலஞ்ச தடுப்பு சட்டத்தை திருத்தியமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

### குற்றம் சார்ந்த தகவல்களை அளிப்பவர்களுக்கு பாதுகாப்பை அதிகரித்தல்

குற்றம் சார்ந்த தகவல்களை முன்வந்து அளிப்பவர்களுக்கு சட்டபூர்வ பாதுகாப்பு அளிக்கும் வகையில் பொது நலத் தகவல்கள் அளிப்பவர் களுக்கான பாதுகாப்பு சட்ட முன்வடிவு 2011 நாடாளுமன்ற மக்களவையில் ஆகஸ்டு 2010இல் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த சட்ட முன்வடிவு, குற்றம்சார் தகவல் அளிப்போர் பாதுகாப்புச் சட்டம் 2011 என்ற பெயரில் மக்களவையில் டிசம்பர் 2011இல் நிறைவேற்றப்பட்டது. மாநிலங்கள் அவையில், பிப்ரவரி 2014இல் நிறைவேற்றப்பட்டது. மே 9 2014 அன்று குடியரசுத் தலைவர் இந்த சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தார். 2015இல் இந்த சட்டத்தில், 21 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்குக் காரணம், தகவல்களை வெளியிடும்போது, இந்திய இறையாண்மை மற்றும் ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்காமலும், நாட்டின் பாதுகாப்பை பாதிக்காமலும் இருக்கத் தேவையான ஷரத்துக்களை சேர்ப்பதற்காகக் கருதப்பட்டது. அளிக்கப்படும் தகவல்கள் நாட்டின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பை பாதிக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்ட கவலைகளைப் போக்கும் வண்ணம் மேற்கொள்ளப்பட்டது.

### பினாமி பரிவர்த்தனைகளை ஒடுக்குதல்

பினாமி பரிவர்த்தனைகள் (தடுப்பு) சட்டம் 1988, 28 ஆண்டுகளாக சட்டமாக இருந்த போதுகூட அதில் இருந்த சில குறைகள் காரணமாக, செயல்படுத்தப்படாமல் இருந்தது. பினாமி பரிவர்த்தனைகளை தடுக்கும் வண்ணம் பினாமி பரிவர்த்தனைகள் (தடுப்பு) திருத்தச் சட்டம், 2016 இயற்றப்பட்டது. இதன்படி, பினாமி சொத்துக்கள் என்று கருதப்படுபவைகளை இறுதியில் கையகப்படுத்துவதற்கு முன்பாக, அவைகளை தற்காலிகமாக முடக்கி வைக்க வருமான வரித்துறை அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது அல்லாமல், ஒருவர் பினாமி, பரிவர்த்தனை செய்திருக்கிறார் என்பதை தகுந்த நீதி மன்றம் மூலம் உறுதி செய்யப்பட்டால் அவருக்கு குறைந்தபட்சம் ஓராண்டு கடுங்காவல் தண்டனை அளிக்கப்படும் இது ஏழு ஆண்டுகள் வரையிலும் நீட்டிக்கவும், இது அல்லாமல் சொத்தின் மதிப்பில் 25 சதவிகிதம் வரை தண்டம் வசூலிக்கப்படும். பினாமி பரிவர்த்தனைகள் (தடுப்பு) திருத்தச் சட்டம் 2016 நவம்பர் 1, 2016இல் அமலுக்கு வந்தது. இந்த சட்டத் திருத்தத்திற்குப்பின் பல பினாமி பரிவர்த்தனைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முடிவாக, ஊழல் மற்றும் கருப்புப்பணத்திற்கு எதிரான இந்தியப் போர் தொடர்கிறது என்று நாம் கொள்ள முடியும். இந்த முயற்சிகளோடு சிறப்பான ஆளுமைகளை வழங்கும்போது அதனால் நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன.

---

- **ஏ. ஸ்ரீநிவாஸ்,** இந்திய ஆட்சிப்பணி அலுவலர் இராஜஸ்தான் மாநிலத்தின் வரிவாரியத்தின் தலைவராகப் பணிபுரிகிறார்.

•

# புதிய இந்தியாவில் திறன் மற்றும் தொழில் முனைவு மேம்பாடு

- Dr. அமித்குமார் துவேதி, சரவணன் வேலுசாமி

இந்தியப் பொருளாதாரம், உலகத்திலேயே மிகப்பெரிய பொருளாதாரமாக உள்ளது. கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக, அதன் மொத்த உள் நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் சராசரியாக 7 சதவிகிதத்தைவிட அதிகமாகும். வளர்ந்து வரும் நாடுகளிலேயே புதிதாக வளர்ந்துள்ள தொழிற்துறைசார் பொருளாதாரமாக விளங்கும் இந்தியா, தனக்கே உரித்தான பெருமளவிலான இளம் மக்களின் பயன்களை இன்னும் முழுவதுமாகப் பெறவில்லை. இந்திய பொருளாதாரத்தின் முக்கிய அம்சங்களாக தொழில் உற்பத்தியில் வளர்ச்சியும், நகர்ப்புற மயமாக்கலும், வேலை வாய்ப்பிற்காக கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள் செல்வதும் காணப்படுகின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு மிக அதிக பங்களிப்பது சேவைத்துறையாகும். இதற்கு அடுத்து வருவன: தொழிற்துறை மற்றும் விவசாயம். இந்தியாவின் மொத்த பணியாட்களில் பாதிக்கு மேல் சுய வேலையிலும், சுமார் 93 சதவிகிதத்தினர் அமைப்பு சாரா துறையிலும் உள்ளனர். தற்போதுள்ள மக்கட்தொகை வளர்ச்சியின் அடிப்படையில் பார்க்கும் போது, 2020 வாக்கில் பணியாளர்கள் வேலை தேடுவதின் எண்ணிக்கையும், கல்விக்கூடங்களில் சேர்வதுமான எண்ணிக்கையும் வெகுவாக உயர்ந்து, சுமார் 17 கோடி பேர் வேலை செய்யும் வயதினராக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது, என்று வர்த்தக அமைப்புகளின் கூட்டமைப்பின் (ASSOCHAM) ஆய்வு ஒன்று கூறுகிறது. ஆகவே, இளம் பணியாளர்களுக்கு நாம் சரியான பயிற்சி அளிக்கா விட்டால் அவர்களால் நமக்கு கிடைக்கும் பயன்கள் பறிபோவது மட்டுமல்லாமல், நமக்கு பலமாக இருக்கும் மக்கள்தொகையே பேரிடராக மாறக்கூடும். ஆகவே, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் அதே நேரத்தில் அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தும் திறன் பெற்ற இளைஞர்களை உருவாக்குவதும் அவசியம்.

### திறன் பற்றாக்குறை

தரமான கல்வி இல்லாத நிலையில், இளைஞர்களை பணியமர்த்த முடியாத பல நிலைமைகளை நாம் பார்க்கிறோம். வேலை வாய்ப்பு குறைந்துள்ள நிலைமையில் வேலைச் சந்தையில் மிகுந்த போட்டியைக் காண்கிறோம். தொழில்சார் மற்றும் திறன் வழங்கு பயிற்சிகளுக்கான போதிய நிதி வசதி இல்லாத நிலைமையில் பெரும்பான்மையான மக்கள், திறனற்றோர் செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அதில் பெரும்பான்மையோர் வேலை பாதுகாப்பற்ற நிலைமையில் உள்ளனர். பள்ளிகளிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் பாதியிலேயே விடுபடுபவர்கள், சுயமாக வேலை செய்யும் திறன் மற்றும் ஊக்கம் இல்லாதவர்களால் இளைஞர்களிடையே பெருமளவிலான வேலையின்மை காணப்படுகிறது. இந்திய அரசு, நாட்டில் அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும், தொழில்முனைவை போற்றுவிக்கவும் உறுதி கொண்டுள்ளது. தன்னுடைய பட்ஜெட் உரையில் நிதியமைச்சர் திரு. அருண் ஜெட்லி கூறியதாவது : ''அரசின் முக்கிய குறிக்கோள் இளைஞர்களுக்கு கல்வி, திறன் மற்றும் வேலை வாய்ப்பு அளித்து ஊக்குவிப்பதாகும்''. ஆனாலும், வேலை வாய்ப்பு

உயர்வு மந்த நிலைமையிலேயே இருக்கிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கும் போதுமான பலன் இல்லை. வேலை செய்பவர்களில் 10 சதவிகிதத்தினருக்குத்தான் திறன்சார் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று அர்னஸ்ட் அண்ட் யங்க்ன் ஆய்வொன்று கூறுகிறது. இந்த அறிக்கையின்படி அடுத்த சில ஆண்டுகளில் திறன் மேம்பாடு சார்ந்த சவால்களாக, தற்போதுள்ள பயிற்சி முறைகளில் தகுதியை மேம்படுத்துவது, பயிற்சியின் தரம், அவசியம் ஆகியவற்றை போற்றுவித்து தகுந்த உள்கட்டமைப்பு வசதியும் இந்த பயிற்சித் திட்டங்களுக்கு நிதி வசதி அளிப்பதுவும் ஆகும்.

**பணியமர்த்தக்கூடிய வேலையாட்களை தயாரித்தல்:**

காப்புரிமை மற்றும் புதிய நிறுவனங்களை உருவாக்குதல் தரவரிசையில் இந்தியா அமைப்புகளில் தொழில்முனைவை ஊக்குவிக்க ஆய்வு மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளை அமைக்க போதிய நிதி வசதியில்லை. ஆகவே, இந்தியாவில் தொழில் முனைவை மேம்படுத்த, திறன் வளர்ச்சி மிகவும் அவசியமாகும். திறன்மிகு பணியாள்களை உருவாக்குவது மட்டுமல்லாமல், தேவைக்கேற்ற அளவிலான திறமையிலான பணியாள்களை வழங்குவதற்கும், பொருள் உற்பத்தியைப் பன்மடங்கு உயர்த்துவதற்கும், பயிற்சித் திட்டங்களை நிலைத்து நிற்க வைக்கவும் பெருமளவிலான பயிற்சித் திட்டங்களுக்குத் தேவையான வசதிகளையும், உள்கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்குவதற்கான திறமையான பயிற்சியாளர்களை உருவாக்குவதற்கும்




**இந்தியாவில் உள்ள மொத்த தொழிலாளர்களில் 2.3% பேர் மட்டுமே திறன் பயிற்சியை முறையாகப் பெற்றுள்ளனர்.**

சிறப்பான இடத்தில் இல்லையென்று ASSOCHAM-TISS ஆய்வு ஒன்று கூறுகிறது. இந்த ஆய்வின்படி மத்திய மாநில பல்கலைக்கழகங்கள் போன்ற உயர் கல்வி அவர்களைப் பணியமர்த்தவுமான கடமைகள் அரசுக்கு உண்டு. ஒட்டு மொத்த பொருளாதாரத்திற்கு தேவையான

பணியமர்த்தக்கூடிய பணியாள்களை உருவாக்குவதில் பங்கு பெறும் அனைவருடைய முயற்சிகளையும் சிறப்புத் தன்மைகளையும் ஒருங்கிணைக்க ஏதுவான தொழில்கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை உறுதி செய்து அதற்குத் தேவையான வளங்களை சேகரிக்க வேண்டும் என்று ஆய்வு கூறுகிறது.

### திறன் இந்தியா திட்டம்

திறன்மிகு பணியாளரை உருவாக்கவும் அவர்களுக்கு வேலை கிடைப்பதை எளிதாக்கவும் இந்திய அரசு திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு என்ற ஒரு புதிய அமைச்சகத்தைத் துவக்கியுள்ளது. புதிய தொழில்நுட்ப மாறுதல்களுக்கு ஏற்பவும் தொழிலாளர் சந்தை நிலவரங்களுக்கு ஏற்றவாறும் தற்போதுள்ள பணியாளர்களை பணியில் அமர்த்துவதற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்குவதே திறன் மேம்பாட்டு தேசியக் கொள்கையின் நோக்கமாகும். இந்தக் கொள்கையின்படி ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வண்ணம் அவர்களுடைய போட்டித்திறமையை வலுவாக்கி இந்தியப் பொருளாதாரத்தின் உற்பத்தி செயல்திறனை அதிகரிப்பது இதன் நோக்கமாகும். இந்த வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா என்பது இளைஞர்கள் பயனுள்ள வேலைகளைப் பெறும் வகையில் ஒவ்வொரு தொழில்துறைக்கும் தேவையான திறன் மேம்பாடுகளை தோற்றுவிப்பதாகும். இந்தியாவின் முதன்மையான திட்டமான இது, இளைஞர்கள் பெற்றுள்ள கல்வி மற்றும் தொழில் திறன்களை மதிப்பிட்டு அதற்கான சான்றிதழ்களை வழங்குவதாகும். ஏற்கனவே, கற்றுள்ள திறன்களை மதிப்பீடு செய்து சான்றிதழ்களை வழங்குவதும் இதில் அடங்கும். இந்தத் திட்டத்தின்கீழ் அமைந்துள்ள பயிற்சி நிலையங்களில் குறுகிய காலப் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதில் பயன்பெறுபவர்கள், இப்போது, தொழில் சந்தையில் உள்ள அனைவரும் மட்டுமல்லாமல், புதிதாக நுழைபவர்களும் ஆகும். அமைப்பு சார்ந்த, அமைப்பு சாராத இரண்டு துறைகளிலும் உள்ளவர்கள் இதில் அடங்குவார்கள்.

| பணியாளர் | திறன் பெற வேண்டியவர்களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| 1. புதியவர்கள் (முதல்முறையாக பணி செய்ய வருபவர்கள்) | 1,28,00,000 (ஒவ்வொரு ஆண்டும்) |
| 2. அமைப்பு சார்ந்த தொழிலாளர் துறை | 2,60,00,000 |
| 3. அமைப்பு சாராத தொழிலாளர் துறை | 43,30,00,000 |
| 4. 2022க்குள் திறன் பெற வேண்டி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் | 50,00,00,000 |
| 5. தேசிய திறன் மேம்பாட்டு கவுன்சிலின் கொள்திறன் | ஆண்டுக்கு 31,00,000 பேர் |

* எண்ணிக்கைகள் 2004-05 நிலவரப்படி

**ஆதாரம்:திறன்மேம்பாடு தேசியக் கொள்கை 2015.**

திறன்மிகு இந்தியா என்பது மத்திய அரசின் எதிர்பார்ப்பு மிகுந்த ஒரு திட்டமாகும். பல துறைகளில் பல திறமைகளோடு உள்ள பணியாளர்களுக்கு தற்போது தொழில்துறைக்குத் தேவையான திறன்களை வழங்குவது அதன் நோக்கமாகும்.

பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் செயல்படும் திட்டங்கள் தேசிய திறன் மேம்பாடு வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. தொழில்முனைவு, பிற திறன்கள், நிதிசார் திறன்கள் போன்றவற்றில் பயிற்சிகளை அளிக்க திட்டங்களை வகுக்க மற்ற நிறுவனங்களும், கழகங்களும் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டின் தொழில்முனைவை போற்றுவிக்க பயிற்சி, ஆலோசனை, ஆய்வு போன்றவைகளை மேற்கொள்ள சிறுவணிக மேம்பாடு மற்றும் தொழில்முனைவு தேசியக் கழகம் நிறுவப்பட்டது. தொழில்முனைவு, திறன் மேம்பாட்டு கல்விகள், பயிற்சியாளர்களை பயிற்றுவிப்பது மற்றும் தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றை இந்தக் கழகம் செயல்படுத்துகிறது.


மாணவ தொழில்முனைவோரை ஊக்குவிக்க பல்கலைக்கழகங்கள் புது தொழில் வாய்ப்பு உற்பத்தி மையங்களையும் பயிற்சியாளர்களையும் தோற்றுவித்துள்ளனர். புதிய வியாபார உத்திகளையும், தொழில்நுட்பப் பொருட்களையும் உற்பத்தி செய்ய பல மாநில அரசுகள், பெரிய நகரங்களில் மட்டுமல்லாமல் சிறிய ஊர்களிலும் தொழில்முனைவு மையங்களை அமைத்து வருகின்றன. திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகம் இப்படிப்பட்ட பயிற்சியாளர்களையும், முன்னோடிகளையும் புது தொழில் முனைவு ஆய்வாளர்களையும் ஒன்றிணைத்து வலைதளம் மூலம் அவர்களை ஒருங்கிணைத்துள்ளது. ஆகவே அரசுகளும், பொருளாதார மேம்பாட்டிற்கு தொழில்முனைவை ஊக்குவிக்கின்றன. ஆய்வின்படி 87 சதவிகித மாணவர்கள் தங்கள் வாழ்வில் எப்போதாவது ஒரு முறை, தொழில்முனைவோராக உருவாக வேண்டும் என்று நினைக்கிறார்கள். நாட்டில் தொழில்முனைவுக்கு மிகுந்த வாய்ப்புள்ளதாக அதில் 90 சதவிகிதத்தினர் எண்ணுகிறார்கள். இந்த ஆய்வின்படி பொருளாதார வகையில் சற்று வலிமையாக உள்ளவர்களைவிட நலிந்த மக்களுக்கு தொழில் முனைவோராக வேண்டும் என்ற எண்ணம் அதிகமாக உள்ளது (பிசினஸ் ஸ்டான்டர்டு 2013). ஆகவே, நம் இளைஞர்களிடம் தொழில் முனைவுக்கான உற்சாகம் அதிகரித்து வருகிறது.

இன்றைய வியாபார உலகத்திற்கும், புதியன கண்டுபிடிப்பதற்கான சூழ்நிலைகளுக்கு ஏற்ப தொழில் முனைவுத் திறமை உயர வேண்டும். பொருளாதாரமும் அதிக அளவில் அறிவுசார் நிலையாக மாறி வருகிறது. தற்போதுள்ள நவீன பணிச் சூழ்நிலையில், வேலை செய்பவர்களுக்கு புதிய திறன்கள் தேவைப்படுகின்றன. மேம்பட்ட போட்டித் திறன்களை மனித வளத்தை உருவாக்க இந்தியாவின் திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்புக்கான பயிற்சித் திட்டங்கள் இந்த நவீன திறன்களையும், வேலை செய்யும் புதிய மனநிலையையும் உருவாக்க வேண்டும்.

தொழில் முனைவோர் என்பவர் இன்றைய நிலைமைகளைக் கூர்ந்து ஆராய்ந்து புதிய வர்த்தக பொருட்களையும், உத்திகளையும் சந்தையில் புகுத்த ஏதுவான வளங்களை, பிரச்சினைகளும், சவால்களும் இருந்த நிலையில் திரட்டி செயல்படுத்துபவர் ஆவார். அவர்கள், சமுதாயத்திற்கான மேம்பாட்டிற்குத் தேவையான புதிய தொழில்நுட்பத்தையும், கண்டுபிடிப்புகளையும் உருவாக்க தங்களுடைய எண்ணங்களைத் தீட்டுபவர்கள் ஆவார்கள். அவர்களுக்கு, புதியனவற்றைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற தொழில்முனைவு மிகுந்து கொண்டே இருக்கும். அவர்களுக்கு பிரச்சினைகளை தீர்க்கவும், அதற்கு தேவையான குழுக்களை உருவாக்கவும்

ஆற்றல் உண்டு. தொழில் முனைவோருக்கு புதிய வியாபாரத்தை உருவாக்குவதற்கான தொடர் முயற்சியும், துணிவும் இருக்க வேண்டுமாதலால் அவர்கள் குழப்பம் மிகுந்த, போட்டி மிகுந்த வியாபாரச் சூழ்நிலையில் நிலைத்து நிற்க வேண்டிய திறன்களை பெற்றிருக்க வேண்டும்.

மற்றும் அணுகுமுறைகளை உருவாக்கும் கல்வி அவசியம். தொழில்முனைவோருக்கு முழுமையான கல்வியும், பயிற்சியும் அளிக்க உருவாக்கப்பட்டுள்ள அகமதாபாத்திலுள்ள இந்திய தொழில் மேம்பாட்டுக்கழகம் இளைஞர்களுக்கு மட்டுமல்லாமல், சிறார்களிடமும் இந்தத் தொழில்முனைவு



ஆகவே, தொழில்முனைவோர் திறன்கள் என்பது பலவகையான திறன்களை உள்ளடக்கியதாகும் : மக்கள்சார் திறன்களான சம்மந்தப்பட்டவர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மக்கள் தொடர்பு; வாழ்க்கைத் திறன்களான இலக்கை நிர்ணயித்தல், தொழில் முன்னேற்றத்தைத் திட்டமிடுதல் மற்றும் மனித ஆற்றல் மேம்பாடு தொடர்புத்திறன்கள் மற்றும் பிற திறன்களாகும். ஒரு தொழில் முனைவில் ஏற்படும் பலவகையான சிக்கல்களை எதிர்கொள்ளத்தேவையான அறிவு, திறன்

எண்ணத்தை தோற்றுவிக்க அவர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கிறது.

**“திறன்முனைவு நடவடிக்கைகள்”**

தொழில்முனைவோருக்கு பிற திறன் பயிற்சி, தொழில்முனைவு தகுதி தேவையான ஒருவருக்கு ஒரு குழுவின் வேலை செய்யும் திறமை, தலைமை பக்குவம், மொழி சார்ந்த திறன்கள், தனிநபர் பழக்க வழக்கங்கள் ஆகியவை இன்றியமையாததாகும். ஒரு தொழிலிலிருந்து மற்ற தொழிலுக்கும்,

பிறருக்கும் வழங்கக்கூடிய திறமைகளே தொழில்முனைவுத் திறன்களாகும். ஆகவே, புதிய தொழில்முனைவை மேற்கொள்ள விரும்புபவர்கள் இப்படிப்பட்ட தொழில் முனைவு சார்ந்த பயிற்சிகளை அடைய வேண்டும்.

திறன்சார் வணிக உத்தி உருவாக்குதல், வியாபார திட்டத்தை உருவாக்குதல், சந்தையை எப்படி ஆய்வு செய்வது, வியாபார திட்டங்களை தயாரித்து எப்படி வெளிப்படுத்துவது, உள் நாட்டிலேயே புதியனவற்றை எப்படி கண்டுபிடிப்பது, தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எப்படி வியாபாரத்தை வளர்ப்பது மற்றும் வியாபாரத்திற்கு தேவையான கணக்கு வைத்தல் மற்றும் நிதிசார் திறமைகள்சார்ந்த தேவைக்கு ஏற்ற பயிற்சித் திட்டங்களை தொழில்முனைவோருக்கான பயிற்சித் திட்டங்களாக மேற்கொள்ள வேண்டும்.

| பயிலரங்குகள் | கருத்தரங்கங்கள் |
|---|---|
| வியாபார வாய்ப்பு கண்டறிதல், உருக்கொடுத்தல்.<br>வியாபாரத்திற்கு சாதகமான சுற்றுசூழல்கள்.<br>மாதிரி உத்தி உருவாக்கல் திட்டம்.<br>பணியாளர்களை சிறந்த மனிதவளமாக்கல் | அறிவுசார் சொத்துரிமைகள், வணிக சட்டங்கள் மற்றும் சட்ட அமைப்புகள்<br>பொருள் மதிப்பு உருவாக்கல் மற்றும் விளம்பரம் |

**மேலும் திறன் முனைவோர்களை உருவாக்க ஆலோசனைகள் மற்றும் இனிவரும் பாதை**

- பெண்கள் மற்றும் திருநங்கைகளுக்கு திறன் மேம்பாடு திட்டங்களை வழங்கி தொழில்முனைவோராக்க அவர்களுக்கு பாலினம் சார்ந்த அக்கறை காட்ட வேண்டும். “எல்லோரையும் உள்ளடக்கிய மேம்பாட்டுக்கு” பகுதிசார் ஏற்றத்தாழ்வுகள் நீக்கி, தாழ்த்தப்பட்ட மக்கள், விளிம்பு நிலையில் வாழ்பவர்கள் ஆகியோருக்கு திறன் பயிற்சி அளிக்க சிறப்புப் பார்வை இருக்க வேண்டும்.
- விளிம்பு நிலையில் உள்ள சமூகத்தினிடையே போதுமான கல்வி இல்லாதது அவர்களுக்கு திறன்கள் வழங்குவதில் ஏற்படக்கூடிய தடைகளாகும். கல்வி குறைவாக இருப்பதால் பொறுப்புக்களை ஏற்கும் நம்பிக்கை அவர்களுக்கு குறைவு. இப்படி தன்னம்பிக்கை குறைவும், நம்மால் முடியாது என்ற எண்ணமும் பெண்களிடையே அதிகமாக காணப்படும். இப்படிப்பட்ட குறைகளை போக்க தொழில் முனைவு ஊக்குவிக்கும் நேரடிப் பயிற்சி உதவி செய்யும்.
- சமூகப்பொருளாதார, அன்றாட வாழ்க்கை உணர்வுகள் பலதரப்பட்ட நிலையில் உள்ள பலதரப்பட்ட பயனாளிகளுக்கு ஏற்ற வகையில் பலதரப்பட்ட பயிற்சித் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். பலதரப்பட்ட பின்னணிகள் கொண்ட அனைவரும் பயன்பெறும் வகையில், அவர்களுக்கு ஏற்றவகையான மாற்றி ஏற்றுக்கொள்ளக்கூடிய பயிற்சி நடைமுறைகள் அவர்களுடைய மொழியில் பயிற்சிகள், அவர்கள் இடங்களுக்கு ஏற்ற பயிற்சித் திட்டங்கள் ஆகியவை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பிற பயிற்சி நிலையங்கள், தொழில்முனைவு மற்றும் திறன்சார் பயிற்சிகளை மேற்கொள்வதை வலைதளங்கள் மூலமாக எளிதாகப் பெறும் வண்ணம் தொழில்முனைவுக் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைகளில் உள்ள நிபுணர்கள் பயிற்சி திட்டங்களையும், பாடத் திட்டங்களையும் உருவாக்க வேண்டும்.

- பயனுள்ள வேலை வாய்ப்புக்களைப் பெற தொழில்சார் கல்வி மற்றும் திறன் பயிற்சிகளை உலகத்தரம் வாய்ந்ததாக அவர்கள் அமைக்க வேண்டும். அரசு செயல்படுத்தும் தொழில்முனைவு மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்புத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுகின்றானவா என்பதைக் கண்காணித்து அவைகளால் ஏற்படும் நிதிச்சுமைகளைக் குறைக்கவும், இந்தத்துறையிலுள்ள பிற பயிற்சி நிறுவனங்களை ஊக்குவிக்கவும், அவர்களைக் கண்காணிக்கவும், இந்தத் திட்டங்களின் பயன்களையும், தாக்கங்களையும் மதிப்பீடு செய்யவேண்டும். செயல்படக்கூடிய மற்றும் பணியமர்த்த தேவையான திறன்கள்சார் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- புதிதாக உருவாகும் தொழில் வியாபார புது முயற்சிகளுக்கான கொள்திறன்களை வளர்த்தல், தொடர்ந்து அவர்களை படிப்படியாக உயர்த்துதல் மற்றும் வழிகாட்டுதல், ஆகியவற்றை உருவாக்க மற்ற கூட்டு நிறுவனங்களோடு சேர்ந்து செயல்பட வேண்டும். ஆகவே, நம்முடைய எல்லா திறன் மேம்பாட்டு செயல்பாடுகளிலும், எந்த குறிப்பிட்ட துறைக்கு என்பதை நிர்ணயிக்க வேண்டும். பகுதிசார் மற்றும் மக்கள் சார்ந்த திறன் மேம்பாட்டு வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டங்களின் செயல்பாடு, நோக்கம் மற்றும் குறைபாடுகள் ஆகியவைகள் தெளிவாக விளக்கப்பட வேண்டும்.
- தொழில்முனைவை உருவாக்க ஒவ்வொரு பயிற்சிக்கும் ஏற்ற நிதி வழங்கும் முறைகளைத் தெளிவாக்குதல்.
- உயர் தொழில் முனைவு மற்றும் திறன் முனைவு ஆகியவற்றை உருவாக்கி செயல்படுத்தும் திட்டங்களை மேற்கொள்ளவேண்டும்.

**முடிவாக**

இந்தியாவில் திறன்சார் புது முனைவு உருவாக்கல் மற்றும் புதுத்துவக்கங்களை உருவாக்கல் ஆகியவற்றின் முழு செயல்திறன்களை அடைய நாம் எடுக்கும் முயற்சிகள் திறன் முனைவு மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் ஆர்வம் காட்டும் மாணவர்களுக்கு வழிகாட்டு கல்விகளில் பயிற்சிகளும் அளிப்பதாக இருக்கவேண்டும். அவர்களுடைய தொழில் முனைவை கூர்மையாக்கி புதிய வியாபார உத்திகளை உருவாக்கும் திறன்களை வலுவாக்கி, துணிச்சலாக எதிர்பார்க்க முடியாத நிலைமைகளையும் சமாளிக்கும் வகையிலும், குறிப்பாக புதிதாகத் தொழில் அல்லது வணிகம் துவங்கும் போது ஏற்படும் தடங்கல்களை எதிர்கொள்ளும் வகையிலும் திறமைகளை வளர்க்கவேண்டும். இப்படி இலக்குகளை அடைவது மற்றும் தொழில் முனைவுசார் உந்துதல்கள் சார்ந்த கல்விகள் உயர்நிலைப் பள்ளி நிலைமையிலேயே வழங்கப்படுவது நல்லது. இந்த வகையில், தொழில் முனைவுப்பள்ளிகள் மேலாண்மைக் கழகங்கள், தொழில் வணிக முனைவு மையங்கள், அரசு மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியவை அனைத்தும் தொழில் முனைவுக்கு ஏதுவான சுற்றுச்சூழலை உருவாக்கி சந்தைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தி புதிய இந்தியாவில் அர்த்தமுள்ள சீர்திருத்தங்களைக் கொண்டுவர முடியும்.

---

- **Dr. அமித்குமார் துவேதி**, ஆசிரியர், இந்திய தொழில்முனைவு மேம்பாட்டுக் கழகம், அகமதாபாத், (குஜராத்) (akdwivedi@ediindia.org)

**சரவணன் வேலுசாமி**, இணை ஆய்வாளர் இந்திய தொழில்முனைவு மேம்பாட்டுக் கழகம், அகமதாபாத்,

# புல்லட் இரயில் பயணம் இந்தியாவில் தொடங்குகிறது

பிரதமர் நரேந்திரமோதி அவர்களும், ஜப்பான் பிரதமர் சின்சோஅபே அவர்களும் இணைந்து இந்தியாவின் முதல் அதிவேக இரயில் திட்டத்திற்கு செப்டம்பர் 14, 2017 அன்று அடிக்கல் நாட்டினர். அதிவேக புல்லட் இரயில் ஜப்பான் நாட்டுத் தொழில் நுட்பத்துடன் மும்பைக்கும், அகமதாபாத்துக்கும் இடையே இயக்கப்படும். இது ஒரு புதுயுகத்தின் ஆரம்பம். பாதுகாப்புடன் கூடிய விரைவான இந்த இரயில் சேவை இந்திய இரயில்வேயை அடுத்த படிநிலைக்குக் கொண்டு செல்லும்.

**குறைந்த செலவில் திட்டம்:**

பிரம்மாண்டமான அளவில் நிறைவேற்றப்படும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு தேவைப்படும் நிதியின் பெரும்பகுதி கடன் மூலமாகவே திரட்டப்படுகிறது. இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் இடையேயான ஒத்துழைப்பு உடன்படிக்கையின் ஒரு பகுதியாக, ஜப்பான் அரசாங்கம் இந்தத்திட்டத்திற்கு ரூ. 88 ஆயிரம் கோடியை 0.1% வட்டிக்குக் கடனாக வழங்குகிறது. இது மிகக்குறைவான வட்டியாகும். இந்தப்பணத்தை 50 ஆண்டுகளில் திரும்பத்தந்துவிட வேண்டும். கடன் வாங்கிய நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்கு பிறகு கடனைத் திரும்ப செலுத்த ஆரம்பிக்கலாம். ஆண்டுக்குத் தோராயமாக ரூ. 7 முதல் 8 கோடி வட்டி கட்டவேண்டியிருக்கும்.

உலக வங்கி அல்லது அதைப் போன்ற பிற முகமைகளில் இருந்து பெறப்படும் கடன்களுக்கு 5 முதல் 7% வரை வட்டி செலுத்த வேண்டும். 25 முதல் 35 ஆண்டுகளுக்குள் கடன் தொகையைத் திரும்பச் செலுத்தவேண்டும். அதிவேக இரயில் திட்டத்திற்கு இந்தியா வாங்கும் கடன், நாட்டின் நிதி ஆதாரத்திற்கு சுமையை ஏற்படுத்தாது. திட்டத்திற்காகும் முழு செலவில் 80% தொகையை ஜப்பான் அரசு கொடுக்கிறது. நமது நாட்டின் வரலாற்றிலேயே உள்கட்டமைப்பு திட்டத்திற்காக இப்படிப்பட்ட சாதகமான அம்சங்களைக் கொண்ட கடன் இதுவரை கிடைத்ததே இல்லை.

**இந்தியாவில் உற்பத்தி:**

பிரதமரின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று ''இந்தியாவில் உற்பத்தி'' என்பதாகும். இரு அரசுகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின்படி, MAHSR திட்டம் எனப்படும் புல்லட் இரயில் திட்டத்தில் 'இந்தியாவில் உற்பத்தி', 'தொழில்நுட்பப் பரிமாற்றம்' ஆகிய நோக்கங்களும் இடம்பெற்றுள்ளன. இருநாடுகளைச் சேர்ந்தவர்களையும் கொண்டிருக்கும் செயலாக்கப்படையின் வழிகாட்டுதலோடு பணிகள் மேற்கொள்ளப்படும். இந்தியத்தொழில்துறை, ஜப்பானியத் தொழில்துறை, DIPP, NHSRCL, JETRO ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய நான்கு துணைக்குழுக்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்புள்ள பொருள்களை அடையாளம் கண்டறியும். இது தொடர்பாக இந்தியா ஜப்பான் தொழில் அமைப்புகளுக்கிடையே தீவிர கலந்தாய்வு நடைபெற்றுவருகிறது. எதிர்காலத்தில் ஜப்பானும், இந்தியாவும் இணைந்து பலவிதமான உபபொருள்களை உற்பத்தி செய்யும் முயற்சிகளில் ஈடுபடஇருக்கின்றன. இந்தியாவில் உற்பத்தி என்ற குறிக்கோளின்படி, புல்லட் இரயில் திட்டத்தில் செய்யப்படும் முதலீட்டில் பெரும்பகுதி இந்தியாவிலேயே செலவிடப்படும், இந்தியாவிலேயே பயன்படுத்திக்கொள்ளப்படும்.



இதனால், இந்தியாவின் கட்டுமானத்துறையின் மதிப்பும் உயரும். முதலீடுகள் கிடைப்பதால் மட்டுமின்றி, புதிய தொழில்நுட்பம், பணிபுரியும் கலாச்சாரம் போன்றவற்றாலும் நமது கட்டுமானத்துறை பயன்பெறும். இந்தத் திட்டம் கட்டுமானத்தின்போது 20000 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கஇருக்கிறது. இத்தகைய பெரிய திட்டங்களை இந்தியாவில் நிறைவேற்றக்கூடிய பயிற்சியை இவர்கள் பெறுவார்கள். கற்கள், கட்டைகள் போன்றவற்றைக்கொண்டு நிலைப்படுத்த வேண்டிய தேவை இல்லாத புதுவித அதிவேக இரயில்பாதை அமைப்புகள், கடலுக்கு அடியில் சுரங்கம் அமைத்தல் போன்ற பணிகளில் கட்டுமானத்திறன்களை நமது தொழிலாளர்கள் பெறுவார்கள். வதோதராவில் இதற்கெனவே தனியாக அதிவேக இரயில் பயிற்சிக்கழகம் அமைக்கப்படஉள்ளது. மெய்நிகர்த்தூண்டலை அளிக்கக்கூடிய நவீன கருவிகள் ஜப்பானில் உள்ளதைப்போலவே இங்கும் அமைக்கப்படும். இந்தப்பயிற்சிக்கழகம் 2020 ஆம் ஆண்டு இறுதியில் இருந்து செயல்படும். இங்கு 4000 ஊழியர்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் பயிற்சி தரப்படும். இங்கு பயிற்சி பெறும் ஊழியர்கள் வெளிநாட்டைச் சார்ந்திராமல் இங்குள்ளவர்களுக்கு பின்னாளில் பயிற்சி தருவார்கள். எதிர்காலத்தில் அதிவேகஇரயில் பாதைகளை அமைப்பதற்கு இது ஒரு வலுவான பின்புலமாக அமைந்திடும். இதனோடு கூட, இந்திய இரயில்வேயின் 300 இளம் அதிகாரிகள் அதிவேக இரயில்பாதை தொழில்நுட்பம் பற்றி ஜப்பானுக்கு சென்று பயிற்சி பெறுவார்கள். நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து தேவைப்படக்கூடிய மனித வளத்தைக் கருத்தில்கொண்டு ஜப்பான் பல்கலைக்கழகங்களில் முதுநிலைப்படிப்புகளில் 20 இடங்கள் பணியில் இருக்கும் இரயில்வேத்துறை அதிகாரிகளுக்குத் தரப்படும். இதற்கு முழு நிதி உதவியையும் ஜப்பான் அரசாங்கம் செய்யும்.

அதிவேக இரயில் போக்குவரத்தில் அதி நவீன தொழில்நுட்பத்தை இந்தியா முழுமையாகப்பெறும். இத்தகைய போக்குவரத்திற்கான ஷிங்கன்சென் தொழில்நுட்பம் மிகவும் நம்பகமானது, பாதுகாப்பானது என்பது 50 வருடங்களாக நிரூபணம் ஆகி வருகிறது. இரயில்களின் தாமதம் ஒரு நிமிடத்திற்கும் குறைவு. உயிர் இழப்புகள் அறவே இல்லை.

# புதிய மத்திய அமைச்சரவை:

*மத்திய அமைச்சரவை மூன்றாவது முறையாக செப்டம்பர் 3, 2017இல் மாற்றியமைக்கப்பட்டது. அமைச்சரவை பற்றிய விவரம்:*

**பிரதமர் திரு.நரேந்திர மோதி** அணுசக்தி, விண்வெளி, பணியாளர் நலம், பொதுமக்கள் குறைகள், ஓய்வூதியம்முக்கியமான கொள்கைகள்.

**கேபினட் அமைச்சர்கள்:**

**திரு.ராஜ்நாத்சிங்** உள்துறை

**திருமதி.சுஷ்மா ஸ்வராஜ்** வெளிநாட்டு விவகாரங்கள்

**திரு.சுரேஷ்பிரபு** வணிகம் தொழில்

**திரு.அருண் ஜெய்ட்லி** நிதி, பன்னாட்டு நிறுவனங்கள்

**திரு.நிதின் ஜெய்ராம் கட்கரி** சாலைப்போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் கப்பல் போக்குவரத்து, நீர்வளம், கங்கை நதிதூய்மையாக்கம்

**திரு.**D.V. **சதானந்த கௌடா** புள்ளிவிவரம், திட்டங்களின் செயலாக்கம்

**சுஷ்ஸ்ரீ உமா பாரதி** குடிநீர், துப்புரவு

**டாக்டர்.ஹர்ஷ்வர்தன்** அறிவியல் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வனங்கள், பருவநிலை மாற்றம்

**திரு.ராம்விலாஸ் பஸ்வான்** நுகர்வோர் விவகாரங்கள், உணவு பொதுவிநியோகம்

**திருமதி.மேனகா சஞ்சய் காந்தி** பெண்கள், குழந்தைகள் மேம்பாடு

**திரு.ஆனந்த்குமார்** வேதிப்பொருள்கள், உரம், நாடாளுமன்ற விவகாரங்கள்

**திரு.ரவிஷங்கர் பிரசாத்** மின்னணு, தகவல் தொழில்நுட்பம், சட்டம், நீதி

**திரு.ஜகத்ப்ரகாஷ் நட்டா** சுகாதாரம், குடும்பநலம்

**திரு.சௌத்ரி பிரேந்தர் சிங்** ஸ்டீல்

**திரு.அசோக் கஜபதி ராஜு** விமானப்போக்குவரத்து

**திரு. அனந்த் கீதி** கனரகத்தொழில்கள், பொதுத்துறை நிறுவனங்கள்

**திருமதி.ஹர்ஷிம்ரத்கௌர்** உணவுப்பதனத் தொழிற்சாலைகள்

**திரு.ஜூவல் ஓராம்** பழங்குடியினர் நலம்

**திரு.ராதா மோகன் சிங்** வேளாண்மை, விவசாயிகள் நலம்

**திருமதி. ஸ்மிருதி ஜூபின் இரானி** ஜவுளித்துறை, தகவல் ஒலிபரப்புத்துறை

**திரு.தாவார் சந்த் ஜெலாத்** சமூக நீதி, அதிகாரமளித்தல் துறை

**திரு.பிரகாஷ் ஜவடேகர்** மனிதவளம்

**திரு.தர்மேந்திர ப்ரதான்** பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, திறன் மேம்பாடு, தொழில் முனைவு

**திரு. பியூஷ் கோயல்** நிலக்கரி, இரயில்வே

**திருமதி.நிர்மலா சீத்தாராமன்** இராணுவம்

**திரு.முக்தார் அப்பாஸ் நக்வி** சிறுபான்மையினர் நலம்

**இணை அமைச்சர்கள் (தனிப்பொறுப்பு) :**

**திரு.இந்திரஜித் சிங் ராவ்** திட்ட அமைச்சகம்

**திரு.சந்தோஷ் குமார் கேங்வர்** தொழிலாளர், வேலைவாய்ப்பு

**திரு.ஸ்ரீபத் யெஸ்சோநாயக்** ஆயுர்வேதா, யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, ஹோமியோபதி (ஆயுஷ் அமைச்சகம்)

**டாக்டர்.ஜித்தேந்திர சிங்** வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாடு

**டாக்டர்.மகேஷ் ஷர்மா** பண்பாட்டு அமைச்சகம்

**திரு. கிரிராஜ் சிங்** நுண், சிறு, குறு நிறுவனங்கள்

**திரு. மனோஜ் சின்கா** தகவல் தொடர்புத்துறை

**கர்னல்.ராஜ்யவர்தன்சிங் ரத்தோர்** இளைஞர் நலம், விளையாட்டு

**திரு.ராஜ்குமார் சிங்** ஆற்றல் அமைச்சகம், புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

**திரு.ஹர்தீப்சிங் புரி** வீட்டு வசதி, நகர்ப்புற மேம்பாடு

**திரு.அல்போன்ஸ் கன்னன்தனம்** சுற்றுலாத்துறை

**இணை அமைச்சர்கள்:**

**ஜென்ரல் (ஓய்வு) வி.கே.சிங்** வெளியுறவு

**திரு. இந்திரஜித்சிங் ராவ்** வேதிப்பொருள்கள், உரம்

**டாக்டர்.ஜித்தேந்திரசிங்** அணுசக்தி, விண்வெளி, பணியாளர் நிர்வாகம், பொதுமக்கள் குறைகள், ஓய்வூதியம், பிரதமர் அலுவலகம்.

**டாக்டர். மகேஷ் ஷர்மா** சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்றம்.

**திரு.ராம் கிரிபால் யாதவ்** ஊரக வளர்ச்சி

**திரு. ஹரிபாய் பார்த்திபாய் சௌத்ரி** சுரங்கம், நிலக்கரி

**திரு.எஸ்.எஸ்.அலுவாலியா** குடிநீர், துப்புரவு

**திரு. ஹன்ஸ்ராஜ் கங்காராம் அஹிர்** உள்துறை

**திரு.மனோஜ் சின்கா** இரயில்வே

**திரு. பி.பி.சௌத்ரி** சட்டம், நீதி, பன்னாட்டு நிறுவனங்கள்

**திரு.உபேந்திர குஷ்வாஹா** மனிதவள மேம்பாடு

**திரு.பி. இராதாகிருஷ்ணன்** கப்பல் போக்குவரத்து, நிதி

**திரு.கிரண்ரிஜீஜு** உள்துறை

**திரு.க்ரிஷன்பால்** சமூக நீதி, அதிகாரம் வழங்கல்

**திரு.விஜய் சம்ப்லா** சமூக நீதி, அதிகாரம் வழங்கல்

**திரு.விஷ்ணு** தியோசாய் ஸ்டீல்

**திரு.சுதர்ஷன் பகத்** பழங்குடி மக்கள் நலம்

**திரு.விஜய் கோயல்** நாடாளுமன்ற விவகாரங்கள், புள்ளியியல், திட்டச்செயலாக்கம்

**திரு.ஒய்.எஸ்.சௌத்ரி** அறிவியல் தொழில்நுட்பம், புவி அறிவியல்

**திரு.ஜயந்த் சின்கா** விமானப்போக்குவரத்து

**கர்னல்.ராஜ்யவர்தன்சிங் ரத்தோர்** தகவல் ஒலிபரப்பு

**திரு.பாபுல் சுப்ரியா (பாபுல் சுப்ரியோ) பரல்** கனரகத்தொழில்கள், பொதுத்துறை நிறுவனங்கள்

**சத்வி நிரஞ்சன் ஜோதி** உணவுப்பதனத்தொழில்

**திரு.ராம்தாஸ் அதாவாலே** சமூக நீதி, அதிகாரம் வழங்கல்

**திரு.ரமேஷ் சந்தப்பா ஜிகாஜினாகி** குடிநீர், துப்புரவு

**திரு.ராஜென் கொஹைன்** இரயில்வே

**திரு.புருஷோத்தம் ருபலா** வேளாண்மை,விவசாயிகள் நலன், பஞ்சாயத் ராஜ்

**திரு.எம்.ஜே.அக்பர்** வெளிஉறவு

**திரு.ஜஸ்வந்த்சிங் சுமன்பாய்** பழங்குடியினர் நலம்

**திரு.அர்ஜூன்ராம் மெஹ்வால்** நாடாளுமன்ற விவகாரங்கள், நீர்வளம், ஆறுகள் மேம்பாடு, கங்கை நதி தூய்மையாக்கம்

**திரு.மன்சுக் எல்.மன்டாவியா** சாலைப்போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, வேதிப்பொருள்கள், உரம்

**திருமதி.அனுப்ரியா படேல்** சுகாதாரம், குடும்ப நலம்

**திரு.சி.ஆர்.சௌத்ரி** நுகர்வோர் நலம், உணவு, பொதுவிநியோகம், வணிகம், தொழிற்சாலைகள்

**டாக்டர்.சுபாஷ்ராம்ராவ்பாம்ரே** பாதுகாப்பு

**திரு.அஜய் தம்தா** ஜவுளித்துறை

**திருமதி.கிருஷ்ணராஜ்** வேளாண்மை, விவசாயிகள் நலன்

**திரு.அல்போன்ஸ் கன்னன்தனம்** மின்னணு, தகவல் தொழில்நுட்பம்

**திரு.ஷிவ்ப்ரதாப்சுக்லா** நிதி

**திரு.அஷ்வினிகுமார் சௌபே** சுகாதாரம், குடும்ப நலம்

**டாக்டர்.வீரேந்திரகுமார்** பெண்கள், குழந்தைகள் நலம், சிறுபான்மையினர் நலம்

**திரு.அனந்த்குமார் ஹெக்டே** திறன் மேம்பாடு, தொழில்முனைவு

**திரு.கஜேந்திரசிங் ஷெகாவத்** வேளாண்மை, விவசாயிகள் நலன்


**டாக்டர்.சத்யபால் சிங்** மனிதவள மேம்பாடு, நீர்வளம், ஆறுகள் மேம்பாடு, கங்கை நதி தூய்மையாக்கம்

ஆதாரம்: www.india.gov.in

•

# 23வது தில்லி புத்தகக்கண்காட்சியில் நூல் வெளியீட்டுப்பிரிவு பங்கேற்பு

இந்திய வெளியீட்டாளர்கள் கூட்டமைப்புடன் (FIP) இணைந்து இந்திய வர்;த்தக மேம்பாட்டுக்கழகம் தில்லி, பிரகதி மைதானத்தில் 23வது புத்தகக்கண்காட்சியை ஏற்பாடு செய்து நடத்தியது. ஆகஸ்ட் 26 முதல் செப்டம்பர் 3, 2017வரை நடைபெற்ற இதில் புத்தக வெளியீட்டுப்பிரிவு பங்கேற்றது. இந்தப் புத்தகக்கண்காட்சியின் பேசுபொருள் 'இந்தியா வாசிக்கிறது, இந்தியா வளர்கிறது' என்பதாகும். 130 புத்தக வெளியீட்டாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.




இந்திய அரசின் நூல் வெளியீட்டுப்பிரிவு வெளியிட்டுள்ள புத்தகங்கள், மின்நூல்கள், இந்தி, ஆங்கில, மாநிலமொழி இதழ்கள் ஆகியவற்றை எண்ணற்ற பார்வையாளர்கள், குழந்தைகள், முதியோர்களுக்குக் காட்சிப் படுத்தும் வாய்ப்பை இந்தப் புத்;தகக்கண்காட்சி வழங்கியது.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 75வது ஆண்டின் நினைவாகவும், இந்தியா சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்;கும் விதமாகவும் சுதந்திரப் போராட்டம் தொடர்பான புத்தகங்கள் தனியாக அமைக்கப்பட்டிருந்தன. இதிலிருந்த நூல்

வெளியீட்டுப் பிரிவின் புத்;தகங்கள் அதிகமான கவனத்தைப் பெற்றன. ‘இந்தியத் தியாகிகள் யார்? எவர்?’ (கொண்டாடப்படாத வீரர்களின் வாழ்க்கைச் சித்திரங்கள்), ‘ராஜ் முதல் சுவராஜ் வரை’, ‘பாரதத்தில் ஆங்கிலேயர் ஆட்சி’, ‘பாரத சுதந்திரப்போராட்ட இதிகாசம்,’ ‘இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் வரலாறு’, ‘இந்தியா: கலகத்திற்கு முன்னும் பின்னும்’, ‘1857: எழுச்சி’, ‘அவ்வப்போது எங்களை நினைவில் வையுங்கள்’ போன்ற பல குறிப்பிடத்தகுந்த தலைப்புகளில் வெளியீட்டுப் பிரிவின் நூல்கள் இடம் பெற்றிருந்தன. ‘மகாத்மாகாந்தியின் தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்;துக்கள்’ என்ற 100 தொகுதிகள் அடங்கிய நினைவுச்சின்னம் போலத்திகழும் நூல்களை நூல்வெளியீட்டு இயக்குநரகம் மக்களின் பார்வைக்கு வைத்திருந்தது. இதுதவிர காந்தியடிகள் பற்றிய பிறநூல்களான ‘மகாத்மா’ (8 தொகுதிகள்), ‘சம்பரனில் காந்தி, ‘ரோமைன் ரோலண்ட் காந்தி கடிதங்கள்’, ‘சத்தியாகிரகம்’ போன்றவற்றையும் வைக்கப்பட்டிருந்தன. இந்தியாவின் செழிப்பான பல்வேறுவகைப்பட்ட பண்பாட்டுப் பராம்பரியங்களைப் பற்றிய நூல்கள், சுதந்திரப்போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாறுகள், தேசியத்தலைவர்கள், வரலாறு, கலை பண்பாடு, நிலமும் மக்களும் பற்றிய நூல்களும் கண்காட்சியில் இடம்பெறச் செய்யப்பட்டன. இந்தி, ஆங்கிலம், மாநில மொழிகளில் வெளியாகி இருக்கும் தற்காலத்திற்குப் பொருத்தமாக உள்ள குழந்தைகளுக்கான நூல்களும் கண்காட்சியில் இருந்தன. நூல் வெளியீட்டுப்பிரிவின் மின்நூலகப்பிரிவைப் பற்றி பார்வையாளர்கள் அறிந்துகொள்வதற்காக ஆயிரத்திற்கும் அதிகமான மின்நூல்கள் ekiosk இல் வைக்கப்பட்டிருந்தன.



**நூல் வெளியீட்டுப்பிரிவு அரங்கில் பார்வையாளர்கள்**